
1465

The "BHARATI" Reg. No. M. 2456,

ஜூன்-ஜூலை 1929.




OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5- SEP 1929
MADRAS
DIGITIZED

மாலை 1. [illegible]6-7.

ஒரு தேசிய

# மாதப் பத்திரிகை.

ந. [illegible]சுவாமி,
அதிபர்.

பிரசுராலயம்:
[illegible],
மதுரை ஜில்லா.

JL
m211,N298H
N29.1.6-7
198514

# 'பாரதி'யின் போஷகர்கள்.

1. Messrs. மச்சா முனுஸ்வாமி செட்டியார் & பிரதர்ஸ், சென்னை.

2. ஸ்ரீமான் நாகையஸ்வாமி அவர்கள், மானேஜர், தேவாரம் ஜமீன், தேவாரம்.

3. ,, T. A. K. அழகர் ராஜா அவர்கள், சொந்தக்காரர், மஹேஸ்வரி விலாஸ் ராஜா எஸ்டேட், தேவாரம்.

4. ,, C. சங்கரலிங்கம் அவர்கள், சொந்தக்காரர், ஆனந்த விலாஸ் எஸ்டேட், தேவாரம்.

5. ,, சி. ராமலிங்கம் செட்டியார் அவர்கள், மிராஸ்தார், தேவாரம்

6. ,, S. ராமலிங்கம் செட்டியார் அவர்கள், மிராஸ்தார், கூடலூர்.

7. ,, ப. ச. வேணுச்சாமி அவர்கள், ஜவுளி வியாபாரம், கூடலூர்.

8. ,, V. S. சுப்ரமண்யம் அவர்கள், மிராஸ்தார், சித்தயங்கோட்டை.

9. ,, பெயர் தெரிவிக்க இஷ்டமில்லாதவர்.

10. ,, ஜான் அந்தோனி ஆஜூ அவர்கள், பைசன் வாலி, தேவிகுளம், திருவாங்கூர்.



# போஷகர்கள்.

(தொடர்ச்சி.)

11. ஸ்ரீமான் T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்கள், ஜமீன்தார் & முனிசிபல் சேர்மன், போடிநாயக்கனூர்.

12. ,, உ. ம. சே. முகியித்தீன் பிள்ளை ராவுத்தர் அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd., கோம்பை.

13. ,, ந. ராமராஜ் அவர்கள், மிராஸ்தார், தேவாரம்.


குறிப்பு:— போஷக சந்தா குறைந்தது ரூபாய் 100.

---

# விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| பக்கம் 1-க்கு | மாதம் 1-க்கு | ரூ. | 10—0—0 |
| ,, ½-க்கு | ,, | ,, | 5—8—0 |
| ,, ¼-க்கு | ,, | ,, | 3—0—0 |

¼ பக்கத்திற்குக் குறைந்த விளம்பரங்களை அனுமதிப்பதில்லை. விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன் பணம் அனுப்பவேண்டும். நீண்ட காலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.



படங்களுடன் வெளிவந்துலாவும் தேசிய மாஸிகை.

## பொருள் அடக்கம்.


தொடர் நிர். பக்கம்.

1. "பாரதி" சப்பாணி—ஜனப் K. அப்துல் சுகூர் அவர்கள் ... 401
2. "பாரதி" திருப்பள்ளி யெழுச்சி—ஜனப் **P. S. M. E.** முகம்மது யாக்கூபு சாகிப் அவர்கள் ... 403
3. தமிழரும் "பாரதி"ப் பத்திரிகையும்-ஆசிரியர், "பாரதி" 405
4. இங்கிலாந்தில் தொழிற் கல்வி— ஸ்ரீமாந் **M.** கிருஷ்ண பாரதி அவர்கள், **M. A., B. L.** 410
5. பர்மாவில் வாழும் தமிழ் மக்கள்— ஸ்ரீமாந் கு. கோ. கிருஷ்ணன் அவர்கள், **B. Sc., (Hons.)** 420
6. நமக்கு ஏன் சுயராஜ்யம் வேண்டும்?— ஸ்ரீமாந் முனகால **S.** பட்டாபிராமய்யர் அவர்கள் ... 430
7. ஆரம்ப ஆசிரியர்கள் சங்கம்—ஆசிரியர், "பாரதி" ... 452
8. பெண்மை—பண்டிதை திரு. அசலாம்பிகை அம்மையார் 464
9. டாக்டர் சுதீந்திரபோஸ்—ஸ்ரீமாந் என். வேங்கடரமணன் அவர்கள் ... 468
10. "பாரதி"யைப்பற்றி-ஸ்ரீமாந் பா. ஆதிமூர்த்தி அவர்கள் 473
11. பர்மாப் பிரிவினை—ஸ்ரீமாந் கு. கோ. கிருஷ்ணன் அவர்கள், **B. Sc., (Hons)** ... 474
12. ஹரி கோவிந்த கோவில்— ... ... 483

# பாரதி

ஒரு மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓர்இனம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர். (பாரதி.)

ஆசிரியர் : ரா. நாராயணஸ்வாமி.

| | | |
|---|---|---|
| மாலை 1 | உத்தமபாளையம் 1929-ஞு ஜூன்மீ | மணி 6 |

THE REGISTRAR ... SEP 1929 ... MADRAS

## 'பாரதி' சப்பாணி.

### ஜனப் K. அப்துல்சுகூர் அவர்கள்.

விஞ்சும் பல்புகழ் சூழும் புவியினில் வேறுள மொழிகளெலாம்
  வீழ்ந்து நசித்திட என்றென்றும் ஒரு வீறு படைத்திலகும்
மஞ்சும் பாவிடு சீர்த்தி மிகுந்திள மைப்பொருளாயென்றும்
  மாறு தொளிரு பாம் பொருளென்ன மகிழ்ந்திடு தொன்மையதாய்
எஞ்ச விலாக் குழவிப் பருவத்தால் இமயங் குமரிமுதல்
  இனிமைப் பெயரான் மருவித்திசை திசை இசைதரு பாவாணர்
கொஞ்சும் தமிழ்மொழி வாழ்கவெனத் தினங் கொட்டுக சப்பாணி
  கோலவிழிக் கருணைக் குயில் "பாரதி" கொட்டுக சப்பாணி 1.

கண்டொடு நற்றேன் கொண்டிலகு மைங் காப்பிய நூல்களினுங்
  கருத்தும் பகைலை நிறை கருவூலக் கவிவாணர் மாட்டும்

198514



பண்டும் இன்றும் நின்றிலகும் புகழ் பாரத தேசத்தும்
பாடுங் குழவிகள் மழலையி லன்னோர் பயிலு மிடங்களிலும்
எண்டிசையும் புகழ் மாதர் மிழற்றும் இக்கெனு மொழியுள்ளும்
இருந்து மகிழ்ந்து குலாவி நிறைந்து இலங்கு பெரும்புகழ்சீர்
கொண்ட பழந்தமிழ் வாழ்கவெனத் தினங் கொட்டுக சப்பாணி
கோலவிழிக் கருணைக் குயில் "பாரதி" கொட்டுக சப்பாணி. 2

எங்கும் வழங்கிடு பற்பல மொழிகளில் எங்கள் தாய்மொழிபோல்
யாண்டுங் கண்டிலம் யாண்டுங் கேட்டிலம் யாண்டு மினிக்காணேந்
தங்கும் புகழ்தரு தாயை மறப்பது தமிழர் தனக்கழகோ
சரியல விழிமின் எழுமின் தொழுமின் தாயின் துயர்தீரச்
சங்கு தவழ் மதுரைப்பதி தங்கித் தகவோர் வாழ்ந்திடநூல்
சாரும் அகமுள சேரன் செம்பியன் தகுபுன னுடன்வளர்
கொங்கு கமழ்ந் திலகுந் தமிழ்வாழக் கொட்டுக சப்பாணி
கோலவிழிக் கருணைக் குயில 'பாரதி" கொட்டுக சப்பாணி. 3

நிலவு மறைந்தது கதிரு மெழுந்தது நீலத் திரைநாப்பண்
நித்தில மென்முகை பெற்றுள தாமரை நெகிழ விழுந்தோல்
பலதிரை யறுகால் உண்டு களித்தே பாடும் இசைகாணீர்!
பாரத மக்காள் இன்னுந் துயிலுறல் படியிது மக்கழகோ?
உலவும் பலகலை நாடுகள் முற்றும் ஓங்க விளிச்செய்தே
உண்மைத் தாயரி யாசன முற்றே ஒளிருந் தகைகாணக்
குலவுந் தமிழ்மொழி வாழ்க வெனத் தினங் கொட்டுக சப்பாணி
கோலவிழிக் கருணைக் குயில் "பாரதி" கொட்டுக சப்பாணி. 4

பெற்ற பெருஞ்சீ ருற்றிடு மக்கள் பேசும் மொழியென்றே
பீடார் புகழும் பெட்பும் மற்றும் பெற்றுள மொழியென்றே
உற்ற மனத்துட னற்றவர் நித்தம் ஓதும் மொழியென்றே
உண்மைக் கலைகளொ டறிவுச் சுடர்மன மோங்கும் மொழியென்றே
நற்றவர் நித்தஞ் சொலுமொழி பாரத நாயகி மொழியென்றே
நாடறியத் தின நின்னை முகிழ்த்தே நானில மதிலென்றுங்
கொற்றத் தமிழ்மொழி வாழ்க வெனத் தினங் கொட்டுக சப்பாணி
கோலவிழிக் கருணைக் குயில் "பாரதி" கொட்டுக சப்பாணி. 5



# பாரதி திருப்பள்ளி யெழுச்சி.

ஜனப் **P. S. M. E.** முகம்மது யாக்கூபு சாகிப் அவர்கள்

நேரசைச் சந்தக் கட்டளைக் கலித்துறை.

பொங்குமலைக்கட லில்லெழுந் தான்புவ னம்முழுதுந்
தங்குமி ருட்பட லத்தையொ றுத்துத னிக்கதிரோன்;
கொங்குமி ழுந்தமி ழிற்பண்சொ லிக்கரங் கூப்பினமா;
லெங்குமி சைத்திடு பாரதி! பள்ளியெ ழுந்தருளே. 1.

விண்டரு மீனின மெங்கு மறைந்த; விளங்கறிவோ
டொண்டரு நல்லபு கழ்க்கதி ரிங்கனு தித்ததுவான்;
மண்டரு தான்மன்ம டிந்துறு மெங்கள்ம னங்குளிர
எண்டரு மாவனே! பாரதி! பள்ளியெ ழுந்தருளே. 2.

மண்டிசை யெங்குமகிழ்வொடு கூவின; மாண்புறுநன்
மண்டிசை பாடியங் கோழியி னங்கள்; வளம்பொருவும்
பண்டிசை மேவுப ஞால்கலை யீந்தனை! பாதகரு
ளெண்டிசை யிற்புகழ் பாரதி! பள்ளியெ ழுந்தருளே. 3.

மாதமி லார்மன மொக்கவெ ளுத்தது வெண்கிழக்கே;
வேதமி குத்தவ னும்பெரி யோர்கள்வி ளம்பினராற்
பேதமி கந்தவ ருட்பொலி யுந்தனிப் பேர்விழியாய்!
ஏதமி லாதநற் பாரதி! பள்ளியெ ழுந்தருளே. 4.

புள்ளின மெங்குமி சைத்தன பூந்தவைப்புசித்தே;
கள்ளின மோடெழின் மஞ்ஞைக ளாடின; நாங்களெலா
முள்ளின நின்றனை ருபபத பங்கய முட்பயமே
யெள்ளின மானல பாரதி! பள்ளியெ ழுந்தருளே! 5.

சங்கமு ழங்கின வெங்கணும்; நற்பிர சம்பொலியும்
பங்கமி சைப்பது மங்கள்வி ரிந்தன; பானலங்கள்
துங்கம றச்சிறி யோர்மன மென்னச்சு ருங்கினவா
லெங்கள்த னிப்பெரும் பாரதி! பள்ளியெ ழுந்தருளே. 6.

மான்றனை மேவிடு மாமதி யின்முக மாதருங்
கான்றனை யார்குவ ளைக்கண்வி ழித்துக்க ளித்தனரால்
"நான்"றனை நீக்கிய மாதவர் போற்றிடு நங்கையினாய்!
ஈன்றனை யேவெமை! பாரதி! பள்ளியெ ழுந்தருளே. 7.

ஈண்டிய யெண்ணசு தந்தர நாத மெழுந்ததுவால்
வேண்டிய மந்தவ ருதநன் மாவழி மேவிடயாம்
வேண்டிய யாவும ளித்திடு கற்பக மேயனையாய்
ஈண்டிய மாபுகழ் பாரதி! பள்ளியெ ழுந்தருளே. 8.

முச்சக முஞ்சொல வாழ்ந்தநன் கெங்களை மோசமுற
விச்சக மேசொலி யேழ்மையில் வீழ்த்திய வீனர்களா
நச்சக மேகொளு நெஞ்சக வஞ்சகர் நாசமுற
வெச்சக மும்புகழ் பாரதி! பள்ளியெ ழுந்தருளே. 9.

நாகைமி கும்மக வேயழைத் தாலரு நல்லனையே
பாகைமி கைப்படு மின்மொழி யன்னை! பாராமை நன்றோ?
ஓகைமி ளிர்ந்திட வாழிய! வாழி!ப லூழிவரை
யீகைமி குத்திடு பாரதி! பள்ளியெ ழுந்தருளே. 10.





# தமிழரும் 'பாரதி'ப் பத்திரிகையும்.

திரு. ரா. நாராயணஸ்வாமி அவர்கள்,

ஆசிரியர், 'பாரதி."




கன்னித் தண்டமிழ் தவத்தாய் நாடு பலவகைப் பண்டைப் பெருமைகளை உடையது என்று நாம் பெருமைகொள்கிறோம். முன்னோர்களை நினைத்துப் பெருமைகொள்வதில் நமக்கு ஒருவித ஊக்கமும் தைரியமுமுண்டாகிறது. இதை உணர்ந்தல்லவோ தேசியப் பெரும் புலவர் பாரதியார் "எங்கள் தந்தையர் நாடென்ற போதினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" என்று ஆவேசத்துடன் பாடியிருக்கிறார். நமது புராதன நாகரீகங்களைப் போற்றிப் போற்றி எத்தனையோ பேர் எழுதி எழுதி எத்தனையோ காலன் மசியையும் எத்தனையோ பேல் காகிதத்தையும் செலவழித்திருக்கிறார்கள். நாமும் பழைய பல்லவியை அனுபல்லவியுடன் பழையபடி பாடுவதில் பயனென்ன உண்டாகப்போகிறது? நமது முன்னோர்கள் எப்படி யிருந்தார்கள்? நாம் எப்படி யிருக்கிறோம்? என்று கவனித்துப் பாருங்கள். நமது தாழ்ந்த தன்மை நமக்கு நன்றாகத் தெரியும். நமது நாடு க்ஷேமமடைவதற்கு வழியென்ன? என்று தீர்க்காலோசனை செய்து, தேசாபிவிருத்தியில் ஈடுபட்டு உழைப்பவர்கள், நம்மில் சிலரே யிருக்கிறார்கள். "நாம் ஏதோ படித்துவிட்டோம்; நமக்கும் சாப்பாட்டிற்கு இருக்கிறது; நம்முடைய அறிவையும் ஆற்றலையும் நமது குடும்ப முன்னேற்றத்திற்கு உபயோகப்படுத்தினால் போதும்; சாகும் பொழுது என்ன கொண்டுபோகிறோம்" என்று குறுகிய மூட எண்ணங்கொண்டு சுய நலக் கடலில் மூழ்கிக்கிடப்பவர்கள் நம்மில் அநேகர் இருப்பதால்தான், நாடு இக் நிலையில் இருக்கிறது. விரிக்கில்

இது பெரிய புராணமாக முடியும். பூமாலை வாங்கும் தலைவர்கள், பேச்சுத் தலைவர்கள், மகாநாட்டுத் தலைவர்கள் இப்பொழுது நாட்டில் நிறைந்திருக்கிறார்கள். உறுதியான உழைப்பிற்கு எங்கோ சிலர் இருக்கிறார்கள்.

தேவி பாரதி செய்த அருந்தவப்பயனாலும் காலத்தின் மாறுபாட்டாலும் தேசத்தில் ஒருவித தேசீய உணர்ச்சி தோன்றியிருக்கிறது; தேசிய விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதை நாம் போற்றி விருத்தி செய்யவேண்டும். அடிமையில் அழுந்திக் கிடக்கும் நம்மை ஊக்குவதற்குப் பத்திரிகைகளே பெருஞ் சாதனமென்பது அனுபவத்தில் காணும் மறுக்கொணா உண்மையாகும்.

தமிழ் நாட்டைப்பற்றி மட்டும் எடுத்துக்கொள்வோம். தமிழர்களில் எத்தனைபேர் பத்திரிகைகளை ஆதரிக்கத் தகுதியுள்ளோர் இருக்கிறார்கள்? அவர்களில் எத்தனை பேருக்குப் பாஷாபிமானம் இருக்கின்றது? “தமிழ் எனக்கு நன்றாய்த் தெரியாது; எனக்கு தமிழில் எழுதுவதற்குக்கூட நன்றாய்த் தெரியாது” என்று சொல்லிக்கொள்ளும் துரைமார்கள் நம்மில் அநேகர் இருக்கிறார்கள். வெள்ளையர் நாடுகளும், ஜப்பானும் சுய பாஷாபிமானங் கொண்டு பத்திரிகைகளைப் பின்பற்றியே தீவிர முன்னேற்றமடைந்து கொண்டிருக்கின்றன. இதனைக் கவனிக்காது ஆங்கில நாகரீகத்தில் மயங்கிக் கிடக்கின்ற தமிழர்களும் பத்திரிகையின் பயனை உணராது உழலும் தமிழ் மக்களும் தமிழ் பத்திரிகைகளை ஆதரிக்க அதி சீக்கிரத்தில் முடிவரவேண்டும். பாஷாபிமானம் இல்லையென்றால் தேசாபிமானம் ஏது?

இதுகாறும் தமிழ் மக்களது பத்திரிகை உணர்ச்சியை உரைத்தோம். நாட்டின் நானாவித அபிவிருத்திகளைக் கோரி சொற்ப சந்தாவில் உயர்தரத்தில் இதுவரைக்கும் வெளிவந்திருக்கும் தமிழ் மாதப் பத்திரிகைகள் சென்றிரா நூதன முறையில் வெளிவரும் நமது “பாரதி”யைத் தமிழ் மக்கள் எவ்வளவு தூரம் ஆதரித்து வருகிறார்கள்? என்பதை அறிந்த உண்மைத் தேசாபிமானிகளும் பாஷாபி



மானிகளும் பயந்து வருந்துவார்கள். தமிழ் நாட்டில் பல கட்சிகளைச் சேர்ந்த எல்லாப் பத்திரிகைகளாலும் பல கட்சி அறிஞர்களாலும் நல்ல அபிப்பிராயங்கள் கூறப்பட்டதும் “தமிழ் நாட்டு மாடன் ரேவியூ” என்று சில பத்திரிகைகளால் புகழப்பட்டதுமான “பாரதி”யை, ஆங்கிலப் பத்திரிகைகளை ஆவலுடன் ஆதரிக்கும் தமிழ்த் துரைகள் ஆதரிக்காது நின்றது நூதனமல்ல. ஆனால், தமிழ் நாட்டுத் தேசாபிமானிகள் “பாரதி”யை இன்னும் தக்கபடி ஆதரிக்க முன்வரவில்லையேயென்று வருந்துகிறோம்.

> “பாரதி” பார்க்கப் பார்க்க அழகாயும் படிக்கப் படிக்க இனிமையாயும் எண்ண எண்ண உற்சாகம் உண்டாவதாயும் இருக்கிறது. எனக்கு அநேக ஆங்கிலப் பத்திரிகைகள் வருகின்றனவாகையால் தங்கள் பத்திரிகையைத் தயவு செய்து அனுப்பவேண்டாம்”

என்று பெரிய பிரபல வக்கீலும் சட்டசபை மெம்பரும் எல்லாப் பொருளையும் பொதுநலத்திற்குத் தத்தம் செய்துவிட்டதாகப் பறைசாற்றிக் கர்ணன் என்று பட்டம் பெற்ற ஒருவர் எமக்கு எழுதியிருக்கிறார். இதுமாதிரி தமிழ் நாட்டில் “பாரதி” விஷயத்தில் பலர் நடந்து கொண்டார்கள். இதற்கெல்லாம் காரணம் தமிழ் மக்களிடம் பாஷாபிமானமும் தேசாபிமானமும் இன்மையே.

நகரங்களில் வசிக்கும் தேசாபிமானிகள் “பாரதி”யை இன்னும் கவனிக்கவில்லை. அந்தஸ்து வாய்ந்தவர்களில் சிலரும் நடுநிலையில் உள்ளோர்ப் பலரும் ஏழை மக்களில் அநேகரும் ‘பாரதி’யை ஆதரிக்க முன்வந்திருக்கிறார்கள்.

> “தமிழ் நாட்டிலே பணம் பறிப்பதையே நோக்கமாகக் கொண்டு பிரசுரிக்கப்படும் பல மாதச்சஞ்சிகைகளை நான் அறிவேன். இவைகளின் நடுவே தேசீயத்தைத் தெய்வமாகக் கருதி, “பாரதி”யைப் போல் ஒரு சஞ்சிகையை நடத்த எத்தனைக் கஷ்டங்கள் தோன்றுமென்பது அறிஞர்கள் அறிந்த விஷயம். தாங்கள் “பாரதி”யின் வழியாகச் செய்யும் தொண்டைத் தமிழ் நாடு ஒருபொழுதும் மறவாது”

என்று ஒரு நண்பர் பம்பாயிலிருந்து எழுதுகிறார்.

"என்று தமிழகத்திலுள்ள ஒவ்வொரு தமிழ் மகன் கையிலும் ஒவ்வொரு தமிழணங்கு கையிலும், தங்கள் "பாரதி"ப் பத்திரிகைப் பிரகாசிக்கின்றதோ, அன்றே என்ஜென்மபூமி விடுதலை அடையும் காலம். அதுவே எனது பிரார்த்தனை. தங்கள் மாசிகை ஒவ்வொரு தமிழனுள்ளத்திலும் புகுந்து வீர ரசத்தை உண்டாக்குமென்பதற் கையமில்லை; மீண்டும் தமிழகத்தில் வீரத்திற் சிறந்த நெப்போலியனைப் போன்று, பொறுமையிற் சிறந்த புத்தரைப் போன்று அநேகரை உண்டாக்குமென்று சொல்லத் தேவையில்லை"

என்று இன்னும் ஒரு நண்பர் எழுதுகிறார். இது போன்ற பல நேயர்களுடைய பல கடிதங்கள் நமக்கு உற்சாகமளிக்கா விட்டால், இவ் வேலையே மிகமிகக் கஷ்டமாயிருக்கும்.

சகோதர சகோதரிகளே! "பாரதி"யைத் தேசமுன்னேற்றத்தைக் கருதி வெளியிடுகிறோம் என்பதைத் தாங்கள் நன்கு அறிவீர்கள். இப் பத்திரிகையைத் தமிழ் நாட்டு வாலிப மணிகளுக்கும் யௌவன வனிதா ரத்னங்களுக்கும் அர்ப்பணம் செய்திருக்கிறோம். ஜாதி மதம் கட்சி முதலிய பேதமின்றி வெளிவரும் இம் மாசிகையைத் தமிழ் மக்கள் அனைவரும் ஆதரிக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள். வாலிப ஆண் மக்களுக்கும் பெண் மக்களுக்கும் இது உரிமைப் பத்திரிகையாகையால் இதன் அபிவிருத்திக்காக அதிகமாக உழைக்க வேண்டுகிறோம். ஒவ்வொரு படித்த யௌவன ஆண் மகனும் வாலிபப் பெண் மகளும் சந்தாதாரராகச் சேர்ந்து, "பாரதி"யின் அஸ்திவாரம் வாலிப உணர்ச்சியால் ஆக்கப்பட்டதென்பதைக் காட்ட வேண்டுகிறோம். "பாரதி"க்குச் செய்யும் தொண்டு தேவி பாரதிக்குச் செய்வதாகும்.

சகோதர சகோதரிகளே! உங்களில் சுதந்திரப் பிரகாசம் உண்டாகி, உங்கள் வீடுகளில் சுதந்திர ஒளி வீசி, உங்கள் நாட்டில் சுதந்திர ஜோதி பகீர் பகீர் என்று எரிய வேண்டுமானால், உண்மைப் பத்திரிகைகளை ஆதரியுங்கள். நாட்டின் விடுதலைக்காகவும் சமத்துவத்திற்காகவும் சகோதரத்திற்காகவும் பாஷாபிவிருத்திக்காகவும் வீர முழக்கம் செய்துகொண்டு அமிர்த மொழிகள் புகலும் அருமை



"பாரதி"க்கு அவசியம் ஆதரவு கொடுங்கள். தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் அயல் நாடுகளிலுள்ள ஒவ்வொரு தமிழரகத்திலும் "பாரதி" உலாவல் வேண்டும் "பாரதி"க்குப் பல்லாயிரக் கணக்காகச் சந்தாதாரர்களாய்ச் சேருங்கள். உங்களது உறுதியான ஊக்கத்தால் உங்கள் "பாரதி"ப் பத்திரிகை மென்மேலும் விருத்தியாகி இறைவனருளால் நாட்டிற்கும் மொழிக்கும் நன்கு உழைக்கும்படி செய்யுங்கள். ஊக்கம் கொடுப்பது உங்கள் வேலை; உழைப்பது "பாரதி"யின் வேலை. "பாரதி"யை உங்களது உரிமைப் பத்திரிகையாக்குவது உங்கள் வேலை; "பாரதி" தமிழகத்துத் தனிப் பெரும் பத்திரிகையாவது "பாரதி"யின் வேலை.

தமிழ்த் திரு நாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
அமிழ்தில் இனியதடி பாப்பா—எங்கள்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா
செல்வம் நிறைந்த ஹிந்துஸ்தானம்—அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா.

வேதமுடைய திந்த நாடு—நல்ல
வீரர் பிறந்த திந்த நாடு
சேதமில்லாத ஹிந்துஸ்தானம்—இதைத்
தெய்வமென்று கும்பிடடி பாப்பா.

(பாரதி.)



# இங்கிலாந்தில் தொழிற் கல்வி.

ஸ்ரீமாந் *M.* கிருஷ்ண பாரதி அவர்கள், * M. A, B L.

நம் தேசத்தில் இயற்கைப் பொருள்கள் ஏராளமாயிருந்தாலும், அவற்றி லிருந்து தயாராகும் செயற்கைப் பொருள்களுக்கு அன்னிய தேசங்களையே நாடுகிறோம். நம் தேசத்தில் கல்விச் சாலைகளிலிருந்து ஆயிரக் கணக்காக நம்மவர் தேர்ந்து வந்தாலும், புதுமுறைகளில் தொழில்களை நடத்தச் சக்தியற்று வேலையின்றி அலைந்துகொண்டும் கேவலமான சம்பளங்களில் அமர்ந்துகொண்டு மிருக்கிறார்கள். இதற்குக் காரணமென்ன? இங்கிலாந்து முதலிய மேல் நாடுகளைக் கவனித்தால் இதன் உண்மை விளங்கும்.



இங்கிலாந்து முதலிய மேல் நாடுகளில் தொழிற்கல்விக்கு வேண்டிய சாதனங்கள் இருக்கின்றன. ஜனங்கள் தொழில் கற்பதற்குத் தொழிற் கல்விச் சாலைகள் ஏற்படுத்துவது சர்க்காருடையவும் பொது ஸ்தாபன அதிகாரிகளுடையவும் பொறுப்பா யிருக்கிறது. சர்வ கலாசாலைகளிலும், சர்க்கார் அல்லது முனிசிபாலிட்டி ஏற்படுத்தியிருக்கும் கலாசாலைகளிலும் பல தொழில்கள் கற்பிக்கப்படுகின்றன. லண்டன், மான்செஸ்ட்டர் முதலிய நகரங்களில் எந்தக் கைத்தொழிலும் கற்பதற்குக் கலாசாலைகள் இருக்கின்றன. மான்செஸ்ட்டரில், நூல் நூற்பது, துணி நெய்வது, இயந்

* சென்னை அட்வோகேட் ஸ்ரீமாந் கிருஷ்ணபாரதி யவர்கள் தனது மேல்நாட்டுப் பிரயாணத்திற்குத் தயாராகிக் கொண்டிருக்கையில் அவர் எமக்கு ஐரோப்பாவில் என்ன செய்யவேண்டுமென்று எழுதிக்கேட்ட பொழுது, "பாரதி"ப் பத்திரிகைக்கு வியாசங்கள் எழுதும்பொருட்டுப் பல முக்கிய விஷயங்களைக் கவனித்துக்கொண்டு வருமாறு கேட்டுக்கொண்டோம். லண்டன் மாநகர் சென்று, ஐரோப்பாக் கண்டத்தில் பிரயாணம் செய்து திரும்பி வந்த இவர், நமது அன்பான வேண்டுகோளின்படி இந்தக் கட்டுரையை அனுப்பியிருக்கிறார். ஊக்கமும் உற்சாகமுமுள்ள இவரது பேனா முனையிலிருந்து பயனுள்ள பல கட்டுரைகளை நாம் எதிர்பார்க்கிறோம். இவரது எழுத்துக்களால் தமிழ் நாட்டுக்குத் தொண்டு செய்வாரென்று நம்புகிறோம்.

அயல் நாடுகளில் யாத்திரை செய்து வந்தவர்களால் தமிழில் எழுதப்பெற்று பல தேசத்து முறைகளைக் கூறும் வியாசங்கள், புஸ்தகங்கள் நமது தமிழ்த் தேசத்தின் அபிவிருத்திக்கு இப்பொழுது அவசியமாயிருக்கிறது. ஆங்கிலம் அறிந்த தமிழர்கள் தங்கள் அனுபவங்களைப் பற்றியும் அபிப்பிராயங்களைப் பற்றியும் தமிழில் எழுதுவது கிடையாது; தமிழில் எழுதுவதும் கேவலம் என்று நினைக்கிறார்கள். இவர்களது தப்பான எண்ணம் எவ்வளவு கேவலம் என்று இவர்கள் எண்ணுவதில்லை. இவர்கள்தான் தமிழை இவ்வாறு அகௌரவப்படுத்தி விட்டவர்கள். சிலர் ஆங்கிலத்திலேயே தங்கள் எண்ணங்களை எண்ணுவதால், அவர்கள் தமிழில் எழுதமுடிவதில்லை. ஆனால் தமிழ் மட்டும் அறிந்தவர்கள் மேல்நாடுகளுக்குச் செல்வதில்லை. தமிழ் மட்டும் கற்ற ஒருவர் இருவர் எங்கோ பரநாடுகளுக்குச் சென்றாலும் அவர்களுக்குப் போதியபடித் தமிழ் பாஷா ஞானம் இருப்பதில்லை. பல தமிழ்ப் பண்டிதர்களுக்குப் பாஷாஞானம் உண்டே யொழிய, விஷயங்களை ஊடுருவித் தருவிப்பார்க்கும் பொது அறிவு கிடையாது; பொது ஆராய்ச்சியில் ஆசையும் ஆற்றலும் கிடையாது.

தங்களது மேல் நாட்டு யாத்திரைகளைப் பற்றி ஒருவரும் இதுவரை தமிழில் எழுதவே கிடையாது. அயல் நாடுகளின் நாகரீகங்கள், அரசாங்கங்கள், அமைப்புக்கள், அபிவிருத்திகள், கல்வி, கைத்தொழில் முதலியவைகளில் முன்னேற்றங்கள், அவைகளின் அபிவிருத்திக்குரிய காரணங்கள் முதலானவைகளைப் பற்றித் தமிழில் அநேக புஸ்தகங்கள் தேவை. ஆங்கிலம் படித்து வேறுநாடுகளுக்குச் சென்று திரும்பியவர்களும், அயல் நாடுகளில் வசிக்கும் கற்றறிந்த தமிழ் மக்களும், பரதேசங்களில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் தமிழகத்து மாணவர்களும், பற்பல தேசங்களுக்கு வியாபாரத்தின் பொருட்டு அடிக்கடி சென்று திரும்புகிறவர்களும் இதைக் கவனித்து முன்வந்து அன்னிய நாடுகளைப் பற்றித் தமிழில் அநேக நூற்கள் எழுதி, தமிழ் நாட்டின் இக் குறையை நிவர்த்தி செய்து, தமிழ்ப் புஸ்தகப் பொக்கிஷத்திற்கு உதவி செய்வார்களாக. தமிழ் நாடும் தமிழ்ப் பாஷையும் இதை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

ஆசிரியர், "பாரதி."

திரங்கள் செய்வது, இரும்பு வார்ப்படம் முதலியன விசேஷ தொழில்களானபடியால் இத் தொழில்களைத் தொழிலாளிகளுக்குக் கற்பிப்பதற்கு விசேஷமாகக் கலாசாலைகள் இருக்கின்றன. இம்மாதிரி அந்தந்த ஊர்களில் எந்தத் தொழில் நடக்கிறதோ அந்தத் தொழில் கற்பதற்குக் கல்விச்சாலைகள் இருக்கின்றன.

படிப்பவர் சௌகரியத்தை உத்தேசித்துக் கல்விச்சாலைகள் ஊரில் பல பாகங்களிலும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். பகலில் வேலைசெய்து வருபவரும் தொழிற்கல்விச்சாலைகளில் சேர்ந்து கற்பதற்காக இராப் பள்ளிக்கூடங்கள் நடத்தப்படுகின்றன. செலவைக் குறைக்கும் நிமித்தம் பள்ளிக்கூடக் கட்டிடத்திலேயே இராப் பள்ளிக்கூடங்கள் நடத்தப்படுகின்றன. மேற்படி கலாசாலைகளில் பிரவேசப் பரீக்ஷை தொந்தரவு இல்லாமல் சேர்ந்து வாசிக்கலாம். இங்கிலீஷ் எழுதப் படிக்கச் சரியாகத் தெரியாதவர்களுக்கு அங்கேயே தேவையானவளவு கற்பிக்கப்படுகிறது. சாதாரணமாய் தொழிலாளிகள் ஒரு தொழில் கற்க 5 ஷில்லிங் முதல் 10 ஷில்லிங் ($3\frac{1}{2}$ ரூபாய் முதல் 7 ரூபாய்) வரையில்தான் செலவாகும். அவ்வூரில் சாதாரணமாய்க் கூலி செய்பவருக்கு இரண்டு மூன்று பவுன் வாரக்கூலி கிடைக்கிறபோது, இந்தச் செலவு எம்மாத்திரம்! மேலும் அநேக முதலாளிகள் தம்வேலைக்காரர் கல்விச்சாலையில் தொழிற்கல்வி கற்பதற்குச் சம்பளம் கொடுக்கத் தாமே ஏற்றுக்கொள்ளுகிறார்கள். தொழிலாளிகள் ஷை பள்ளிக்கூடங்களுக்குப் போய் வாசித்துவர 'டிராம்', 'ரெயில்' வண்டிகளில் மலிவான டிக்கட்டுகள் கொடுக்கப்படுகின்றன. கல்விச்சாலைகளில் நன்றாய் வாசிப்பவர்களுக்கு இலவசச் சம்பளங்களும், பரிசுகளும் கொடுக்கப்படுகின்றன. கல்விச்சாலைகளில் வாசிப்பவர்களுக்கென்று பள்ளிக்கூடங்களில் சிற்றுண்டிச்சாலைகள் நடத்தப்படுகின்றன. அச் சிற்றுண்டிச்சாலைகளில் குறைந்த விலைக்கு நல்ல பதார்த்தங்கள் விற்கப்படுகின்றன. இக்கல்விச் சாலைகளில் சிறுவர் முதல் பெரியவர் வரையிலும் ஆண் பெண் இருபாலரும் புதிதாகத் தொழிற்கல்வி கற்கிறதன்றி, ஏற்கனவே தொழில் கற்றுத் தொழில் செய்து வருகிறவர்களும் சில நாட்களுக்கொருமுறை கல்விச்சாலையில் சேர்ந்து இடையில் பரவிவரும் புதுத்



தொழில் முறைகளைக் கற்றுப்போகிறார்கள். இதனால் வயது சென்றவர்களும்கூட நம் நாட்டைப்போல பழைய இயந்திரங்களையும் முறைகளையும் விடமாட்டேன் என்று சொல்லாமல் புதுப் புது இயந்திரங்களையும் முறைகளையும் பின்பற்றுவதால் அவர்கள் தேசத் தொழில்கள் முன்னடைந்து, நம் நாட்டைப்போன்ற பழைய முறைகளில் அதிகப் பற்றுள்ள தேசங்களைத் தோற்கடிக்கின்றன.

இங்கிலாந்து முதலிய மேல் நாடுகளில் தொழிற்கல்விச்சாலைகளில் தொழிலாளிகள் சேர்ந்து வாசிக்கத் தூண்டுவதற்குப் பல ஏற்பாடுகள் இருக்கின்றன. அநேக ஊர்களில் டிராம், ரயில் வண்டிகளில் தொழிற் கல்விச்சாலைகளில் சேரும்படி விளம்பரங்களைப் பார்க்கலாம். அநேக கலாசாலைகளில் வேலை சம்பாதித்துக் கொடுக்கும் சங்கங்கள் இருக்கின்றன. அச் சங்கத்தில் பெயர் பதிவு செய்துவைத்தால் அச் சங்கத்தார் முயற்சிசெய்து மாணவருக்குக் கல்வி பயிலும்போதும் பிறகும் வேலை சம்பாதித்துக் கொடுக்கிறார்கள். நம் நாட்டிலே பள்ளிக்கூடத்து சிறுவர் பள்ளிக்கூடத்தை விட்டதும் வேலையில் அமரவேண்டுமென்பதைப் பள்ளிக்கூடத்தார் நினைப்பதே இல்லை. இதனாலேயே, நம் நாட்டில் பள்ளிக்கூடங்களைப்பற்றிப் பழைய மாணாக்கர்கள் அக்கறை எடுத்துக்கொள்வதில்லை. இங்கிலாந்திலோ வென்றால் 'கேம்டன் டவுன்' தொழிலாளிகள் கலாசாலை (Camdon Town Workmen's College) முதலியவற்றில் பழைய மாணாக்கர், தாம் கற்ற கல்விச்சாலையில் இலவசத்துக்கு உபாத்திமைத் தொழில் செய்கிறார்கள். இது அவர்கள் நன்றியறிவைக் காட்டுகிறது.

பகல் பள்ளிக்கூடங்கள் இராப் பள்ளிக்கூடங்கள் சர்வ கலாசாலைகள் இவற்றைத் தவிர்த்துத் தொழிற்கல்விக்கு ஏற்ற வேறு சாதனங்களும் அவ்விடம் பல இருக்கின்றன. முதலில் வாசகசாலைகளைச் சொல்லலாம். நம் நாட்டில் எந்த வாசக சாலையிலாவது ஒரு தொழிலாளியைப் பார்க்கமுடியாது. அப்படி ஏதாவது ஒருவனை நாம் பலவந்தமாக அழைத்துச் சென்றாலும், அவன் வாசித்துப் பயன் பெறக்கூடிய புஸ்தகங்களையாவது பத்திரிகைகளையா

வது அங்கே காணமுடியாது. நம்மவருடைய குருட்டு அபிப்பிராயத்தால், நமது நாட்டிலுள்ள வாசகசாலைகளில் வெறும் இலக்கியங்களையே பார்க்கலாம். பெரிய கலாசாலை வாசகசாலைகளிலும், சென்னை சர்வ கலாசாலை புஸ்தகாலயம், கன்னிமாரா லைப்ரரி (Connemara Library) என்ற பொது வாசகசாலையிலும்கூடத் தொழிலாளிகளுக்குப் பிரயோஜனப்படக் கூடிய புஸ்தகங்களையாவது பத்திரிகைகளையாவது காண்பதரிது. இப்படியிருந்தால் நம் சிறுவர்கள் தொழில் கற்கவேண்டுமென்று நினைப்பது எப்படி? நம் தொழிலாளிகள் புதுத் தொழில்முறைகளைக் கையாடுவது எப்படி? இங்கிலாந்திலோ வென்றால் முனிசிபாலிடியாரும் பொது ஜனங்களும் எங்கும் ஏற்படுத்தியிருக்கும் வாசகசாலைகளில் அந்தந்த ஊரில் விசேஷமாக நடத்தப்படும் தொழில் சம்பந்தமான புத்தகங்களும் பத்திரிகைகளும் விசேஷமாக வைக்கப்பட்டிருக்கின்றன. நெசவுத் தொழில் நடக்கும் ஊரில் நெசவுத் தொழிலைப் பற்றிய புஸ்தகங்களும் பத்திரிகைகளும் அதிகமாகப் பார்க்கலாம். தையல் வேலை அதிகமாக நடக்கும் இடத்தில் தையல்வேலை சம்பந்தமான புஸ்தகங்களும் பத்திரிகைகளும் பார்க்கலாம். இப் புஸ்தகசாலைகளும் வாசகசாலைகளும் இலவசமாக வைத்து நடத்தப்படுகின்றன. அநேக இடங்களில் இரவு 9 மணி வரையிலும் வாசிக்கலாம். வீட்டிற்கும் புஸ்தகங்கள் எடுத்துப் போகலாம். புதுப் புஸ்தகங்கள் வந்திருப்பதை ஜனங்கள் அறியும்படி வாசற்படியில் சில நாட்களுக்குத் தனியாக வைக்கப்படுகின்றன. அவ்விடம் வைக்கப்பட்டிருக்கும் புஸ்தகங்களும், பத்திரிகைகளும் எளிய நடையில் சித்திரங்களுடன் இருப்பதால் தொழிலாளிகள் வாசித்துப் பயன் பெறுகிறார்கள். இவர்களுக்குச் சிறு வயதுமுதல் வாசகசாலையில் வாசிக்கும் வழக்கம் உண்டுபண்ணுவதற்கு அவ்விடமே சிறு பிள்ளைகள் வாசிப்பதற்கென்று சிறு நாற்காலிகள் போடப்பட்டு சிறுவர்களுக்கேற்ற புஸ்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இதனால் வயது வித்தியாசமின்றி அங்கு அனைவரும் வாசித்து வருகிறார்கள்.



வாசக சாலைகளில் அடிக்கடி பிரசங்கங்கள் நடைபெறுகின்றன. மேஜிக் லான்டர்ன் (Magic lantern) என்ற படங்களுடன் பிரசங்கங்கள் நடைபெறுவதால், சிறுவர்களும் பெரியவர்களும் கேட்டுப் பயன் பெறுகிறார்கள். வாசகசாலைகளில் படிப்பதற்கு மாத்திரம் புஸ்தகங்களும் பத்திரிகைகளும வைக்கப்பட்டிருந்தால், தொழிலாளிகளுக்கு ஊக்கம் வராது. தொழிற் சாலைகளில் பகல் முழுவதும் வேலைசெய்து களைத்து வருகிறவர்களுக்கு மனதுக்கும் உடம்புக்கும் ஓய்வு கொடுப்பதற்கு ஏற்பாடுகள் வேண்டுமல்லவா? தொழிலாளிகள் இருக்குமிடங்களில் உள்ள வாசக சாலைகளில் சதுரங்கம் முதலிய விளையாட்டுக்களை ஆடுவதற்கு மேஜைகளும் கருவிகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கே சில நேரம் பொழுது போக்குகிறார்கள். அங்கேயே சில பாகங்களில் தொழில் முறைகளைப் பற்றியும் ராஜரீக விஷயமாயும் ஒருவருடன் ஒருவர் பேசவும் சமயம் கிடைக்கிறது. நம் தேசத்திலோ வென்றால் தொழிலாளிகள் வேலை செய்துவிட்டு வீட்டுக்கு வந்தால் களைப்பினால் வேறு ஒன்றும் செய்யமுடியாமலிருக்கிறார்கள், அல்லது தெருத் திண்ணையில் உட்கார்ந்து வம்பளந்து கொண்டிருக்கிறார்கள். ஆங்கிலக் கல்வி கற்றவர்கள் இவர்களுடன் சமபாகக் கலந்து இவர்கள் விஷயத்தில் அக்கறை எடுத்துக்கொண்டு இவர்கள் தொழில் முறையில் தேர்ச்சியடைய வழிகாட்டுவதில்லை. தாங்களாவது இவர்களுக்கு வழிகாட்டக்கூடிய நிலைமையிலும் இல்லை. இதனாலேயே நம் தொழிலாளிகள் தொழில் முறைகளை விருத்தி செய்து கொள்ளக்கூடிய நேரங்களை வீணாக்கிக் கொண்டு தம் நிலைமையை மேன்மைப் படுத்திக் கொள்ள வகையின்றித் தேசத் தொழில் முன்னேற்றமடையாததற்குக் காரணமாயிருக்கிறார்கள். நம் தேசத்தில் விளையும் பருத்தியைக் குறைந்த கூலி பெறும் நம் தொழிளாளர்களைக் கொண்டு நூல் துணி தயார் செய்தாலும், இக் காரணத்தாலேயே, இவ்விடமிருந்து செலவுடன் கொண்டு போகப்படும் பருத்தியைக்கொண்டு மேல் நாடுகளில் அதிகக் கூலிகொடுத்துத் தயார்செய்து ரயில் கப்பல் சிப்பந்திச் செலவுகளுடன் நம் நாட்டில் இறக்குமதி செய்யப்படும் நூல் துணிகளுடன் போட்டிபோட முடியாத நிலைமையில் இருக்கிறோம்.

இந்த நிலைமையை மாற்ற வேண்டுமென்று நாம் உணர்ந்து அதற்கு ஏற்ற பரிகாரங்கள் தேடவேண்டாமா?

வாசக சாலைகளைப்போலவே பத்திரிகைகளும் தொழிற் கல்விக்குச் சாதகமாயிருக்கின்றன. பல தொழிலாளிகளுக்கும் பிரயோஜனப் படக்கூடிய பத்திரிகைகள் மேல் நாடுகளில் நடந்து வருகின்றன. நெசவுத் தொழில் நடக்குமிடங்களில் நெசவுத் தொழிலைப் பற்றிய பத்திரிகைகளும், பயாஸ்கோப் படம் செய்யும் தொழிலாளிகளுக்குப் பயாஸ்கோப் தொழில் பத்திரிகையும், இம்மாதிரி ஒவ்வொரு தொழிலைப் பற்றியும் பத்திரிகைகள் நடந்து வருகின்றன. பத்திரிகைச்சந்தாக் குறைவாயிருப்பதாலும் வெறும் கூலிவேலைசெய்பவன்முதல் பத்திரிகை வாங்கி வாசிப்பதாலும் பத்திரிகைகளும் சரியாகச் செலவாவதால் சரியாக நடத்தப்படுகின்றன. பத்திரிகைகளில் நம் நாட்டுப் பத்திரிகைகள் போலல்லாமல் எளிய நடையில் பாமர ஜனங்கள் அறியும்படி அவர்கள் உபயோகிக்கும் பாஷையில் மனதுக்கு இனிமையான முறையில் எழுதப்படுவதன்றி சித்திரப் படங்களுடன் வெளிவருகின்றன. பத்திரிகை சந்தாதாரர்களாயிருப்பவர்களுக்கு ரயிலிலும், தொழிற்சாலைகளிலும அபாயம் நேரிட்டால் அவர்களுக்காவது அவர்கள் வாரிசுகளுக்காவது மரண பண்டிலிருந்து சகாயம் செய்யப்பட்டு வருவதாலும், பல பத்திரிகைகள் தொழிலாளிகளின் முன்னேற்றத்திற்காகவே ஏற்படுத்தப்பட்டு வருவதாலும் மேல் நாடுகளில் இப் பத்திரிகைகள் தொழிலாளிகளிடத்தில் பரவி வருகின்றன. தொழிலாளிகளும் படித்து மேன்மை அடைகிறார்கள். சந்தர்ப்பம் வாய்க்கும்போது தொழிலாளியாயிருப்பவன் தானே முதலாளியாகி தனவந்தனாகிறான். இப்படி இருந்ததினால் தான் சைக்கிள் கம்பெனியில் வேலைக்காரரான (Ford) போர்ட் என்பவர் போர்ட் மோட்டார் என்ற பிரபல மோட்டார் கம்பெனியை வைத்து நடத்தித் தனவந்தனானார்.

தொழிற் கல்வி கற்பதற்கு இங்கிலாந்திலுள்ள மற்றொரு சாதனம் (Museum) "மியூசியம்" அல்லது கண்காட்சி சாலை. நம் நாட்டில் ராஜதானியின் தலைநகரமான மதராஸ் போன்ற பட்டணங்களில்



உள்ள கண்காட்சி சாலைகளில் வேடிக்கை பார்க்க முடிகிறதே ஒழிய கற்றுக்கொள்ள வசதியில்லை இங்கிலாந்து முதலிய மேல் நாடுகளிலோ அப்படியில்லை. இச்சாலைகளில் தொழில்முறைகளைக் கற்றுக்கொள்வதற்கு வேண்டிய சாதனங்கள் இருக்கின்றன. அங்கே காட்சிசாலைகளில் உள்ள விஷயங்களை எடுத்துச் சொல்லத்தக்க மனிதர்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் காட்சி சாலையில் போகிறவர்களுக்கு விஷயங்களை எடுத்துச் சொல்கிறார்கள். மேலும் தினம் ஒரு முறையோ இரு முறையோ குறித்த நேரத்தில் காட்சிசாலையிலுள்ள சாமான்களைக்கொண்டு கற்றறிந்தவர்கள் பிரசங்கம் செய்கிறார்கள். இப் பிரசங்கங்களில் சிலவேலைகள் எவ்விதம் அடைந்தன என்றும் நாம் அறிந்துகொள்ளலாம். இம்மாதிரி ரசாயனம், முதலிய தொழில்களைப் பற்றியும் கண்காட்சி சாலையில் கற்றறியலாம். இம்மாதிரி மியூசியங்கள் லண்டனில் மாத்திரமல்ல 'மான்சஸ்ட்டர்', 'கிளாஸ்கோ', 'எடின்பரோ' முதலான இங்கிலாந்திலுள்ள மற்ற ஊர்களிலும் ஐரோப்பாவிலுள்ள பிரதான பட்டணங்களிலும் இருக்கின்றன. இங்கே போய்ப் பார்ப்பதற்குப் பிரவேசக் கட்டணமில்லை. சாதாரண ஜனங்களும் போய்த் தேவையான விஷயங்களைத் தெரிந்துகொள்ளலாம். மேலும் பள்ளிக்கூடத்துச் சிறுவர்களை உபாத்தியாயர்கள் அழைத்துக் கொண்டு போய் அவ்விடத்திலேயே கற்பிப்பதுமுண்டு. அக்கட்டடங்களிலேயே சில அறைகள் மாணாக்கர்களுக்கென்று வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கே மியூசியம் அதிகாரிகளின் உத்திரவின்பேரில் சாமான்களை வைத்துக்கொண்டு சாவகாசமாய் விஷயங்களை அறிந்துகொள்ளலாம். (South Kensington) சௌத் கென்சிங்டனிலுள்ள சாஸ்திர மியூசியம் மாத்திரம் மிகவும் பெரியது. 70 அறைகளுக்குமேல் உள்ளது. அங்குள்ள சாமான்களைப் பார்க்கச் சில நாட்கள் செல்லும். அங்கே போய்ப் பார்க்கிறவர்களுக்குச் சமீபத்திலேயே சிற்றுண்டிச் சாலையும் இருக்கிறது. இம்மாதிரி மியூசியங்களில் வைக்கப்பட்டிருக்கும் வஸ்துக்களை வெளியிலுள்ள பள்ளிக்கூடத்தார் கேட்டால் சில நாட்களுக்கு ஷை சா

மான்களை கொடுத் துதவுகிறார்கள். இப்படியே மாற்றி மாற்றி மியூசியத்திலுள்ள சாமான்களைப் பெற்றுவந்து பள்ளிக்கூடத்தாரும் அனுகூலமடைகிறார்கள்.

மேல் நாடுகளில் தொழில் அபிவிருத்தியையும் தொழிற் கல்வி அபிவிருத்தியையும், வியாபார விருத்தியையும் உத்தேசித்து அடிக்கடி (Exhibition) என்ற கண்காக்ஷிகள் நடத்துகிறார்கள். அக் காக்ஷிகளில் பயாஸ்கோப் படங்களும் காட்டப்படுகின்றன. கண்காக்ஷி சாலையில் ஒழுங்காக சாமான்கள் வைத்திருப்பதிலிருந்தும் சாமான்களுக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் குறிப்புச் சீட்டுகளிலிருந்தும் சாமான்களைக் குறித்துப் பிரசுரித்திருக்கும் புஸ்தகங்களிலிருந்தும் பல விஷயங்களை எளிதில் கற்றுக்கொள்ளலாம்.

லண்டனில் ஸவுத் கென்சிங்டனில் (South Kensington) உள்ள சாஸ்திர கண்காக்ஷி சாலையில் (Science Museum) தற்காலம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிற பலவித இயந்திரங்கள் விருத்தியடைந்த விதத்தையும் அவற்றை உபயோகிக்கும் விதத்தையும் யாரும் எளிதில் கற்றுக்கொள்ளலாம். பல தொழில்களில் உபயோகிக்கப்படும் இயந்திரங்களையும் அவ்விடம் பார்க்கலாம். ரயில் வண்டிகளில் ஆதியில் கண்டு பிடிக்கப்பட்ட வண்டி முதல் தற்காலம் பல ஊர்களில் உபயோகிக்கப்படும் ரயில் வண்டிகள் உள்பட எல்லா வண்டிகளையும் அவ்விடம் காணலாம். மேலும் இவ் வண்டிகளின் ஒவ்வொரு பாகமும் எவ்விதம் ஓடுகிறது என்று தெளிவாகக் கற்றுக்கொள்ளும் நிமித்தம் தனியாகப் பிரித்து எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. சில வண்டிகள் கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப் பட்டிருக்கும். வண்டியின் மேல் மூடியில் சில பாகங்கள் இல்லாமலிருப்பதால் உள்ளிருக்கும் இயந்திர பாகங்களை நாம் நன்கு பார்க்கலாம். கண்ணாடிப் பெட்டியின் பக்கத்திலுள்ள ஒரு ஆணியை அழுத்தினால் உள்ளே இருக்கும் வண்டி ஓடுவதைப் பார்க்கலாம். இம்மாதிரியே மோட்டார் வண்டி, கப்பல், நீராவி இயந்திரம், தண்ணீர் இறைக்கும் இயந்திரம், அச்சு அடிக்கும் இயந்திரம், மரங்களை அறுக்கும் இயந்திரம், சுரங்கம் போடும்



இயந்திரம், ஆகாயக் கப்பல், இன்னும் பல்விதமான இயந்திரங்களையும் அவைகள் ஓடும் முறையையும் கற்றறிந்துக்கொள்ள இயலும். அவ்வியந்திரங்களையும், காலவளவில் மாறி தற்காலம் இருக்கும் தேர்ச்சி பெற்ற புது மாதிரி இயந்திரங்களையும் நடத்திக் காட்டுவதாலும் அதைப் பார்க்க ஏராளமான ஜனங்கள் கூடுவதால் தொழிற்கல்வி தீவிரமாகப் பரவுகிறது. பல தொழில்களைக் குறித்தும் அங்கங்கே இம்மாதிரி காக்ஷிகள் நடந்துகொண்டே இருக்கும். நான் சென்றிருந்த ஊர்களில் லண்டனில் மோட்டார் காக்ஷி ஒரு பக்கமும் ஸ்திரீகளுக்கு வேண்டிய வீட்டுச் சாமான் காக்ஷி ஒரு பக்கமும், மான்செஸ்டரில் நெசவுத் தொழில் காக்ஷியும், எடின்பரோவில் கொழுத்த மாடுகளின் சந்தையும், பாரிஸில் கப்பல் காக்ஷியும், ஜெர்மன் தேசத்தில் லீப்சிக் என்னும் ஊரில் சைக்கிள் காக்ஷியும் நடந்துகொண்டிருந்தன. (Leipsiz) லீப்சிக் என்னும் ஊரில் கண்காக்ஷி நடப்பதற்கென்றே ஒரு பெரிய மண்டபம் இயற்றி இருக்கிறார்கள். அவ்விடம் ஒன்றன்பின் ஒன்றாகத் தொழில் காக்ஷிகள் நடத்துகிறார்கள். இதற்கு உலகத்திலுள்ள பல தேசங்களிலிருந்து வியாபாரிகள் வந்து போகிறார்கள். தொழிலாளிகள் புது முறைகளைக் கண்டறிகிறார்கள். தொழிலும் முன்னேற்றமடைகிறது. தேசமும் க்ஷேமமடைகிறது.

இம்மாதிரி அன்னிய நாட்டார் பல துறைகளிலும் தொழில் கல்வி தந்து தொழிலாளிகளின் நிலைமையை மேன்மைப் படுத்துவதாலேயே அத் தேசங்கள் செல்வாக்கில் விருத்தியடைந்து வருகின்றன. நாம் அத் தேசங்களை பின்பற்றுவது எக்காலம்?

# பர்மாவில் வாழும் தமிழ் மக்கள்.

ஸ்ரீமாந் கு. கோ. கிருஷ்ணன் அவர்கள், B. Sc., (Hons.)

பர்மா தேசம் நீர் வளத்திலும் நில வளத்திலும் மிகச் சிறப்புற்றோங்கி, பூமா தேவிக்கோர் திலகம் போன்றது. இங்கே மே மீ மத்தியிலிருந்து அக்டோபர் மீ இறுதிவரை மழை ஓய்வின்றிப் பெய்து பூமியைச் செழிப்படையச் செய்கிறது முக்கியமாக தேக்கு மரம், அரிசி, மண்ணெண்ணெய் முதலியவைகளுக்குப் பேர்போனது. இதன் நெடு நீளம் வடக்குந் தெற்குமாக 1,300 மைல்; விரிவான அகலம் 700 மைல். விஸ்தீரணம் 2,33 707 சதுரமைல். இந்தியாவில் அடுத்த படியில் பெரியதாகிய சென்னை இராஜதானியின் விஸ்தீரணம் 1.42,260 சதுர மைல்தான். ஆகலால் பர்மா இந்தியாவில் மிகப் பெரிய பாகம். ஆனால் அதன் ஜனத் தொகையோ 1,32,12,192 தான். விஸ்தீரணத்திற்குத் தகுந்தவாறு ஜனத்தொகை இல்லை.

ஐரோப்பாவிலிருந்து முதலாவதாக 16-வது நூற்றாண்டின் துவக்கத்தில் போர்த்துக்கீயர்கள் பர்மாவில் மார்ட்டபான், சிரியம் என்ற ஊர்களில் வந்திருந்தனர். பிறகு 1610-ல் ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் வந்து சேர்ந்தனர். இந்தியாவில் கவர்னர் ஜெனராலாயிருந்த லார்ட் ஆமர்ஸ்ட் என்பவர் 1824-ம் வருஷத்தில் பர்மாவுக்குப் படையெடுத்து வந்து மதராசிலிருந்து அனுப்பப்பட்ட போர் வீரர்களின் பேருதவியால் அசாம், அரக்கான், தெனாசரீம் முதலிய நாடுகளைச் சுவாதீனமாக்கிக் கொண்டார். 1852-ம் வருடத்தில் லார்ட் டெல்ஹௌஸி வந்து கீழ் பர்மாவைச் சேர்த்துக்



கொண்டார். பர்மிய அரசர்களின் கடைசியான தீபோ காலத்தில் இந்திய வைசிராய் லார்ட் டப்பெரின் (Lord Dufferin) என்பவர் 1885-ல் பர்மா பூராவும் பிரிட்டிஷ் சுவாதீனத்திற்குள்ளாக்கித் தீபோவையும் கைதி செய்து பம்பாய் மாகாணத்திலுள்ள ரத்தினகிரியில் வைத்துக்கொண்டனர்.

பத்துப் பதினொன்றாம் நூற்றாண்டுகளில் சோழ இராஜ்யம் தென்னிந்தியாவில் மிக்க அதிகாரஞ் செலுத்தி வந்தது. அக்காலத்தில் ரோம இராஜ்யத்தோடு (Roman Empire) தீவிர வியாபாரங்களும் நடாத்தி வந்தது. ஏராளமான சண்டைக் கப்பல்களுமிருந்தன 1025-ம் வருஷத்தில் இராஜேந்திரச் சோழன் வங்காளக் குடாக் கடலைக் கடந்து பர்மாவுக்கு வந்து இரங்கூனுக்குச சுமார் 45 மைல் தூரத்திலுள்ள பர்மியத் தலைநகரைக் கைப்பற்றிக் கோட்டையைச் சுற்றியிருந்த நான்கு வாசல்களிலும், தான் இந்தியாவிலிருந்து கொண்டுவந்த மலங் கல்லைத் தன் வெற்றிக் குறிகுறியாக ஸ்தாபித்து, அந்நகருக்கு "டாரய" என்னும் பெயரளித்ததாக பார்ப்போர் மனதைக் கவரும் நம் அருமைத் தென்னிந்திய கல்தூணில் வரைந்திருப்பதை இன்றுங் காணலாம். அந்நகர் இன்று பீகு (Pegu) என்றழைக்கப்படுகிறது. இதனால் சுமார் 900 வருடங்களுக்கு முன்னதாகவே தென்னிந்தியர் பர்மாவுக்கு விஜயஞ் செய்திருப்பதாகத் தெரிகிறதல்லவா! கொஞ்ச காலத்திற்கு முன் இரங்கூனுக்கடுத்த சிரியம் என்ற நகரில் பூமியிலிருந்து (விநாயகர், சுப்ரமண்யர்)? விக்கிரகங்களிரண்டு வெட்டியெடுக்கப்பட்டன. இவைகள் பழமையைக் குறிப்பினும் யாதொரு குறைவும் ஏற்படாமலிருக்கின்றன. இவைகள் எக்காலத்தில் புதைக்கப்பட்டனவென்பது தெரியவில்லை.

இன்று தமிழர்கள் இரங்கூனுக்கு வடக்கே சுமார் 50 மைல் சுற்றளவுக்குள்ளாகவே அதிகமாகக் காணப்படுகின்றனர். தமிழர்கள் பெரும்பாலும் முக்கிய பட்டணங்களிலதிகம். 1921-ம் வருஷக் கணக்குப்படி பர்மாவில் இந்தியர் ஜனத்தொகை 9,48,768. இதில் தமிழர் ஜனத் தொகை பின்வருமாறு:—

தமிழர்கள் மொத்தம் 1,52,064.

| மொத்தம் | | இந்துக்கள் | | மகமதியர்கள் | | கிறிஸ்தவர்கள் | | மற்றவர்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண்கள் | பெண்கள் | ஆண்கள் | பெண்கள் | ஆண்கள் | பெண்கள் | ஆண்கள் | பெண்கள் | ஆண்கள் | பெண்கள் |
| 1,00,315 | 51,749 | 68,192 | 36,761 | 21,328 | 7,196 | 10,146 | 7,591 | 649 | 201 |

தென்னிந்தியாவிலுள்ள முக்கிய ஜில்லாக்களிலிருந்து பர்மாவில் குடியேறியிருக்கும் தமிழர்களின் தொகை பின்வருமாறு:—

தமிழர்கள்

| பிறந்த ஜில்லாக்கள் | ஆண்கள் | | | பெண்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | இந்துக்களும் மற்றவர்களும் | மகமதியர்கள் | மொத்தம் | இந்துக்களும் மற்றவர்களும் | மகமதியர்கள் |
| அனந்தபுரம் | 68 | 57 | 11 | 9 | 8 | 1 |
| செங்கற்பேட்டை | 209 | 191 | 18 | 97 | 92 | 5 |
| கஞ்சம் | 528 | 490 | 38 | 122 | 115 | 7 |
| கோதாவரி | 748 | 650 | 98 | 226 | 202 | 24 |
| குண்டூர் | 286 | 250 | 36 | 38 | 36 | 2 |
| கிருஷ்ணா | 395 | 328 | 67 | 115 | 97 | 18 |
| மதராஸ் | 246 | 245 | 1 | 113 | 93 | 20 |
| மதுரை | 3 122 | 2 377 | 745 | 1.177 | 1,029 | 148 |
| மலையாளம் | 395 | 199 | 196 | 72 | 60 | 12 |
| நெல்லூர் | 112 | 96 | 16 | 44 | 43 | 1 |
| இராமநாதபுரம் | 8.037 | 5,322 | 2,715 | 1,988 | 1,635 | 353 |
| சேலம் | 307 | 219 | 88 | 108 | 96 | 12 |
| தஞ்சாவூர் | 7,596 | 5,433 | 2,163 | 2,277 | 2,103 | 174 |
| திருநெல்வேலி | 2525 | 1046 | 1479 | 458 | 352 | 106 |
| திருச்சினாப்பள்ளி | 803 | 631 | 172 | 271 | 245 | 26 |
| விசாகப்பட்டணம் | 670 | 539 | 131 | 180 | 164 | 16 |



இதனால் இராமநாதபுரம், தஞ்சாவூர் இவ்விரண்டு ஜில்லாக்களிலிருந்து அதிகத் தமிழர்கள் வந்திருப்பதாக நன்கு தெரிகிறது. அடுத்த படியாக மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களாயிருக்கின்றன. இரங்கூன் பட்டணத்தில் மட்டும் 27,763 தமிழ் ஆண் மக்களும், 14,283 பெண் மக்களுமிருக்கின்றனர். ஐராவதி நதி முகத்துவார (டெல்டா) ஜில்லாக்களில் மட்டும் 75,466 ஆண்களும், 38,614 பெண்களுமிருக்கின்றனர். அடுத்தபடியாக மோல்மேன் பட்டணத்தைச் சுற்றிலும் 16,933 ஆண்களும் 9,031 பெண்களு மிருக்கின்றனர். மாந்தலே பட்டணத்தைச் சுற்றி 3,334 ஆண்களும் 2,214 பெண்களுமிருக்கின்றனர். மீதியான தமிழர்கள் ஆங்காங்கு பரவியிருக்கின்றனர்.

பர்மாவில் உள் நாடுகளில் வசிக்கும் தமிழர்கள் யாவரும் பயிர்த் தொழிலையே கையாண்டு வருகின்றனர். இவர்களில் சிலர் சொந்தமாக உழுதுகொண்டும், சிலர் வாரத்திற்கு உழுது பர்மியர்களிடமிருந்து பங்கு பிரித்துக்கொண்டும் வருகின்றனர். பயிர்த் தொழில் முறையிலிருக்கும் தமிழர்கள் பர்மாவிற்கு வெகு காலத்திற்கு முன்னதாகவே வந்து குடியேறியவர்கள். முக்கியமாக இராமநாதபுரம், தஞ்சாவூர், மதுரை முதலிய ஜில்லாக்களிலிருந்து பெரும்பாலோர் வந்திருக்கின்றனர். இவர்கள் தனித்தனிக் கூரைக் கொட்டகைகளில் தங்கள் நிலங்களுக் கருகாமையில் வசிக்கிறார்கள். ஒவ்வொரு கொட்டகைக்கும் சுமார் 2, 3 அல்லது 4 மைல தூரங்கூட யிருக்கும். இவர்கள் கோடை காலத்தில் பெரிய பட்டணங்களுக்கு வந்து அவ்வருஷத்திற்கு வேண்டிய சாமான்களை எல்லாம் வாங்கி வைத்துக்கொள்ளுவார்கள். எல்லோரும் தங்கள் பெண்ஜாதி பிள்ளைகளோடு வசிக்கின்றனர்.

வட்டிக்குக் கடன் கொடுத்துவரும் செட்டிமார்கள் பெரும்பாலும் முக்கிய பட்டணங்களிலிருந்துகொண்டு தங்கள் பிரதிநிதிகளைக் காடுகளில் ஆங்காங்கு வைத்துக் கொண்டிருக்கின்றனர். உள் நாடுகளில் இவர்கள் பர்மியர்களுக்கு வட்டிக்குப் பணம்

கொடுத்துதவி வருகின்றனர். பயிர் நிலங்களின் சீர்திருத்தத்திற்கும், அதிக விளைவுக்கும் இவர்களே காரணமா யிருந்தனரென்று கூறுவதற்கேதும் ஐயமில்லை. இவர்கள் தங்கள் மனைவிகளைக் கூட்டி வருவதில்லை. இவர்களின் உண்மை உழைப்பை யறியாது இவர்களும் மற்ற இந்தியர்களும் பர்மாவின் பணத்தைத் திரட்டிக்கொண்டு போகிறார்களென்று சிறிதும் யோசனையின்றி பர்மாப் பிரிவினையை பர்மியர்கள் நாடுவது பெரிதும் அறியாமையே.

தமிழர்களில் வியாபாரிகளா யிருப்பவர்கள் பெரும்பாலோர் இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ஏராளமாய் முக்கிய பட்டணங்களில்தானிருந்து வருகின்றனர்: மாந்தலே, இரங்கூன், மோல்மேன். இவர்கள் மனைவி மக்களோடு வசிப்பதில்லை. குறைந்தது 2 வருஷத்திற் கொருதரம் இந்தியாவுக்குப் போய் வருவார்கள்.

கடைசியாக ஆங்கிலம் கற்று உத்தியோக முறைகளில் இருக்கும் தமிழர்கள் அநேகமாய் திருநெல்வேலி, மதராஸ், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மலையாளம் முதலிய ஜில்லாக்களி லிருந்து வந்தவர்கள். இவர்கள் தங்கள் மனைவி மக்கள் சகிதமாய் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு வரவைப்போல செலவுமுண்டாகி மாதத் தொடக்கத்தில் தடபுடலாய் உண்டு உடுத்தி வந்து, மாதக் கடைசியில் கையிலுள்ள பணமெல்லா மிழந்து மிகக் கஷ்டமடைவது வழக்கமாயிருக்கும். பட்டினியாய்க் கிடந்தாலும் அணிய நல்ல ஆடையும் அணிகலமு மிருந்தால் போதுமாம்.

தமிழர்களில் கூலி வேலையாட்கள் அதிகமாய் பர்மாவில் கிடையாது.

பர்மாவில் வாழும் தமிழ்க் கிறிஸ்தவர்கள் யாவரும் கல்வி பயின்றவர்களென்றே சொல்லலாம். இவர்களில் பெரும்பாலோர் தமிழை உபயோகப்படுத்துவதில்லை. ஆங்கிலமே தங்கள் தாய்ப்பாஷையாகப் பேசி வருகின்றனர். தமிழிலே பிறந்து தமிழிலே வளர்ந்தும் சிலர் தமிழை பேசமுடியாமலிருப்பதை நோக்க



நமக்கு ஒரு பக்கம் வருத்தமும் மறு பக்கம் வெட்கமுமா யிருக்கிறது. இது நாகரீகத் தடபுடலி லுண்டானதோர் அடாத செய்கையென்றே சொல்லவேண்டும்.

கிறிஸ்தவர்களை நீக்கி மற்றத் தமிழர்களில் கல்வி பயின்றவர்களைக் கீழ்வருமாறு பிரிக்கலாம்:—

| மதம். | பிறந்த இடம் | படித்தவர்களும் படியாதவர்களும் | தமிழ் கற்றவர்கள் மொத்தம் | 0-15 வயது வரை | 10-15 வயது வரை | 15-20 வயது வரை | 20-30 வயது வரை | 30 வயதிற்கு மேல் | ஆங்கிலம் கற்றவர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இந்துக்கள். (ஆண்கள்) | பர்மாவில் | 18,359 | 4,022 | 349 | 776 | 632 | 1,142 | 1,123 | 9,537 |
| | பர்மாவுக்கு வெளியில் | 44,828 | 17,452 | 207 | 845 | 1,393 | 5,028 | 9,979 | 2,471 |
| மகமதியர்கள் (ஆண்கள்) | பர்மாவில் | 4,177 | 1,304 | 87 | 236 | 199 | 335 | 447 | 304 |
| | பர்மாவுக்கு வெளியில் | 14,183 | 8,058 | 66 | 454 | 870 | 2,554 | 4,114 | 351 |

பயிர்த்தொழில் செய்வோர்களுக்குக் கல்வி அதிகமாயில்லையென்று சொல்லவேண்டும். மற்ற செட்டியார்கள். வியாபாரிகள் முதலானோர் பெரும்பாலும் தாய்ப்பாஷையே தெரிந்தவர்களாயிருக்கின்றனர். ஆங்கிலங் கற்றவர் யாவரும் உத்தியோகங்களி லமர்ந்துவிடுகின்றனர். தமிழர்களில் சர்வ கலாசாலைப் படிப்பில் பர்மாவில் பயின்றவர்கள் மிகக்கொஞ்சம். பர்மாவில் முக்கியமாகப் பட்டணங்களிலுள்ள தமிழர்கள் தங்கள் பிள்ளைகள் மெட்ரிக்குலேஷன் வரை படித்தால் போதும்; அதைக்கொண்டு வயிறு வளர்த்துவிடலாமென்ற தப்பபிப்பிராயங்கொண்டு இருப்பவர் அநேகம். படிப்பு வயிறு வளர்ப்புக் கென்னும் அற்பப் புத்தியுடையவர்களாலேயே நம் தேயம் இன்றும் அடிமைத் தனத்திலமிழ்ந்து கிடக்கிறது. ஏதாவது கொஞ்சம் ஆங்கிலேயங் கற்று மேனாட்டாருக்குக் கீழ் கிராணி வேலைக்கிருந்து திரவியம் சம்பாதித்துப் பசியாமல் வயிறு வளர்த்தால் போதுமாம். என்னே! இவர்கள்

மதியீனம். இவர்கள் நம் தாய்ப் பாஷை வளர்ந்தோங்க வெளி வரும் தமிழ் சஞ்சிகை, பத்திரிகைகளையுமாவது ஆதரித்து வருகின்றனரா? இல்லை! இல்லை!! இவர்களுக்கு உத்தியோகத்தி லிருந்துவந்து பத்திரிகைகளைப் படிக்க நேரமில்லையாம்! ஆனால் உண்ணவும் ஊர் சுற்றவும் நேரமுண்டாம்! இப் பாஷாபிமான மற்றவர்களாலன்றோ இரங்கூனில் வெளிவந்த சில தமிழ்ப் பத்திரிகைகளும் திடீரென்று நின்றுவிட்டன. இந்தியத் தாய் இப் பாஷாபிமான மற்ற பிள்ளைகளால் தனக்கு விடுதலை கிடைப்ப தெங்ஙனம் என்று கண்ணீர் விடுகிறாள். தான் முன்னிருந்த உன்னதப் பதவியை இனிப் பெற முடியாதென்று தேம்பி யழுங் குரல் இவர்கள் செவிக்குக் கேட்கவில்லை போலும். பரிதாபம்! பரிதாபம்!! ஆங்கிலேயரைச் சற்று கவனியுங்கள். இவர்கள் எத் தேசங்களுக்குப் போனாலும் அங்கு தங்கள் தாய்ப் பாஷையை வளர்ப்பதிலேயே கண்ணுங் கருத்துமா யிருக்கிறதினாலல்லவா, இன்று உலகத்திலேயே ஆங்கிலம் பொதுப் பாஷையாகப் பாவிக்கப்படுகிறது. இந்தியா, நாகரீகத்திலும் தன்மையிலும் கீர்த்திபெற்று விளங்கிய போது, பேருமூருமற்றிருந்த ஜப்பான் தன் பாஷாபிவிருத்தியாலன்றோ, இப்பொழுது உலகத்தில் பல வகையிலும் சிறந்து விளங்குகிறது.

இப்பொழுது பர்மாவில் கல்வி பயிலும் இந்திய மாணவர்கள், கவர்ன்மெண்டாரால் அநேக நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டு முன்னணியில் வரமுடியாது பரிதவிக்கின்றனர். கலாசாலைப் படிப்புக்குப் போகும் இந்தியர்களோ கொஞ்சம். அதிலும் தமிழர்களோ மிகக் கொஞ்சம். இவர்கள் கட்டாயமாகப் பர்மாப் பாஷை படித்துத் தீரவேண்டுமாம். இல்லாவிடில் கலாசாலைக்குள் கால் எடுத்து வைக்கக்கூடாதாம். அப்படியே அரிதாகச் சர்வ கலாசாலைப் பட்டம் பெற்றவர்களும் கவர்ன்மெண்டு உத்தியோகங்களுக்குப் பல நிபந்தனைகளால் தகுதியற்றவர்களாகி விடுகின்றனர் இந்திய மாணவர்கள் கஷ்டப்பட்டு முதன்மையில் படித்துத் தேறியும் யாதொரு பயனையுமடையாது சகல சுதந்தரங்களையு மிழந்து நிற்கும்



நிலை மிகவும் பரிதாபப் படக்கூடியதா யிருக்கிறது. இதனால் சில இந்தியர் கல்வி விருத்தியில் அதைரியப்பட்டு விடுகின்றனர். பெண் கல்வி இப்பொழுதுதான் விருத்தி யடைந்து வருகிறது. சர்வகலாசாலையில் இதுவரைத் தமிழ் மாதர்களில் இரண்டுபேர்கள் தான் பட்டம் பெற்றிருக்கின்றனர்.

1929-௵ மார்ச்சு ௴ சர்வ கலாசாலைப் பரீக்ஷைகளில் தேறிய தமிழர்களில் ஒருவர் யம்.. யஸ்ஸி. (M. Sc.) இருவர் பி. யஸ்ஸி., ஆனர்ஸ் (B. Sc. (Hons.)) இருவர் பி. யஸ்ஸி. (B. Sc) ஒருவர் பி. யஸ்ஸி., இஞ்சினீயரிங் (B. Sc. (Engineering)) ஆவரென்றால், எவ்வளவு நம் தமிழர் பர்மாவில் கல்வி முன்னேற்றத்தில் குன்றியிருக்கின்றனரென்று நன்கு தெரிகிறதல்லவா? தமிழ்ச் சங்கங்கள் பர்மாவில் காண்பதரிது. ஆனால், ஆடல் பாடல்களுக்கும், நேரங்களைச் சந்தோஷமாய்க் கழிப்பதற்கென்றும் சில சங்கங்களுண்டென்றால், எவ்வளவு நம் தமிழர் கல்வி அபிவிருத்திக்குப் பாடு படுகிறார்களென்பதும் கண்கூடு. இராஜா டாக்டர் சர் இராமநாத செட்டியார் அவர்கள் ஓர் உயர்தர கல்விச்சாலையும், ஸ்ரீமாந். ஹரிகிருஷ்ண பிள்ளை அவர்கள் ஓர் பள்ளிக்கூடமும், ஸ்ரீமாந். நாகலிங்க மேஸ்திரியார் ஓர் தருமப் பள்ளியும் நடத்திவருவது தவிர வேறு நம் தமிழர்களால் நடத்திவரும் பெரிய கல்விச்சாலைகளில்லை. இவர்கள் கல்வி அபிவிருத்திக்குப் பாடுபடுவது மிகவும் போற்றத்தக்கதே யாயினும் சர்வ கலாசாலைகளில தேறும் தமிழர்கள் வெகு கொஞ்சமாயிருக்க அவர்களுக்குப் பொருளுதவி செய்து வெளி நாடுகளில் போய்ப் படித்துவர உற்சாகப்படுத்த முன்வராதது மிகவும் வருந்தத்தக்கது.

பர்மா சட்டசபைக்கு இரங்கூனிலிருந்து 4 பேர்களும், மாந்தலே, பாசீன், மோல்மேன், ஆக்யாப் என்ற ஊர்களிலிருந்து ஒவ்வொரு மெம்பரும் ஆக 8 மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்திய வேலையாட்களுக்கும், இந்திய வியாபாரக் கூட்டத்தாருக்கும் பிரதிநிதிகளாக 2 மெம்பர்களை கவர்னரே நியமித்துக் கொள்ளுகிறார். இப்பொழுது சட்டசபையில் ஒரே ஒரு தமிழர்

தானிருக்கிறார். இரங்கூன் கார்ப்பொரேஸனின் (Rangoon Corporation) 8 இந்திய மெம்பர்களில் 2 தமிழர்களிருக்கின்றனர். இந்திய ஜனத்தொகைக்குத் தகுந்தவாறு இச் சபைகளில் மெம்பர் ஸ்தானங்களை அதிகரிக்க வேண்டியது. சட்டசபையிலும் நம் இந்திய மெம்பர்களுக்குள் ஒற்றுமை யில்லாதிருப்பது மிகவும் விசனப்படத்தக்கது. இதுவரையில் பர்மாவில் இந்துக்களுக்கும், மகமதியர்களுக்கும் யாதொரு சச்சரவும் ஏற்படாமல் வெகு ஒற்றுமையோடு வாழ்ந்து வருவது மிகவும் சந்தோஷப் படத்தக்கது.

இப்பொழுது பர்மாப் பிரிவினையைச் சட்டசபையிலும் பர்மா சைமன் உதவிக் கூட்டத்திலும் தீர்மானம் நிறைவேற்றிவிட்டனர். பாஷாபிமானமும், தேசாபிமானமுமற்ற நம் தமிழ் மக்கள் பர்மாவில் யாது செய்யப்போகின்றனர்? பிரிக்கப்பட்ட பர்மாவில் இந்தியர்களுக்கு அநேக இக் கட்டுகளை யுண்டாக்கி விடுவார்களென்பதுண்மை. இப்பொழுதிருக்குஞ் சிறிது உரிமையுமிழந்து உழைப்புக்குத் தகுந்த உணவில்லாமல் போய்விடுமே. அப்பொழுது நம் தமிழர் யாது செய்வார்கள்? நம் தாய்நாட்டின் விடுதலைக்குப் பாடுபடாது நாமும் இந்தியர்கள் அதிலும் வீரம் பொருந்திய தமிழர்கள் என்று சொல்லிக்கொள்வதனாலேது பயன்? சேர, சோழ, பாண்டியர்கள் 9 10. 11-ம் நூற்றாண்டுகளில் வெகு தூரத்திலிருக்கும் ரோம தேசங்களோடு (Roman Empire) வியாபாரஞ் செய்தும், அநேக கப்பல்களோடு வங்காளக் குடாக்கடலைக் கடைந்துந் திரிந்த வீரமெங்கே! நாம் அன்று நாகரீகத்திலும், சகல கலைகளிலும் சீர்பெற்றிருந்த நிலைமை எங்கே? நம் நாடு ஐரோப்பிய நாடுகளுக்குப் பெருந் தன்மையோடு ஏராளமான விளை பொருட்களையும், திரவியங்களையும் வாரி வாரிக் கொடுத்து வந்த கொடை எங்கே? நம் வீடுகளும், வீதிகளும், தங்க மயத்தால் கோடி சூரியப் பிரகாசம்போல் ஜ்வலித்துக் கண்களைப் பகட்டிக் கண்டோர் மனதைத் திடுக்கிடச் செய்த திரவியங்களெங்கே? பொதுவாக உலகத்திற்கே மாதரு ஸ்தனம்போலிருந்து



பாலூட்டி வந்த பதவி எங்கே? அன்று ராஜநீதி மாறிடாத தேசம் நம் தேசமன்றோ? நம் அறிவின்மையாலும், அடிமைத் தனத்தாலும், மூடப் பழக்க வழக்கங்களாலு மல்லவா எல்லாப் பதவிகளையுமிழந்து, இப்பொழுது வயிற்றின் கொடுமையால் நாழி யரிசிக்குப் பர்மா தேசத்தை நாடி வந்திருக்கிறோம். அக்காலத்தில் நம் தேசத்தை நாடி அந்நியர் பிழைக்க வந்தது போக இப்பொழுது நாம் நாடோடிகளாகத் திரிய ஏற்பட்ட காரணத்தை நம் பர்மாத் தமிழர் சிறிதுங் கருதினரா? இல்லை! இல்லை!! வயிற்றுக்கு வேளா வேளை அன்னங் கிடைத்தால் போதுமாம்! இந்தியா நிலைகுலைந்து நிற்பதையறிய இஷ்டமில்லாதிருப்பவர் அநேகர். பிரிவினையாலுண்டாகப் போகும் கஷ்டங்களைத் தெரிய இஷ்டமில்லாதவர் பலர்.

நம் நாடு விடுதலை யடைந்தாலல்லவோ பசியின் கொடுமை நாட்டை விட்டகலும். நாமும் பிரதேசங்களுக்குச் சென்று மிக்க இக்கட்டுக்களை யடையோம். இதை யுணராத தமிழர் இருந்தென்ன? இறந்தென்ன? நம் இந்தியாவின் நிலைமையைக் கண்ட அந்நிய நாட்டாரும் பெரிதும் பரிதாபப்படுகின்றனர். வெட்கம்! வெட்கம்!! நம் தாய் நாட்டின் நிலைமை யுணராது 'இராமன் ஆண்டாலென்ன? இராவணன் ஆண்டாலென்ன?' என்னுங் கருத்துக் கொண்டிருக்குந் தமிழரால் இந்தியாவுக்கு யாது பயன்? இங்குள்ள தமிழர்களுடைய பிரார்த்தனையெல்லாம்

"God! bless me and my wife,
My son and his wife,
Us four and no more."

அதாவது 'கடவுளே! என்னையும் என் மனைவியையும், என் மகனையும், அவன் மனைவியையும் ஆக எங்கள் நான்கு பேர்களை மாத்திரம் இரட்சிப்பாயாக' என்பதாகவே யிருந்தால், இவர்கள் எவ்வாறு நம் சமூகம் முன்னேற்றமடையப் பாடுபடப்போகின்றனர்.

# நமக்கு ஏன் சுயராஜ்யம் வேண்டும்?

ஸ்ரீமாந் முனகால S. பட்டாபிராம அய்யர் அவர்கள்.

## உரிமைகள்.

மனிதன் கூடிவாழும் ஒரு பிராணி. அக் கூட்டு வாழ்விற்குரிய விதிகளின் தொகுதியே, உலகில் தர்மம் அல்லது சட்டம் என வழங்கப்படுவது. கூட்டு வாழ்க்கையில் ஒருவரோடொருவர் உரசி, இடிபட்டு, நசுக்குண்டு மடியாவண்ணம் மனிதனுடைய தனி உரிமைகளைச் சேர்த்துப் பொருத்தித் தொடுத்ததே தர்மம். மனித உரிமைகள் யாராலும் அளிக்கப்பட்டவையல்ல. அவை மனிதனுடன் பிறந்தவை.

---

பிரிய தமிழர்காள்! அறியாமையென்னும் இருள் மூடியை எடுத்தெறிந்து விடுங்கள். நம் தாய்நாட்டின் க்ஷீண திசையை உணருங்கள். பர்மா நாடு எப்பொழுதும் உணவளிக்குமென்னுந் தப்பெண்ணத்தை விட்டொழியுங்கள். நம் நாடு நாடாயிருந்தால் நாமும், நம் பிள்ளைகளும் பசியாமல் சாப்பிட்டு வாலாமென்பதை உணருங்கள். பர்மாப் பிரிவினை உங்களைப் பயமுறுத்தவில்லையா? நம் தமிழர் ஒற்றுமையுடனும் உறுதியுடனும் வேலை செய்யத் துணிந்துவிட்டால் நம முன்னிருக்கும் இக்கட்டுகளைக் கட்டிவிடலாம். நாம் இந்தியாவிடுதலைக்குப் பாடுபட முன்வராத கோழைகளாயிருக்கிறோம். கேவலம்! கேவலம்!! எழுங்கள். ஊக்கத்துடனும் ஒரே மனத்துடனும் இன்றே எழுங்கள். எழுந்து இந்தியாவின் விடுதலைக்கும் நம் சுக வாழ்க்கைக்கும் பாடுபட மடைதிறந்த வெள்ளம்போல் முன்வாருங்கள்.

---



அப் பிறப்புரிமைகள் எவராலும் பிடுங்கப்படத்தக்கவையல்ல, அழிக்கப்படக் கூடியவையுமல்ல. அவையாவன:—

1. உயிர்வாழும் உரிமை.
2. உடலை உணவு உடைகளால் போற்றுதற்குரிமை.
3. போதிய உணவு உடைகளை அடைவதற்குரிமை.
4. உவப்புடன் உழைக்கும் உரிமை.
5. உழைத்த பலனைத் தடங்கலின்றிப் பெற்று மகிழ்ந்து வாழும் உரிமை.
6. (உலகத்தில் உள்ளம், உடல்களின் இயற்கை மலர்ச்சியைத் தடுக்கும் கட்டளைக் கட்டுப்பாடுகளுக்குக் கீழ்ப்படாமல்) சுதந்திரமாக வாழும் உரிமை.
7. மனிதனோடு மனிதன் சரிசமமாக வாழும் உரிமை.
8. சகோதரத் தன்மையில் வாழும் உரிமை.

புவியின் தலமும் பொருளும் புவியிலுதித்தோரெவருக்கும் ஏற்றத்தாழ்வன்னியில் உரியவையென்பதைச் சுட்டிக்காட்டுவதே சகோதர உரிமை. மேற்கூறிய உரிமைகளையழிக்க எவருக்கும் அதிகாரமில்லை. இத் தெய்வ உரிமைகள் மனிதர்களால் மனிதர்களுக்கு அளிக்கப்படாதவை யாகையால், அவைகளை யழிக்கும் விதியாவது, தர்மமாவது, சட்டமாவது முறையே மெய்யான விதி, தர்ம, சட்டங்களாகமாட்டா.

உலகத்தின் ஆதியான தர்மம், சத்தியத்தையே ஆதாரமாகக்கொண்டு அஹிம்ஸையையே போற்றிவந்தது. கிளைகளாக முளைத்துச் சிம்புகளாக வெடித்த சில்லறை விதிச் சட்ட தர்மங்களெல்லாம், காலதேச நிலைகளால் வெவ்வேறு விதமாக மாறியும் இல்லையேல் அழிந்தும் மறைந்தன. அவைகளிலெவையாயினும் மனித

னுடைய மூல உரிமைகளைப் பாதிக்குமாயின், அச் சில்லரைத் தர்மங்களையும், சட்டங்களையும், கட்டளைகளையும், வேருடன் பிடுங்கியெறிவதே மனிதனுடைய கடமை. உரிமைகளில்லாமல் வாழும் வாழ்வு மானிட வாழ்வல்ல. உரிமையற்ற நாடுகளின் மனம் மலர்ந்து கலைஞானங்களை வளர்த்து மேன்மையான நாகரிக நிர்மாணத்தைச் செய்யக் கண்டோர் யாருமில்லை; கேட்டோர் எவருமில்லை. உரிமைகளுண்டாயின், உள்ளம் மலர்ந்து மணக்கும். உள்ளம் பூத்தால் கலைகள் காய்த்துக் கனியும்; கலைஞானங்கள் கனிந்தால் மக்கள் உலக வாழ்க்கையை விரும்பித் தங்களுடைய இடையறாச் சந்ததி மூலம் உலக இன்பத்தைப் புசித்துப் புருஷார்த்த சித்தியைப் பெறுவர். இயற்கை மலர்ச்சியால் மென்மேலும் முன்னேறிச் செல்வதே மனிதனுடைய பிறவிப் பயன். அப் பிறவிப் பயனுக்கு முற்றிலும் இடையூறாயிருப்பது நமது பராதீனமென்பது. சிறிதாயினும் சிந்தனை செய்வோர்க்குத் தெளிவாய் விளங்கும்.

## இந்தியாவில் வறுமை

நமது மொத்த ஜனத்தொகை 31 கோடியே 90 லக்ஷம். அத்தொகையில் 30 கோடி நித்திய தரித்திரர்கள். அவ்வறியரில் பகல் பட்டினி ஒரு பத்துக்கோடி. இராப்பட்டினி மறு பத்துக்கோடி. இராப்பகல் பட்டினியால் பிராணனைப் பல்லில் கடித்துப் பிடித்துத் தொங்கியிருக்கும் மக்கள் மற்றொரு பத்துக்கோடி. இரவும் பகலும் பட்டினியாயிருப்போர் சித்தரல்ல, யோகிகளல்ல, இருடிகளல்ல. அவர்கள் மணிமந்திர ஔடதங்களாலேனும், யோகசாதனப்பிராணாயாமங்களாலேனும், கோர தபோ வலிவாலேனும் பசியா வரத்தைப் பெற்று இப் பூவுலகில் இரம்மியமாய்க் காலங்கழிப்பவரல்ல.

பாரதத் தாயின் வயிற்றிற் பிறந்த துற்பாக்கியமுடைய அச் சகோதர சகோதரிகளிற் சிலர், அறுவடைக் காலங்களில் நஞ்சை புஞ்சைகளிலோ, வாய்க்கால் வரப்புகளிலோ சிதறிச் சிந்திக் கிடக்கும் தானியங்களை, காக்கை, குருவிகளுக்கு முன்னோடிப் பொறுக்கியும் கல் மண்களுடன் வாரிக் கொழித்தும் கிடைத்த பிடி தானிய



மணிகளைக் குத்தி, சருகு செத்தைகளை வைத்து எரித்துக் கஞ்சி காய்ச்சி, விளிம்பு முட்ட நீர்விட்டு விளாவி, அண்ணாந்து அக் கஞ்சி நீரை ஆவலுடன் தொண்டை வழியாய்க் கடகடவென்று விட்டு காய்ந்தெரியும் குடலை நிரப்பி, பின் சட்டியில் ஒட்டியிருக்கும் பருக்கைப் பசையை விரலில் வழித்து வாயில் துடைத்து, நாக்கால் நக்கிச் சுவை பார்த்துப் பல் வரிசைகளில் தடவி, உடலிலிருந்து உயிர் பிரியா வண்ணம் செய்துகொள்ளுகிறார்கள். மாரிக் காலங்களில் சேறு சகதிகளிலிறங்கி நண்டு, நத்தை, தவளை முதலியவைகளைப் பிடித்துத் தின்று உயிர்வாழ்கின்றனர். கோடை காலங்களிலோ சாலையோரங்களிலிருக்கும் புளியமரங்களினின்றும் இராக்காலங்களில் உதிரும் புளியம்பூவிதழ்களைக் காலையில் கூட்டி வாரியும், வறண்ட குளங்களில் தாமரைக் கிழங்குகளைத் தோண்டியும் அக்கிழங்குகளைப் பூவுடன் உலையில் போட்டவித்து ஒரு சிட்டிகை உப்புக்கு ஓடித் திரிந்து கடன்கேட்டு வாங்கிக் கிழங்குகளில் தூவி நாளொருவேளை புசித்து ஜீவித்து வருகிறார்கள்.

நீர் செழித்த ஜில்லாக்களில் வருடத்தில் ஒன்றிரண்டு மாதங்களிலேயாயினும் கூலிவேலை கிடைக்கும் அக் கூலிக்காசைச் சேர்த்து ஒரு துணியை வாங்கி மானத்தைப் பொத்தலாம்; உப்பையாவது விலைகொடுத்து வாங்கலாம். நீர்வளமில்லாத ஸ்தலங்களில் வசிக்கும் எளியோர்களின் நிலை இதிலும் கேடானது.

அவ்வேழையோ கற்காடுகளில் முட்புதர்களினிடையே சுள்ளியொடித்துக் கொடிகளாற் கட்டி, ஊனுங் கொடிகளாற் சுற்றிய சும்மாட்டை உச்சந்தலையில் வைத்து (சுள்ளி) விறகுக்கட்டை முண்டித் தூக்கி, கிழிந்த கோணிச் சாக்கைக் கோவணமாகக் கச்சைக் கயிறு அரைஞாணில் தொங்கவிட்டு விறகுக் குச்சியொன்றைக் கையிற்பிடித்து ஊன்றி, தொலைக் கிராமங்கட்கு கற்கள் வெட்டிய பாதங்களுடன் நொண்டி நொண்டிச் சென்று தலைச் சுமையுடன் தெருத்தெருவாய் அலைந்து ஒரு பணத்திற்கோ அரைப் பணத்தி

ற்கோ அவ் விறகை விற்று, சாமை, சோளங்களை வாங்கி அரைத்து காய்ச்சிய கூழை, கைகால் சுணங்கி கூரைபிரிந்த குடிசையிற் குன்றிக்கிடக்கும் குழந்தை குட்டிகளின் வயிறுகளில் வார்த்து, வருடமொரு முறை தவறாமல் வரும் கொள்ளை பேதிகள் கொண்டோடிப் போகும்வரை உயிர்களைப் பறக்கவிடாமல் தடுக்கிறான். இங்ஙனம் விறகுவிற்றுப் பிழைக்கும் குடும்பங்களில் தகப்பனிறப்பனேல், தாயும் குழந்தைகளும் மலைச்சரிவுகளில் சீவுமாறறுத்தாயினும், மலை அடிக்காடுகளிற் சுண்டக்காய்ப் பறித்தாயினும் உயிர்வாழ வேண்டும். குழந்தையின் கந்தையாடையில் சுண்டக்காயை முடிந்து தலையில்வைத்து சீவுமாறு முடிச்சுகளை மார்பிலணைத்து அரையை மறைக்க இடுப்பிலிரண்டு முழக் கந்தையை யுடுத்திப் பகல் பதினைந்து நாழிகைவரையிலும் அண்டைக் கிராமங்களிற் சுற்றித் திரிந்து, உழக்கு அல்லது நாழித் தானியத்திற்குப் பண்டமாற்றித் திரும்புகிறாள். இடையே ஏதாவதொருநாள் செப்புக் காசொன்று அதிகமாகக் கிடைத்தால், அக்காசுக்கு உப்பு மிளகாய் வாங்கி ஆனந்தப் பரவசமடைகிறாள். அப்படிக் கிடைத்த தானியத்தை மலையடிப் பாறையில் குத்தித் தூற்றிப் புடைத்துக் கூழாகக் காய்ச்சி, குழவிகளுக்கூட்டி வானத்தையே நோக்கியிருக்கும் உயிர்ப்பறவைகள் மேலே கிளம்பிவிடா வண்ணம் காப்பாற்றிவருகிறாள். கடுவெயிலில் வறுபட்டு, மழையில் நனைந்து, பனியில் முடங்கி முட்கரடுகளிடைபட்டுச் சிதறுண்ட தாயின் சரீரத்தைவிட்டு உயிர் பிரியுமாயின், அவ்வனாதித் திக்கற்ற இளஞ் சேய்களின் கதி என்ன? இவ்விதம் பாரததேவியின் மக்கள் பத்துக் கோடிவரை தீராப்பசித் தீயால் வருந்திக் கொண்டிருக்கிறார்கள்.

சமுத்திர மத்தியில் வடவாக்கினி என்ற பெருநெருப்பு உறைந்து கிடக்குமென்றும் அவ் வடவாக்கினி ஊழிக் காலத்திற்றான் ஜனக் கண்ணுக்குப் புலப்படுமென்றும் பெரியோர் பகர்வர். ஊழிக் காலத்து வடவா முகத்தினெழுச்சிக்கு அச்சம் அவ் வூழி நாள்வரை உயிர்வாழ்ந்திருக்க ஆசையுடைய மற்றைய நாட்டாருக்கிருக்கட்டும். பாரதநாட்டாரின் அழிவுக்கு நீர்க்கடலினிடையே மறைந்துறையும் வடவாநலம் எழும்பவேண்டிய தேவையில்லை. பாரத ஜனசமூகச் சமுத்திர மத்தியில் நிச்சயமாக வடவாக்கினி தோன்றிவிட்டது.



## பஞ்சம்

முன் காலத்தில் சீரும் சிறப்பும் பொருந்தி செல்வஞ் சொரியப்பெற்ற நம் மருமைத் தாய்நாட்டில் தீராப்பசித் தீ பற்றி எட்டுத்திசைகளிலும் விட்டெரியும் செஞ்சுடர்ச் சுவாலைகள் ஆகாயமளாவிப் பாய்கின்றன. வடவாமுகத்திற்குணவு கடல் நீரென்பர். அவ்வாச்சர்யத்தின் உண்மையை யறிய நம் நாட்டு ஏழை ஜனங்கள் பசியைத் தணித்துக்கொள்ள ஜலத்தைக் குடித்து வருவதை யோசித்துப்பார்த்தால் நன்கு புலப்படும். நாட்டு ஜனங்கள் இப்பொழுது நம் நாட்டின் நித்திய பஞ்சத்தால் நாசமடைந்து வருகிறார்கள். அப் பஞ்சம் சென்ற நூற்றாண்டிலிருந்து எப்படி உண்டு வளர்ந்து வருகிறதென்பதைப் பாருங்கள்.

| காலம் | | | | | பஞ்சம் | | பசியால் நசித்தவரின் தொகை. |
|---|---|---|---|---|---|---|---|
| கி. பி. | 1800 | முதல் | 1825 | வரை | 5 | முறை | 10,00,000 |
| ,, | 1825 | ,, | 1850 | ,, | 2 | ,, | 5,00,000 |
| ,, | 1850 | ,, | 1875 | ,, | 6 | ,, | 50,00,000 |
| ,, | 1875 | ,, | 1900 | ,, | 18 | ,, | 2,60,00,000. |

இந் நூற்றாண்டினாரம்பத்தன்று முதல் இன்றுவரை பஞ்சம் தவரவேயில்லை. பஞ்சமென்றால் புராணப் பஞ்சமன்று; தேவராஜன் கட்டளையால் மேகங்களைக் கூண்டிலடைத்தவர் எவருமில்லை. நமது நாட்டுப் பஞ்சம்—நம்மை யுண்டு வளர்ந்துவரும் இவ் வடவாமுகம் புவனேந்திரரின் அரசியல் முறையின் தொடர்பே யொழிய வேறில்லை. அது பாரத ஜனத்திரள் கடலின் அடியடுக்குகளில் நன்றாய் மூண்டுவிட்டது. அடியடுக்குகளிலிருக்கும், பத்துக்கோடி மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் உயிர் கூட்டின அடிவயிற்றில், தீராப்பசி யென்னுந் தீக்குண்டத்தைத் தாங்கித் திரிகின்றனர். நாடு

விளைந்தாலும் பசி, விளையாவிடின் பசியும் பஞ்சமும். விளைந்தும் பஞ்சம் பத்துக்கோடிமக்களுக்கு, விளையாவிட்டாலோ பிரளயம். அப் பிரளயத்தில் பாரத நாட்டு மக்கள் ஈசல்களைப்போன்று செத்து உதிர்கிறார்கள். பஞ்சத்தினுடைய உயிர்த் தோழர்களான அம்மை, பேதி, மகாமாரிகள் சாசுவதமாக நாட்டில் குடிகொண்டுவிட்டன.

பஞ்சம் நாட்டைவிட்டகன்றாலன்றோ கொள்ளை நோய்கள் தேசத்தைவிட்டகலும். (இயற்கைப்) பஞ்சத்திலிறப்பது கோடானுகோடி. வருடந்தோறும் கொள்ளை நோய்கள் கொண்டுபோவது எத்தனையோ லட்சங்கள். சீமான்கள் சிலருக்கு இது விந்தையாயிருக்கும். படித்தவர்கள் பலருக்குப் பஞ்சம் புலப்படுவதேயில்லை. காலடியிலிருக்கும் கூழாங் கற்களைக் குனிந்து கையிலெடுத்து எண்ணாதவர் வானத்திலிருக்கும் நக்ஷத்திரங்களை எண்ணி எண்ணி ஜெபிப்பர். பத்திரிகைகளைப் படித்து ஐரோப்பியப் போர்க்களத்திற் பட்டிறந்த படைகளை உன்னி யுன்னி உள்ளம் உருகுவர். வெற்றியை நாடி, வாளேந்தி, ரணக்களத்திலிறங்கி உயிர்துறப்போருக்குக் கனியும் மனம், கடும்பசியால் கதறிக் கண் பஞ்சடைந்து, காதடைத்து, கால் சாய்ந்து குவியும் பிணப்பட்டடைகளைப் பொருட்படுத்துவதே இல்லை. உலக முழுமையிலும் கி. பி. 1800 முதல் 1925 முடிய நடந்த எல்லா யுத்தங்களிலும் இறந்தவரின் தொகை ஒரு கோடியே முப்பதுலக்ஷம். சென்ற நூற்றாண்டின் கடைப்பாதத்தில் நம் நாட்டில் பஞ்சத்தால் பசித்துச் செத்தவர்களின் தொகையில் சரிபாதி. சென்ற ஐம்பது வருடங்களில் பசியினால்மட்டுமிறந்த ஜனங்களின் தொகையில் மூன்றிலொரு பகுதி! பஞ்சமும் பாரத நாடும் உடன்பிறந்தனவென்பீரோ? அல்ல. பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன் கி. பி. 1000, முதல் 1745-ம்௵ வரை நாட்டில் 18 முறை ஏதோ சிற்சில பிரதேசங்களில் தோன்றி மறைந்தது. உயிர்ச் சேதமும் இக்காலப் பஞ்சத்திலுண்டானதுபோல நெஞ்சு திடுக்கிடும்படி நேரவில்லை.



அப் பஞ்சங்களை தேசத்தின் பொதுச் செல்வ வலிவால் அக்காலத்து ஜனங்கள் பொருட்படுத்தவில்லை. அக் காலங்களிலெல்லாம் தேசத்தின் வியாபாரம் நாட்டு மக்களுக்கு அனுகூலமாகவிருந்தது. கைத் தொழில்கள் சர்வ நாசமடைந்திருக்கவில்லை. விவசாயத்தால் ஏராளமாய் விளையும் பொருள்களை பாரதத்தாயின் வயிற்றிற் பிறந்தோரெல்லோரும், வயிறாரவுண்டு வாழ்க்கையை விரும்பியிருந்தனர். இப்பொழுதோ நம்மில் பெரும் பகுதியினர் உயிர் வாழ்க்கையை வெறுத்து மரண யோகத்தையே விரும்பி, எமன் வரவை எதிர்பார்த்துத் தவம் புரிந்து கொண்டிருக்கின்றனர். வேறு என் செய்வது? பசியால் பீடிக்கப்பட்ட பஞ்சபூதக் கூட்டில் ஆண்மைத்தனங்களும், மேன்மைக் குணங்களும் பச்சைப் பசுங்கிளிகளைப்போலக் கொஞ்சிக் களிப்பதெங்ஙனம்?

"மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர் மேல் சாமுறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்து போம்."

என்று ஔவையாரருளிய மொழி மெய்யன்றோ? பருவக் காற்றால் பெய்யும் மழை காலந்தவறிப் பெய்வதாலும், இந்தியர்கள் நாடு கொள்ளாமல் மட்டு மிதமின்றிப் பிள்ளைகளைப் பெற்றுத் தள்ளுவதினாலும் நம் நாட்டைவிட்டு விலகாமல் பஞ்சம் குடிகொண்டுவிட்டதென்று, வெளி நாடுகளில் விஷமப் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது. நம் நாட்டுப் பள்ளிக்கூடங்களிலும் இப் பாடங்களே பிள்ளைகளுக்குப் புகட்டப்படுகின்றன. வருடந்தோறும் நம் நாட்டில் மழை பொழிவதுபோல் உலகத்தில் வேறெந்நாட்டிலும் பெய்வதில்லை.

## இந்தியாவின் நீர்வளம்

அம் மழைத் தண்ணீர் நாடுமுழுதும் பரவிப் பாய்வதற்கேற்ற இயற்கைச் சாதனங்களான ஆறுகள் இப் பாரத நாட்டிலமைந்திருப்பதுபோல வேறெந்நாட்டிலுமில்லை. மனிதனுடைய சொற்ப

உழைப்பினாலேயே சாகுபடிக்கு வேண்டிய நீர்ப்பாசன வசதிகள் ஏற்படக்கூடிய நிலப்பரப்பின் நிலை நம் நாட்டில் அமைந்துள்ளது. தொன்று தொட்டு அம்மாதிரியான பாசன வாய்க்கால்களும் நீர்த்தேக்கங்களும் நம் நாட்டிலிருந்து வந்திருக்கின்றன. அப் பாசன வசதிகளைப் பாழாக்காமல் பழுதுபார்த்துப் பண்படுத்தி வந்தாலே நாட்டுக்குப் போதுமான அளவிற்குமேல் தானியம் விளையுமென்பதற்குச் சிறிதேனும் ஐயமில்லை.

## நாட்டின் வறுமைக்கும் பஞ்சங்களுக்கும் உண்மைக் காரணங்கள்

முன் நூற்றாண்டின் பஞ்சங்களிலும் இந் நூற்றாண்டின் நித்திய பஞ்ச நிலையிலும் நாட்டில் விளையும் தானியங்கள் நமக்குத் தாராளமாகக் கண்டு மிஞ்சும். நாட்டில் தானியம் விளைந்துகொண்டேயிருக்கிறது. ஆதலால் நமது நாட்டுப் பஞ்சம் இயற்கைப் பஞ்சமல்ல; ஆனால், செயற்கைப் பஞ்சமே. நம் நாட்டில் ஜனத்தொகை அபரிமிதமாய் வளருகிறதென்கிறார்கள். உண்மைக் காரணத்தை மறைப்பதற்கு பார்ப்போர் கண்களில் தெள்ளித் தூவும் புழுதி இதுவே. நாம் ஊர்க் குருவிகளைப்போல ஓர் ஆண்டுக்கு ஆறு முறை குஞ்சு பொறிப்பதில்லை. நாய்களைப்போல நாற்பது நாட்களில் கர்ப்பம் தரித்து ஐந்தாறு குட்டிகளைப் போடுவதில்லை. நமது பிறப்பு விகிதம் அநேக ஐரோப்பியச் சுதந்திர நாட்டு விகிதங்களைக் காட்டிலும் இன்னும் குறைவாகவே யிருக்கிறது நம் நாட்டு ஜனநெருக்கத்தைக் காட்டிலும் அதிகமான அடர்த்தியுள்ள நாடுகளெத்தனையோ உலகில் பஞ்சமென்பதே தெரியாமல் நாளுக்குநாள் ஓங்கிச் செழித்து வருகின்றன. இப் பஞ்சத்தின் மெய்க்காரணமென்ன? காரணம் நம்முடைய வறுமை; கோரமான வறுமையே; நமது இழிவான ஏழ்மையே. இக் கொடிய வறுமை பாரதத்தாயை வீழ்த்தி நெஞ்சைப் பிளந்து இரத்தத்தை உறிஞ்சித் தாண்டவமாடும் காட்சியைக் காணக் கண்களைத் திறந்து பாருங்கள். அப் பிரி



யமான சத்தியத்தை, அசௌகரியமான பிரத்தியக்ஷத்தை, அச்சம் பயக்குங் காட்சியை, மறந்தும் மறுத்தும் வெறுத்தும் நொடிப் பொழுதில் அழியப்போகும் போக வாழ்விற்கு இடையூறு வாரா வண்ணம், தங்களைத் தாமாக மயக்கிக்கொண்டு காலங் கழிக்கும் படிப்பும் பணமும் படைத்த பிரபுக்களல்லாதாரெல்லோரும் பார்த்துப் பயனடையலாம். கண்களிருப்போருக்கு நாட்டை வாட்டி வரும் வறுமையின் மூலத்தை நிரூபிக்க வேண்டியதில்லை. இவ் வறுமையின் மூலத்தைத் தேடிப்பிடிக்க வேண்டுவதில்லை. தடத்தைப் பிடித்தால், தானே தெளிவாகும்.

## வியாபார அநீதி

வளமுள்ள நாடு வறுமையால் வறண்டு வாடிச் சாயுமானால் அந் நாட்டின் வளம் (செல்வம்) செல்லும் வழியைப் பிடித்தால், தெள்ளென விளங்கும். நம் நாட்டையாளும் மன்னர்கள் ஏழ்கடல்களுக்கப்பால் இப் பூவுருண்டையின் மறுபக்கத்திலொரு மூலையிலமைந்திருக்கும் ஒரு புண்ணியத் தீவில் வசிக்கும் பெரும் பாக்கியம் படைத்த மக்கள். இம் மன்னர்களே நம் நாட்டு வியாபாரத்தையும் நடாத்துகிறார்கள். நம் நாட்டில் செலவழியும் செயற்கைப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிலாளிகளும் அவர்களே. அப் பொருள்களை யுண்டாக்குவதற்கு முன்பணங் கொடுக்கும் முதலாளிகளும் அவர்களே. நம் உள்நாட்டு உயிர்நிலைகளான போக்குவரவு சாதனங்களையும், வெளிநாட்டு வியாபார சாதனங்களையும், உள்ளங் கையிலடக்கி வைத்திருப்போரும் அவர்களே. நமக்குத் தர்மோபதேசஞ் செய்து, நாகரீக நுட்பங்களை நன்கு புகட்டி நம்மை நல்வழிப் படுத்தக் கங்கணங்கட்டிக் கொண்டிருக்கும் மகா புருடர்களும் அவர்களே! இப் பேருபகாரத்திற்குக் கைம்மாறு செய்ய, பஞ்சப் பக்கிகளான பாரத நாட்டு மக்களால் இயலாது. கடவுள்தான் கைம்மாறு செய்வார்.

நம் நாட்டுக் கடலோரங்களிலுங்கூட இந்தியர்கள் கப்பலோட்டி வியாபாரஞ் செய்யச் சாதனமளிக்க வேண்டுமென்ற மனோ

தாவை ஜனாப். ஹாஜீ சட்டசபையில் பிரேரேபிக்கிறாரென்றறிந்தவுடன், நம்மைக் காத்தாளும் ஆங்கிலேயர்களின் மனம் பதைக்கிறது.' என்ன பெருந்தன்மை! என்ன கருணை!! கடலில் ஆபத்துக்கு இடமிருக்கிறதல்லவா? கடலுக்குள் எத்தனை பூச்சாண்டிகள் இருக்கின்றனவென்று அறியாமையால் பேதைப் பாரத மக்கள் கப்பல் வியாபாரத்தில் ஆசைகொள்ளுகிறார்கள். அதுமுற்றிலுந் தவறு. பரோபகாரமே ஆங்கிலேயரின் கொள்கையாய் எப்பொழுதுமிருந்து வருகிறது. முன்னொரு காலத்தில் பதினேழாவது நூற்றாண்டில் உலாந்தநாட்டுக் கப்பல்களில் இந்திய நாட்டுப் பொருள்கள் ஏராளமாக இங்கிலாந்திற்குச் சென்று கொண்டிருந்தன. பரோபகாரச் சிந்தனையுள்ள ஆங்கிலேயர்கள் இங்கிலீஷ் கப்பலில் ஏற்றிய சரக்குகளைத்தான் இங்கிலாந்தில் விற்க வேண்டும் என்றும், அந்நிய நாட்டுக் கப்பல்களில் வரும் எச் சாமான்களும் இறக்குமதியாகக் கூடாதென்றும் சட்டம் செய்தார்கள். டச்சு மாலுமிகளுக்கும் கப்பல் முதலாளிகளுக்கும் கடலோடிக் கஷ்ட நஷ்டங்களைக் கொடுக்கச் சிறிதேனும் மனம் வரவில்லை. கி. பி. 1700-ம் வருடத்தில் இந்தியாவிலிருந்து இங்கிலாந்திற்குச் சென்ற பருத்திப் பட்டாடைகளின் விலை 2 கோடியே 82 லக்ஷம் ரூபாய்கள். இருநூறு வருடங்களுக்கு முன் ரூபாயின் விலை மதிப்பு (Value) இப்பொழுதிருப்பதைக் காட்டிலும் இருபது மடங்கு அதிகமாயிருந்ததென்பதை ஞாபகத்திலிருத்துங்கள். 1701-ம் ளு செப்டம்பர் மாதத்தில் இங்கிலாந்திலியற்றிய ஒரு சட்டத்தின் முன்னுரையைக் கேளுங்கள்.

“சென்ற இரண்டு வருடங்களாக பிரிட்டிஷ் இந்திய வியாபாரமானது எவ் விகிதத்தில் இருந்து வருகிறதோ அப்படியே நிகழ்ந்து வருமாயின் இந்த ராஜ்யத்திற்கு (பிரிட்டனுக்கு) கட்டாயமான முறையில் அபாயகரமாய் முடியும். ஏனெனின் இவ் வியாபாரத்தின் காரணமாகக் கஜானா காலியாகிக் கொண்டு வருகிறது. புதிய நாணயங்கள் வார்க்கப்படுகின்றன. குடிகள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். இன்னும் தொழில் செய்து பொருள் உண்டாக்குபவரில் பெரும்பாலோர் நாட்டுக்குச் சுமையாகி



விட்டார்கள். இச் சுமையின் காரணத்தால் குடிகள் நாசமடைந்து வருகின்றனர். இன்னும் நாட்டுக் குடிமக்கள் வெளி நாடுகளுக்குச் சென்று தங்கள் பிழைப்புக்கு வழிதேட நேரிடுகிறது. ஆதலால் மேற்கூறிய அபாயங்களை நீக்குவதன் பொருட்டு பார்லிமெண்டின் இரு சபைகளின் தீர்மானத்தின் பேரிலும் ஆங்கில அரசரின் சம்மதத்தினாலும் இச் சட்டம் இயற்றப்படுகிறது” என்று ஆரம்பித்து நாட்டில் ஒருவரும் இனி இந்தியாவிலிருந்து வரும் ஆடைகளையாவது, இந்தியப் பட்டுப் பருத்தி நூல்களினாலாயினும் நெய்த உடைகளையாவது உடுக்கக்கூடாதென்று உத்தரவு பிறப்பித்தார்கள். இந்தியத்துணி வியாபாரஞ் செய்பவர்களுக்குக் கொடிய தண்டனைகளை விதித்தார்கள். இந்தியா ஆங்கிலேயர் கையிலகப்பட்ட பிறகும் 1813-ம் ளு வரை இந்தியத் துணிகள் இங்கிலாந்தில் நூற்றுக்கு 50 முதல் 60 வரை இலாபத்தில் விற்கப்பட்டுவந்தன. அப்பொழுது நூற்றுக்கு 80 முதல் 90 வரை இந்தியத் துணிகளின் மேல் இறக்குமதி வரிவிதித்து இங்கிலாந்திற்குள் புகாமல் செய்து விட்டார்கள். நமது உள் நாட்டிற்குள்ளாகவே ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்லாமல் நாட்டுத் துணிகளுக்குக் காதத்திற்கொரு சுங்கம் விதித்து விற்க வொட்டாமல் பண்ணிய கொடுமையையும், நம் நாட்டு நெசவுக்காரர்கள் தங்கள் தொழிலைக் கைவிடும்படி அவர்களுக்கு இழைக்கப்பட்ட சொல்லொணாக் கொடிய துன்பங்களையும், நம் நாட்டுப் பருத்தியால் சீமை ஆலைகளில் நூற்று நெய்யப்பட்ட துணிகளுக்கு நம் நாட்டுத் துறைமுகங்களைத் திறந்து வேண்டிய உதவி கொடுத்ததையும் விரித்துரைக்கின் கேட்போர் கல்லாலடித்த நெஞ்சு படைத்தவர்களா யிருத்தல் வேண்டும். இங்ஙனம் இந்தியாவின் கைத் தொழில்களான நூற்றல் நெய்தல்களின் மென்னியைப் பிடித்து நெருக்கிப் பிசைந்து முறித் தெறிந்து விட்டார்கள். ஆனால் நம் நாட்டுக் கல்லூரிகளில் நீராவியால் ஓடும் இயந்திரங்கள் இங்கிலாந்தில் நிர்மிக்கப்பட்டதன் பயனாக இந்திய நெசவு நூல் தொழில்கள் நஷ்டமடைந்தன வென்று கற்பிக்கப்படு

கிறது. நாளைக்கு 17½ ரூபாய் மாதச் சம்பளத்தில் குமஸ்தா வேலைக்குத் தயாரிக்கப்படும் மாணவர்களுக்கு வேறு, என்ன பாடம் வேண்டும்? அஃதொரு புறமிருக்க **பஞ்சத்திற்குக் காரணம் கொடிய வறுமை. அக் கொடிய வருமைக்குக் காரணம் நமது நாட்டுக் கைத் தொழில்களெல்லாம் நாசமடைந்திருப்பதே. அந் நாசத்திற்கு மூலம் பிரிட்டிஷ் ராஜீய வியாபார நீதி முறைகளேயாம்.**

வியாபாரம் எதிர்முகமாக ஓடினால் எவ்வளவு கஷ்டநஷ்டங்களேற்படுமென்பதற்கு, நாம் முன் கூறிய 1701-ம் வருஷத்திய பிரிட்டிஷ் சட்டத்தின் முன்னுரையே போதுமான சான்றாகும். நம் நாட்டு எளிய மக்கள் மாதந்தோறும் ஆயிரக்கணக்காய்க் கப்பல்களிலேறி கடல்களைக் கடந்து பிரிட்டிஷார் குடியேறிய நாடுகளின் காப்பி, தேயிலை, ரப்பர் கரும்புத் தோட்டங்களிலே அவர்கள் படும் பாட்டை கவி பாரதியாரின் "கரும்புத் தோட்டத்திலே" என்ற பாடலைக் கேட்டவர் மனதில் பதிந்து காதுகளில் ஒலித்துக்கொண்டேயிருக்கும் உரைகள் உண்மை நிலையையே விளக்குகின்றன. பிரிட்டிஷ் ராஜீய வியாபார நீதி முறைகள் நம் நாட்டாரின் தோள்களில் சுமத்தப்பட்டிருப்பதற்குக் காரணம், நமக்கு சுயராஜ்யம் இல்லாததால்தான் என்று நான் கூறவும் வேண்டுமோ?

"நம்முடைய துணையற்ற நிலையினுடையவும் பேடித்தனத்தினுடையவும் கதை" என்ற மகுடமிட்டு சென்ற ஜூன்ஸ்ரீ 6உ பஞ்சாப், 'கேசரி'ப் பத்திரிகையில் மகாத்மா காந்தியடிகள் எழுதுவதாவது:— "நம் நாட்டு ஏற்றுமதிப் பொருள்களில், பருத்தி, தானியம், எள்ளு, நிலக்கடலை முதலிய எண்ணை விதைகள், தோல்கள், உலோக வகைகள் முதலியன முக்கியமானவை இவைகளெல்லாம் நமது நாட்டிலேயேயிருந்து நன்மை பயக்கக்கூடியவை. நமக்குள் அவைகளை உபயோகப் படுத்துவதற்குச் சாமார்த்தியமில்லை. அவைகளைப் பண்படுத்திச் சரக்காக்கும் தொழில்களுக்கு முதலும் நம்மிடமில்லை. அல்லது, இம்மாதிரியான சௌகரியங்களை நம் நாட்டினருக்குச் செய்து கொடுப்பது, நமது கடமை யென்று கருதும் சர்க்காரும் நமக்கில்லை. பாரத நாட்டின் ஏற்றுமதியின் கதை நம்முடைய அசகாய நிலையினுடையவும் பேடித்தனத்தினுடையவும் கதையேயாம். அந் நிலை விளக்கிக் காட்டுவதென்னவெனின், நம்முடைய விதேசி அரசாட்சி உலக நன்மை பயக்கும் காரியங்கள் செய்வதில், எவ்விதத்திலும் பிரயோஜனமற்றதாகவே யிருக்கிறது" என்பதேயாகும் ...........................................................



"நமது இறக்குமதியும் அதே துணையற்ற நிலையினுடையவும், பரிதாபகரமான ஸ்திதியினுடையவும் கீர்த்தனையின் பல்லவியையே பாடுகிறது. மூன்று கோடி ரூபாய் பெறுமான சிகரெட்டும் நம்முடைய வீழ்ச்சியின் வேகத்தைப் பெருக்குகின்றன.................
அவைகளில் பருத்தி ஆடை இறக்குமதி ஒன்றே நம்முடைய வெட்கத்தையும் துர்ப் பாக்கியத்தையும் வெளியாக்குகிறது...............
எந்த ஜனங்கள் தங்களுடைய தனத்தை இவ்விதம் வெளி நாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் நாளுக்கு நாள் எளியவர்களாயும் துணையற்றவர்களாயும் ஆவது நிச்சயமான முடிவு."

## இந்தியருடைய கேவலமான வருமானம்

ஒரு இந்தியரின் சராசரி தினசரி வருமானம் 1அணா 7பைசா. (ஒரு ஆங்கிலேயரின் தினசரி வருமானம் 2 ரூபாய் 4 அணா.) சுதேச சமஸ்தானங்களைச் சொந்தச் சொத்தாகப் பாவித்துவரும் சுதேச மன்னர்களுடைய கோடிக் கணக்கான பண வருவாயும், பதினாயிரம் பட்டம் சூட்டப் பெற்ற மகாராஜாக்கள், ராஜாக்கள், நவாப்புகள், ஜமீன்தார்கள், மிட்டாதார்கள், மிராசுதார்கள், மில் முதலாளிகள் முதலானோர்களின் சராசரி ஒரு லக்ஷ ரூபாயுள்ள வருட வருவாயும், மாதமொன்றுக்கு ஆயிர ரூபாய் சராசரி வருவாயுள்ள, நிலச்சுவான்தார்கள், தோட்டக்காரர்கள், வியாபாரிகள், லேவாதேவி செய்யுஞ் செட்டிமார்கள், மார்வாடிகள், உத்தியோகஸ்தர்கள், வக்கீல்கள், முதலியோர்களுடைய மொத்த வருமானமும், மாதமொன்றுக்கு நூறு ரூபாய் சராசரி வருமானமுள்ள, எட்டு லக்ஷம் விவசாயிகள், சில்லரைக் கடை வியாபாரிகள், கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள் முத

வியோர்களின் மொத்த வருவாயையும் ஒன்று கூட்டிப் பிரித்தெடுத்த ஈவுதான் மேற்கூறிய 1 அணா 7 பைசா. இதைத் தவிர மாதம் சராசரி 30 ரூபாய் வருமானமுள்ள மத்திய வகுப்பினர் ஓர் இருபது லக்ஷம் உண்டு. மேற்கூறிய பிரபு வர்க்கத்தினரையும், பணக்கார வர்க்கத்தினரையும், நடுத்தர நிலைமையிலிருக்கும் மத்திய வகுப்பாரையும் அவ்வவர்களை ஆசிரயித்திருக்கும் ஏனைய குடும்பத்தினரையும் விலக்கிப் பார்ப்போமாகின் எஞ்சிய 30 கோடி மக்களின் உண்மையான சராசரி வருமான மென்னவென்று புலப்படும். அவர்களில், திண்ணமாக அடி வயிறுகளில் வடவாக்கினியை மூட்டிக்கொண்டிருக்கும், நித்திய பஞ்சத்தால் வாடும் நிர்க்கதியான பத்துக்கோடி மக்களையும் விலக்கிப் பார்த்தால் அரைக்கஞ்சி, கால் கஞ்சி குடிக்கும், இருபதுகோடி மக்களின் நிலையும் மிகவுந் துக்ககரமானது. இவ்விருபதுகோடி மக்களில் ஒரு பத்துக்கோடி மக்களுக்கு நித்தியம் சோமவாரப் பிரதோஷ விரதம்; மறு பத்துக் கோடிக்கு நித்தியம் சனிக்கிழமை, கார்த்திகை விரதங்கள். இடையிடையே வாரமிருமுறை ஏகாதசி விரதங்கள் நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே வரும். இராஜாங்கத்தின் சாஸனச் செலவுகளெல்லாம், இவ்விருபதுகோடி ஏழைகள் உழுதுண்டாக்கிய தானியங்களை விற்றுக் கொட்டப்பட்டவையல்லவா? மத்திய சர்க்காருக்கு வருடந்தோறும் வரவு செலவுச் சிட்டைப் பட்டியலில் ஏறும் நூற்று முப்பதுகோடி ரூபாய்கள் எங்கிருந்து வருகின்றன? மாகாண கவர்ன்மெண்டுகள் வசூல் செய்யும் பல பத்துக்கோடி வருட வருமானத்தின் வரலாறு என்ன? இவை தவிர சுதேச மன்னர்களின் கோடிக் கணக்கான ரூபாய்களும் லோக்கல் போர்டுகளின் வருவாயும், ஆங்கில தேசத்துடன் மற்ற வெளி நாடுகளும், நம் நாட்டு வியாபாரத்தால் அடையும் அபரிமிதமான லாபங்களும் எங்கிருந்து வருகின்றன? ஏர்ச் சாலில் சொட்டிப்பாயும் ஏழைக் குடியானவனுடைய நெற்றி வியர்வை யன்றோ சர்க்கார் அள்ளித் தெளிக்கும் வற்றா ஊற்றுநீர்? அந் நெற்றி வியர்வையுடன், அவனுடைய குழந்தைகளின் கண்ணீரும் தாய், மனைவிகளின் ஹிருதய இரத்தமுங் கலந்திருக்கிறதன்றோ?



## இந்தியரது அதிகமான மரண விகிதம்

உணவுக் குறைவால் எப்பொழுதும் உழைக்கும் உடல்கள் எத்தனை நாள் உலக வாழ்வில் ஊன்றி நிற்கும்? ஓர் ஆறுமாத காலத்தில் கொள்ளைக் காய்ச்சலால் (Influenza) 72 லக்ஷம் இந்தியர்களிறந்தார்களென்றால் வேறு வியப்பென்ன? வருடந்தோறும் மக்களுக்கு வேண்டிய உணவு கிட்டாமல் எதையோ தின்று பிழைக்கும் 30 கோடி ஜனங்களில் எத்தனையோ பத்து லக்ஷம் பிளேக்கிலும், காலராவிலும், அம்மையிலுஞ் சாகிறார்களென்றால் அதைக்காட்டிலும் வருந்தத்தக்கது வேறு என்ன? இந்தியர்களுடைய சாவு விகிதம் மற்ற சுதந்தர நாடுகளின் விகிதங்களைக் காட்டிலும் எவ்வளவோ அதிகமாக இருக்கிறதென்பதில் வியப்பென்ன?

வருடந்தோறும் ஆயிரம் மக்களில் இறப்பவர் தொகை

| நாடு | ௵ 1900 | ௵ 1910 | ௵ 1920 | ௵ 1927 |
|---|---|---|---|---|
| அமெரிக்கா ... | 17.4 | 14.3 | 11.9 | 9.5 |
| இங்கிலாந்து ... | 18.2 | 16.4 | 12.5 | 9.8 |
| இந்தியா ... | 30.5 | 37.4 | 37.4 | 32.2 |

| | |
|---|---|
| ஒரு இந்தியரின் சராசரி ஆயுள் வருடம் ... | 22 |
| ஒரு ஆங்கிலேயரின் ,, ,, ... | 52 |
| ஒரு அமெரிக்கரின் ,, ,, ... | 54 |

39 வருடங்களுக்கு முன் இந்தியனுடைய சராசரி ஆயுள் 32 வருஷங்களாக விருந்தது. இந்தியரின் கதி இப்பொழுது எவ்வளவு தீவிரமாய் மயானத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறதென்பதை எடுத்துரைக்காமலே நன்கு விளங்கும். எமன், நம்மில் அடியடிக்குகளி லிருக்கும் மனிதர்களை அதி வேகமாய் உருவிக் கொண்டிருக்கிறான். மேலே மதக்கங் கொண்டு மிதந்து கிடக்கும் உயிர் வாழ்க்கையின் அருமையையும், பெருமையையும், பொருளையும், பயனையும் அறிந்து அனுபவித்து வருவதாகப் பகற் கனவு

கண்டு, கண் துஞ்சியிருக்கும் எளிமையால் வருந்தாத ஒரு கோடியே சொச்ச மக்களும் அடியடுக்குகள் எடுபட்ட பின், கால்வாரப்பட்ட பயில்வான்போல் அடித்து விழப்போகிறார்கள் என்பது உறுதி. இப்படி இந் நாடு சுடுகாடாக மாறிக்கொண்டே வருகிறது. ஆஹா! என்ன உருக்கம் சர்க்காருக்கு நம்மிடத்தில்!

## சேனைக்கு அபார செலவு

இந்தியர்களின் ஆயுள் குன்றிக் குன்றி இவ்வளவு அற்பாயுளாக இருந்தபோதிலும், இந்தியா இடுகாட்டின் வடிவை எடுத்திருந்தபோதிலும், இந்தியர்கள் அற்பகாலம் ஜீவித்திருக்கும் வரையிலாவது, உண்ண உணவும் உடுக்க உடையும் இல்லாதவர்களாயிருந்தபோதிலும் நமது நாட்டைக் காக்க வருடமொன்றுக்கு 55 கோடி ரூபாய்கள் சேனைகளுக்கு மட்டும் அரசாங்கம் செலவழித்து வருகிறது. நித்திய பஞ்சத்தால் கண் பஞ்சடைந்து மயானத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் 30 கோடி நடைப் பிணங்களைக் காக்க என்ன கருணை! என்ன உருக்கம்!! இதல்லவோ வெள்ளையரின் பொறுப்பு (White man's burden.) இவ்வளவுமட்டுமா நம் மதிகார வர்க்கத்தினரின் நல்லெண்ணமுஞ் சுருக்கம்? ஆங்கிலப் போர்ச் சேவகர்கள் இந்திய சர்க்காருக்கு நாளொன்றுக்கு 4½ லக்ஷம் ரூபாய்கள் அதிகச் செலவு ஏற்படுமென்ற சிக்கனக் கருத்தாலல்லவோ தினந்தோறும் ஆளொன்றுக்கு * 8¾ வீசை மாட்டிறைச்சியை மென்று விழுங்கி, துப்பாக்கியைத் தோளில் தூக்கி கைபர் கணவாயில் பாராக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்! உலக

* சில நாளைக்கு முன் ஸ்டேட் கௌன்சிலில், ஸேட் கோவிந்ததாஸ், பிரிட்டிஷ் சேனைக்காகக் கறவைப் பசுக்களை இறைச்சிக்காக, அறுக்கக்கூடாதென்ற தீர்மானத்தைப் பிரேரேபனை செய்தபோது, அத் தீர்மானத்தை ஆக்ஷேபித்து. இந்திய சேனாதிபதி இந்தியாவிலிருக்கும் ஆங்கிலேயப் படைகளுக்கு மாட்டுக் கறிகளுக்குப்பதிலாக ஆட்டுக் கறியை உணவுக்குக் கொடுப்பதாயிருந்தால் நாளொன்றுக்கு இந்திய சர்க்கார் 4 லக்ஷத்து 50 ஆயிரம் ரூபாய்கள் அதிகச் செலவு செய்ய நேரிடுமென்றுரைத்தார். அவர் கூறிய சொற்களின் ஆதாரத்தைக் கொண்டு கணக்கிடப்பட்டது.



த்தில் என்னுட்டிலும் சேனைக்காக இவ்வளவு பணம் செலவழிக்கப்படுவதில்லை. மற்ற நாடுகள் தங்கள் வருவாயில் நூற்றுக்கு எவ்வளவு, சேனைகளுக்காகச் செலவு செய்கிறதென்பதைப் பாருங்கள்.

| நாடு | | மொத்த வருவாயில் நூற்றில் சேனைக்கு எத்தனை மடங்கு செலவு | மொத்தச் செலவில் நூற்றில் சேனைக்கு எத்தனை மடங்கு செலவு |
|---|---|---|---|
| இந்தியா | .... | 70 7 | 63 8 |
| பிரிட்டன் | ... | 45 0 | 53 7 |
| கானடா | ... | 20 0 | 24 2 |
| தென் ஆப்பிரிக்கா | | 4 5 | 5 2 |
| ஸ்பெயின் | ... | 22 8 | 17 6 |
| பிரான்சு | ... | 22 4 | 20 0 |
| இத்தாலி | ... | 20 0 | 17 3 |
| அமெரிக்கா | ... | 35 9 | 38 2 |
| ஜப்பான் | ... | 49 0 | 49 0 |

செல்வம் பொங்கி வழியும் மற்றைய நாடுகளெல்லாம் தங்கள் மொத்த வரவு செலவுகளில் நூற்றுக்கு எவ்விகிதத்தின்படி செலவழிக்கின்றனவென்பதைக் கவனியுங்கள். நம்நாட்டில் மடியில் மூடிய நித்திய தரித்திரத்தைக் காக்க, எவ்வளவு பணம் வீசி இறைக்கப்படுகிறதென்பதையும் பாருங்கள். சேனைச் செலவு எவ்வளவு தாராளம்! ஆனால் ஆரம்பக் கல்விக்காயினும், நாட்டுப் புறங்களின் ஆரோக்கியத்திற் காயினும் ஒரு செம்புச் சல்லியேனும் கிடையாது! நகரங்களின் கல்லூரிகளுக்கும் ஆஸ்பத்திரிகளுக்கும் செய்யும் செலவிற்காக கள்ளுண்டு, கஞ்சாக்குடித்து, அபினுண்டு, உயிர் வாழ்விற்கும் உணவிற்கும் இன்றியமையாத உப்புக்கு உயர் விலைகொடுத்து வாங்கியுண்டு சர்க்காருக்கு உதவிபுரிய வேண்டியிருக்கிறது!

## உயர்தர உத்தியோகஸ்தர்களுக்கு அதிகச் சம்பளம்

ஸிவில் சர்விசுக்கு சம்பளம் படி வகைகளில் வருடச் செலவு ரூ 13 கோடி. மிலிடரி சர்விசுக்கு ரூ 26 கோடி. மற்ற நாடுகளி

ளெல்லாம் கற்றவரின் தொகை நூற்றுக்கு நூறு அல்லது நூற்றுக்கு ஒன்றிரண்டு குறை. நம்மவர்களிலோ எழுத்தறிந்தவரின் தொகை நூற்றுக்கு எட்டு. ஏழைக் குடியானவனுடைய நெற்றி வியர்வையும், குழந்தைகளின் கண்ணீரும், தாய்மார்களின் ஹிருதய இரத்தமுங் கலந்த ஊற்றுக்குழிவழி வந்த பணம் போகும் போக்கைப் பாருங்கள். நாலு கோடி மக்களில் தண்டவாளம் போகும் தடங்களிலெல்லாம் சலூன்களேறிச் சவாரி செய்வதற்கு மூன்று மந்திரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 5000 சம்பளம்! சமுத்திரத்திற்குள் கடலையே ஒரு காலத்திலுண்டு ஏப்பம் விடப் போகும் வடவாக்கினி அடியிலும், சிரித்து விளையாடும் அலைகள் புரளும் கடல் நீர்மேலும் இருப்பது நம் நாட்டு வடவாக்கினி குண்டங்கள் அடியிலும் ஆனந்த வாழ்வில் களித்து அலைகள்போல் வீசி விளையாடும் பிரபுக்கள், மேல் மிதந்திருப்பதை யொக்கும்.

சென்ற மேமீ 23௳ நவஜீவன் பத்திரிகையில் காந்தியடிகள் எழுதியிருக்கும் பின்வரும் வாக்கியங்களைச் சற்று கவனியுங்கள்.

> “சிறிது ஆழ்ந்த யோசனை செய்வதினால் அதிகச் சம்பளங்கள் பெரும்பான்மையாக பிரிட்டிஷ் ஆட்சியில் உண்டான இலாக்காக்களிலும், பிரிட்டிஷ் ஆட்சியை நிலை நிறுத்துவதற்குச் சில அம்சங்களில் உதவியாயிருக்கும் தொழில்களிலுமே கிடைக்கின்றன என்பது நன்கு புலப்படும். எந்த தேசத்தில் பிரதி மனிதனுடைய சராசரி தினசரி வருமானம் 7 பைசாவிலிருந்து $1\frac{3}{4}$ அணாவுக்கு மேல் இல்லையோ எந்த நாட்டின் பத்துக் கோடிமக்கள் (ஆண் பெண்கள்) தினந்தோறும் அரைவயிறு கஞ்சி குடித்து ஜீவித்திருக்கிறார்களோ அத் தேசத்தில் அதிகச் சம்பளங்கள் இருக்க இயலா, அல்லது இருக்கவுங்கூடாது. தனி உத்தியோகத்தினர்களின் சம்பளம் ஏற, ஏற, ஏழைகளின் தலைச்சுமைத் தாழத் தாழ அழுத்தும்.”

இப்பொழுது வேலிபயிரை யுண்ணும் அதிசயத்தைக் காண்கிறோம், பயிரைப் பாதுகாக்கவேலி யென்றும், எஞ்ஞான்றும் பயிர் வேலிக்குப் பலியாகக்கூடாது என்றும் உணர்வீராயின், நமக்கு ஏன் சுயராஜ்யம் வேண்டும் என்பதற்குக் காரணத்தையும் கண்டவராவீர்களென்பது உறுதி.



## ஆகையால் நமது சகல கஷ்டங்களும் நீங்குவதற்கு நமக்குச் சுயராஜ்யமே வேண்டும்

இவை எல்லாவற்றைக் காட்டிலும் பராதீனத்தால் விளையும் பரிதாபமான பலன் நம்மை நாமே திருத்திக்கொள்ளச் சுதந்திரமற்றிருத்தல். பொது ஜனங்களுக்குத் தன் நன்மை எளிதில் புலப்படுவதில்லை. அவர்களைத் திருத்த நம் நாட்டு அறிஞர்களுக்காயினும் அதிகாரங் கிடையாது. சுதந்திரமிருந்தால்தான் நாடு திருந்துமென்று உலக தேச சரித்திரங்களைச் சற்று நோக்கினாலே நன்கு தென்படும். சுயராஜ்யமிருந்தால் நமது ஏழைகளின் வறுமையை நீக்க முயற்சி யெடுக்கலாம். வியாபாரத்தை நாட்டுக்கு லாபகரமான வழிகளில் திருப்பலாம். சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் இங்கிலாந்து, இப்பொழுது நம் நாடு இருப்பதுபோலவே தற்குறிகள் நிறைந்த நாடாகவே யிருந்தது. கட்டாயக் கல்விச் சட்டத்தை இயற்றிப் பொது ஜனங்களுக்குத் தன்னலம் அறியும் சாதனத்தைக் கையில் கொடுத்துவிட்டது அந்நாட்டு அரசாங்கம். சென்ற நூற்றாண்டில் வெகு காலம்வரை பிரிட்டிஷ் கப்பல் வியாபாரிகள் ஆப்பிரிக்காவில் நீகிரோவர்களைப் பொருள்கொடுத்து வாங்கியோ, வேட்டையாடிப் பிடித்தோ கப்பல்களிலேற்றி அமெரிக்காவிற்கு அனுப்பி அம் மனிதர்களை அடிமையாக விற்றுப் பொருள் சம்பாதித்து வந்தார்கள். வில்பர்போர்ஸ் என்னும் ஒரு மகான் அக்கொடிய அடிமை வியாபாரத்திற்கு விரோதமாய் ஓர் இயக்கத்தைக் கண்டு அவ் வியாபாரத்தை யொழிக்கச் சட்டத்தை இயற்றும்படி அந் நாட்டுச் சர்க்காரைக் கட்டாயப்படுத்தினார். அக் கொடுமையான அடிமை வியாபாரம் முற்றிலு மொழியுமுன் கணக்கற்ற அடிமைகள் வெறி கொண்ட நாய்ச்சாவு செத்தார்கள். எப்படி யெனின் அடிமையை யொழிக்கச் சட்டமியற்றிய பின், பாராக் கொடுக்கும் சர்க்கார் போர்க் கப்பல்கள் சோதனைக்காகக் கிட்ட நெருங்கிவிட்டால் அடிமை வியாபாரஞ் செய்யும் ஆங்கிலக் கப்பற்காரர்கள், கப்

பலிலிருக்கும் நீகிரோவர்களைத் தூக்கித்தூக்கி கடலில் வீசியெறிந்துவிட்டுச் சோதனைக்குமுன், கப்பலைக் காலியாக்கி வைத்து விடுவார்கள். இப்படி அநேகந் தடவைகளில் பொருள் நஷ்டமடைந்த பிறகுதான் அதிலீடுபட்ட கப்பற்காரர்கள் அடிமை வியாபாரத்தைக் கைவிட்டனர்.

சில நாளைக்கு முன் இட்டலி தேசத்திற்குச் செல்லும் ஒரு ஆங்கிலக் கன்னியின் கைக்கூடையொன்றில் வாழைப் பழங்கள் இருந்தன. இட்டலி தேசத்திற்குள் வாழைப் பழங்கள் இறக்குமதி செய்யக்கூடாதென்ற சட்டமும் இயற்றப்பெற்று அமுலிலிருக்கிறது. இட்டலி எல்லைப் போலீஸார் அம் மாதைப் பழங்களுடன் நாட்டுக்குள் நுழையக்கூடாதென்று தடுத்துவிட்டனர். ஐயோ! பாவம்!! இறுதியில் அப் பெண்மணி அக் கூடைப் பழத்தை வயிற்றிற் போட்டுக்கொண்டு இட்டலி மண்ணில் காலடியெடுத்துவைக்க நேர்ந்தது. ஏன் இச் சட்டம்? இட்டலி தேசத்தில் வாழை பயிர் செய்யப்படுவதில்லை. ஆதலால் தேசத்தின் சொத்து (வீணாக) வெளிநாடுகளுக்குச் செல்லக்கூடாதென்றே. இட்டலி சுதந்திர நாடு. அமெரிக்காவிலுள்ள ஐக்கிய நாடுகளிற் சட்டத்தால் மதுபானத்தையொழித்துவிட்டார்கள். சாராயம் காய்ச்சி வடித்து விற்கும் முதலாளிகளும், பணக் கொழுப்பால் போதையைத் தேடித் திரியும் விடலைகளிற் சிலரும் எவ்வளவோ எதிர்த்தும், குடிக்கச் சுதந்திரம் வேண்டுமென்று போராடியும் பொது மக்கள் காது கொடுக்கவில்லை. இப்பொழுது திருட்டுத்தனமாகச் சாராயப் பெட்டிகளைக் கடலோரங்களிலிறக்கும் இங்கிலீஷ் கப்பல்களை அமெரிக்க சர்க்காரின் போர்ப்படகுகள் பீரங்கி குண்டுகளாலடித்து மூழ்குவிக்கின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகள் சுதந்தரமுடையன.

நம் நாட்டை விட்டு நாள்தோறும் வெளியே போகும் பொருள்களெல்லாம் நமக்கு அத்தியாவசியமானவை. பயிர்களுக்குரைவான விலைமதிப்புக்கடங்கா எலும்புகளும், புண்ணாக்குகளும், மட்டுமிதமில்லாமல் ஏற்றுமதியாகின்றன. வட இந்தியாவில், சென்ற ஒன்றரை வருடமாக இமயமுதல் நருமதைவரை, சிந்து முதல் வங்காளம்வரை கொடிய பஞ்சம் சூரையாடிக் கொண்டிருக்கிறது. நம் நாட்டிலிருந்து உயிர்க்குரிய உணவுப் பொருள்களை வாரிக்கொண்டு போகும் வெளி நாட்டுக் கப்பல்கள் அணியணியாய்த் துறைமுகங்களில் நங்கூரம் பாய்ச்சியிருப்பதைத் தடுப்பார் யாருமில்லை.



நிலச்சுவான்தார்களுக்கும், ஜமீன்தார்களுக்கும், விளைந்த தானியத்தை ஏறியவிலைக்கு விற்கும் சுதந்தரத்திற்கு வெளி நாட்டுக் கப்பல் வியாபாரம் வேண்டுமாம்! உழுத குடியானவன் கவ்வுங் குடலைக் கையாற் பிடித்துப் பிசைந்துகொண்டு குழந்தை குட்டிகளுடன் குடிக்கக் கூழ் இல்லாமல் கடனுக்காகக் கால்தேய அலைந்து கஞ்சி காய்ச்சிக் குடலை நனைத்து அடுத்த கதிரறுப்புக்காகக் காத்திருப்பவனின் சுதந்திரத்தைக் காப்பவர் எவர்? கடவுளே!

பெண்டு பிள்ளைகளைக் காப்பாற்ற வேலை செய்த கூலிப் பணத்தைக் கள்ளு மொந்தையைக் கண்முன் காட்டி, மனதைக் கவர்ந்து மடிப் பணத்தைப் பிடுங்கும் கள்ளுக்கடை கண்டிராக்டர்களுக்கு வியாபார சுதந்திரம் வேண்டுமாம்! நாள் முழுவதும் உழைத்த ஏழைக்கு உடலலுப்பை குடித்துப் போதையில் மயங்கி மறக்கச் சுதந்திரம் வேண்டுமாம்! ஆனால், வீட்டில் பட்டினியால் பதை பதைத்துச் சாகும், மனைவி மக்களின் உரிமையைக் காப்பவர் எவர்? கடவுளே!

நம் நாட்டில் வழங்கிவரும் விசித்திர நீதியை நினைக்க நினைக்க, கொதிக்கும் மனம் தணியாது. செந்தழும்பும் புண்ணாகுமன்றோ? ஆதலால் வாசகர்கள் இவைகளையெல்லாம் நினைத்து ஏங்கிக் கிடக்காமல், ஊக்கத்தைக் கைப்பிடித்து, உயர் வாழ்வின் உரிமைகளையளிக்கும் சுயராஜ்யத்தின் வழியைத்தேடித் தெளிவாராக.

ஓப். தக். ஷ

198514
சென்னை-600 0

# "பாரதி"

## ஒரு மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓர்இனம்
எல்லாரும் இந்தியா மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர். (பாரதி.)

ஆசிரியர் : ரா. நாராயணஸ்வாமி.

| மாலை 1 | உத்தமபாளையம் 1929-௵ ஜூலை ௴ | மணி 7 |
|---|---|---|


# ஆரம்ப ஆசிரியர்களின் சங்கம்.


திரு. ரா. நாராயணஸ்வாமி அவர்கள்,
ஆசிரியர், "பாரதி."


கிளர்ச்சி கிளர்ச்சி! எங்கும் கிளர்ச்சி!! எதற்கும் கிளர்ச்சி!!! இந்த 20-ம் நூற்றாண்டில் பலவகைப்பட்ட கிளர்ச்சிகள் தாண்டவமாடிக்கொண்டிருக்கின்றன. இக் கிளர்ச்சியின் பயனாக ஒவ்வொரு தொழிலாளரும் ஒவ்வொரு சமூகத்தாரும் ஒற்றுமையுடன் சேர்ந்து, தங்கள் தேசத்திலுள்ள தங்கள் தங்கள் சமூகத்தாருடன் ஒன்றுபட்டு, தங்களுடைய சமூதாய முன்னேற்றத்தை நாடி, வேண்டிய வேலைகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு



கொள்கைக்காரரும் ஒவ்வொரு தொழிலாளரும் தங்கள் தங்கள் சித்தாந்தத்தை உலக முற்றிலும் பிரச்சாரம் செய்து பரப்பித் தங்களுடைய இனத்தாரை வையக முழுவதும் உண்டாக்கித் தங்களைப் பலப்படுத்த முயன்றுகொண்டிருக்கிறார்கள். இது சங்க யுகம். தாழ்ந்த நிலையில் இருப்பவர் முதல் உயர்ந்த படியில் இருப்பவர் வரை தங்கள் அபிவிருத்திக்காகச் சங்கங்கள் ஸ்தாபித்து வேலை செய்கிறார்கள். இந்திய மன்னர்களுக்கெல்லாம் சேர்ந்து மன்னர் சங்கம் (Chamber of Princes) என்று ஒரு சங்கம் இருக்கிறது. உலகத்திலுள்ள தேசங்களெல்லாம் சேர்ந்து, "சர்வதேச சங்கம்" (League of Nations) என்று ஒன்றை ஏற்படுத்தி யிருக்கின்றன.

உலகத்திலுள்ள எத் தொழிலும் அனுகூலம் அடைவதற்கு ஒற்றுமை அவஸியம் வேண்டும். ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித்தனி ஸ்தாபனமிருந்தால்தான் தம் தம் குறைகளைக் கண்டறிந்து, அவைகளை நிவர்த்தித்து, தங்கள் தொழிலை அபிவிருத்தி செய்து, வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள இயலும். இதனாலேயே இப்பொழுது ஆயிரக்கணக்காகச் சங்கங்கள் உண்டாகிக் கொண்டிருக்கின்றன.

## ஆரம்பக் கல்வி

பண்டை நாட்களில் குருகுலங்களின் மூலம் கல்வி கற்பிக்கப் பட்டு வந்தது. அப்பொழுது ஆசிரியர்களுக்கு உன்னதப் பதவி யிருந்தது. அன்றியும் அவர்களுக்கு அதிகமாக உதவிகளும் கிடைத்தன. இக்காலத்தில் உபாத்தியாயர்களின் நிலை மாறிவிட்டதின் பயனாக ஆரம்ப ஆசிரியர்கள் மிக மிகக் கஷ்டப்படுகிறார்கள். தினந்தோறும் தங்கள் வாழ்க்கையைக் கழிப்பதற்கே திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி நினைக்க நினைக்க எமக்குப் பெரிதும் வருத்தம் உண்டாகிறது. குழந்தைப் பருவமுதல் கிராமங்களில் அநேக ஆரம்ப ஆசிரியர்களுடன் அன்னியோன்யமாய்ப் பழகி வருகிறபடியால், அவர்களின் கஷ்ட நஷ்டங்கள் எமக்கு மிக மிகத் தெளிவாகத் தெரிகின்றன.

எந்நாட்டில் ஆரம்பக்கல்வி நன்கு வேரூன்றிச் செழித்து வெகு வேகமாய் வளர்ந்துகொண்டு வருகிறதோ, எந் நாட்டில் கட்டாய ஆரம்பக் கல்வி ஏற்படுத்தி அனுசரித்து வருகிறார்களோ, எந்நாட்டில் பொதுஜனங்கள் கல்வியின் பெருமையையும் அவசியத்தையும் அவசரத்தையும் அறிந்து அதிக அளவு தங்களுடைய கவனத்தைச் செலுத்தி உழைத்து அதை அபிவிருத்தியடையச் செய்கிறார்களோ, எந்நாட்டில் கல்வியைத் தேசீயச்செல்வம் (Wealth of the Nation) (இதனை மிகவும் இலகுவான வார்த்தைகளில் சொல்லவேண்டுமானால், தேசத்தின் சோத்து) என்று நினைக்கிறார்களோ, அத்தேசமே முன்னேற்றத்தில் முதன்மைபெற்று விளங்கும். ஆரம்பக் கல்வியே அனைத்துக்கும் அடிப்படை. ஒவ்வொரு நாட்டிலும் அறியாமை என்ற இருளை நீக்குவதற்கு ஆரம்பக் கல்வியின் ஒளி பிரகாசத்துடன் வீசவேண்டும். இதன் மர்மத்தை உணர்ந்தல்லவோ எத்தனையோ நாடுகள் தத்தம் தேசங்களில் கட்டாய ஆரம்பக் கல்வியைச் சட்ட பூர்வமாக ஏற்படுத்தியிருக்கின்றன.

நமது நாட்டில் கட்டாய ஆரம்பக் கல்வியை ஏற்படுத்தவேண்டுமென்று அறிஞர்-தேசபக்தர் ஸ்ரீயுத கோபால கிருஷ்ண கோகுலர் கொண்டுவந்த மசோதாவை-இந்தியாவின் கல்வி முன்னேற்றத்திற்கு அருமருந்தாம் சஞ்சீவியைக் கண்மூடித் தனமாய் நிராகரித்ததை நினைக்க, நினைக்க எந்த இந்தியனும் வருந்தாதிருக்க மாட்டான். கட்டாய ஆரம்பக் கல்விக்குப் பணமில்லையாம்! நீர் வளமும் நில வளமும் மலை வளமுங் கொண்ட நம் நாட்டின் பணமெல்லாம் எங்கே? தேசத்தின் பணத்தையெல்லாம் ஆறுகள் அடித்துக் கொண்டு போயினவோ? கடல்தான் பொங்கியெழுந்து அழித்ததோ? அல்லது அன்னியர்கள்தான் அள்ளிக்கொண்டு போனார்களோ? இந்தியா இயற்கை அரண்கொண்ட தேசம். உலக வல்லரசுகளில் ஒன்றாகிய இங்கிலாந்து இந்தியாவை இப்பொழுது ஆள்கிறது. சந்தோஷம்! பின் ஏன் இந்தியாவிற்கு அதிகமான படைகள்? பெரிய சேனைகளுக்குக் கணக்கற்று இந்தியாவின் பெயரால் இந்தியாவின் பொக்கிஷத்திலிருந்து செலவு செய்யப்படுவது



சரியா? தோட்டத்தில் பாதி கிணறா? வழக்குத் தீர்த்துவிட்ட குரங்கின் கதையா இது? இந்திய மக்கள் கோடிக் கணக்காகப் பட்டினியால் பரிதவித்துக் கொண்டிருக்கும்பொழுது, இலட்சம் இலட்சமாகக் கொள்ளை நோய்களால் மாண்டுகொண்டிருக்கும் பொழுது, கல்வியின் வாசனை இன்னதென்றறியாது பல லட்சக் கணக்கானவர்கள் அறியாமை என்னும் இருட்டில் அடைபட்டு அல்லல் அடைந்துகொண்டிருக்கும் பொழுது அனாவசியமாய் எத்தனையோ இலட்சக் கணக்கான பட்டாளக் காரர்களுக்குக் கோடிக் கணக்கான பணத்தை வாரி வாரிக் கொடுப்பது தர்மமா? காருண்யம் வாய்ந்த அரசாங்கம் நம்மை இப்படித்தான் காப்பாற்றும்போலிருக்கிறது. நம் நாட்டில் கல்வியின் நிலை மிக மிகச் சீர்கேடடைந்திருக்கிறது. இங்கு ஆரம்பக் கல்வியின் நிலை அதி கேவலமாயிருக்க, உயர்தரக் கல்வியோ அபிவிருத்தியாகிக்கொண்டிருக்கிறது. உயர்தரக் கல்வி நமக்கு வேண்டாம் என்று சொல்ல வரவில்லை. இப்படி இருக்கிறதின் முடிவென்ன? நம் தேச மக்களில் 100-க்கு 95 பேர்கள் ஆரம்பக் கல்விகூட இனியும் கற்காமலிருக்க, ஆரம்பக் கல்வியைக் கற்பிக்கும் ஆரம்ப ஆசிரியர்களில் அநேகர் தங்களுடைய குடும்பத்தைச் செவ்வையாய் நடத்த முடியாமல் ஒருபக்கம் திண்டாடிக் கொண்டிருக்க, இன்னொரு பக்கம் உயர்தரக் கல்வி கற்றவர்களில் பலர், கையிலுள்ள காசையெல்லாம் செலவழித்துச் சிரமத்துடன் படித்துக் கஷ்டத்துடன் பரீக்ஷைகளில் தேர்ந்த பிறகு, உத்தியோகங்கள் கிடைக்காது, திகைத்துத் தெருக்களில் அலைந்துகொண்டிருக்கிறார்கள். இதை எதை ஒப்பிடலாம்? தலை மிகப் பெருத்து மற்ற அங்கங்கள் சிறுத்துப்போயிருக்கும் ஓர் உடலுக்குச் சமானமாயிருக்கிறது. இவ்வளவு அழகாய் நமது தேசத்தில் கல்வியிருக்கிறது! இப்படியிருப்பதையும் நம்மிந்தியர்கள் பார்த்துக்கொண்டு மௌனமாக இருக்கிறார்கள். என்ன பொறுமை! பொறுமை!! தர்மர் பிறந்த நாடாம் இது. உண்மைதான். பொறுமையின் பெருமையைச் செயலில் காட்டுவதற்காக இவ்வாறு நம்மவர்கள் பொறுமை-மௌனங்கொண்டார் போலும்! இதென்ன? பொறுமையா ஏலாமையா.

## ஆரம்ப ஆசிரியர்கள் சங்கம்

நமது மாகாணத்தில் மட்டும் சுமார் 45,000 ஆரம்பப் பாடசாலைகள் இருக்கின்றன. இவைகளில் இலட்சக் கணக்கான ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஆகையால் இவர்களே ஒரு சமூகமாக அமைகின்றார்கள். இவர்களுக்கென ரேஞ்சுகள் (பாடசாலைப் பரிசோதகர்களின் அதிகாரத்திற்குள் அடங்கிய இடப் பிரிவு) தோறும் சில உபாத்திமைச் சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகள் நமது மாகாண முற்றிலும் பல விடங்களில் பரவிக் கிடந்தாலும், இவைகள் தக்க நிர்மாணிப்புடன் ஏற்பட்டிருக்கவில்லை யாதலால், இவைகள் சக்தியற்று, உற்சாகமற்று, தங்கள் நிலையை உயர்த்திக் கொள்ளாது, போதனாமுறை அபிவிருத்தியில் மட்டும் கருத்தைச் செலுத்தி வேலை செய்துகொண்டிருக்கின்றன. இச் சங்கங்களில் கவலை எடுத்துக்கொள்ளும் ஆசிரியர்கள் மிகச் சிலரே. ஆரம்ப ஆசிரியர்களின் பொருளாதார நிலை கீழ்நோக்கிக்கொண்டு போகிறது. இவர்களின் கஷ்ட நிலையிலிருந்து ஆரம்பக் கல்வி நமது நாட்டில் எவ்வளவு கேவலமா யிருக்கிறதென்று கண்டுகொள்ளலாம். ஆரம்ப ஆசிரியர்கள் சங்கம் அநேக இடங்களில் 20 வருஷங்களுக்கு மேலாக நடந்துகொண்டிருந்தும், இதுவரையில் இவைகள் தங்களுக்கென என்ன உயரிய உரிமைகளைப் பெற்றிருக்கின்றன? உன்னத சம்பளம் அடைவதற்கு என்ன தீவிரமான வேலைகள் செய்திருக்கின்றன? என்று ஒவ்வொரு ஆரம்ப ஆசிரியரும் தீர்க்காலோசனை செய்து பார்க்கட்டும்.

சகலருக்கும் வழிகாட்டிகளா யிருக்கவேண்டிய ஆசிரியர்களே அதுவுந் தங்களது முன்னேற்ற விஷயங்களில் தக்கபடி வேலை செய்யாதிருப்பது மிகவும் வருந்தத்தக்கது. நமது நாட்டிற்குச் சுதந்திரமில்லை. என் செய்வது? சில தேச பக்தர்கள் பொது நலத் தொண்டர்கள் ஆரம்ப ஆசிரியர்களின் அபிவிருத்திக்காக உழைக்கக்கூடும். அவர்களின் நாட்டமெல்லாம் தேச விடுதலையைப் பற்றியே சென்றுகொண்டிருக்கிறது. நமது நாட்டில் போலித்தேசாபிமானிகள் பெருத்துக்கொண் டிருக்கிறார்கள். சட்டசபை அங்கத்



தினர்களுக்கு ஆரம்ப ஆசிரியரது விஷயம் புலப்படாது போனது ஆச்சரியமே. ஆரம்ப ஆசிரியர் சங்கங்கள் சில அவர்களுடைய சம்பளங்களில ரூ 4, 5 கூட்டிக்கொள்வதற்காகவே வேலை செய்தனவாயிருக்கலாம். இதற்காகவா பகீரதப் பிரயத்தனம் வேண்டியிருக்கிறது? ஆரம்ப ஆசிரியர்களுடைய அபிவிருத்தி தேசாபிவிருத்திக்கு முக்கிய காரணங்களில் ஒன்று என்பதை எவர் எவ்விதத்தில் மறுக்க முடியும்? ஆரம்பக் கல்வியே கிராமப் புனர் உத்தாரணத்திற்கு முதற்படி. கிராமச் சீர்திருத்தம், கிராமச் சீர்திருத்தம் என்ற சப்தத்தை தேசீய வாதிகளும் அரசாங்கத்தாரும் பல கட்சி வாதிகளும் எல்லாத் தலைவர்களும் பிரசங்கிகளும் பத்திராதிபர்களும் முழக்கிக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஒலி நாடெங்கும் கேட்கிறது. கிராமச் சீர்திருத்தம் ஆரம்பக் கல்வியை அடிப்படையாகக் கொண்டுதான் கட்டப்பட வேண்டும். தேச முன்னேற்றத்திற்கு ஆரம்பக் கல்வி அத்தியாவஸ்யம். ஆரம்பக் கல்வியைப் போதிப்பதற்கு ஆசிரியர்கள் அவசியம் வேண்டும். ஆகையால் ஆரம்ப ஆசிரியர்களைத் தேச மஹா ஜனங்கள் பெரிதும் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

கிராம ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் மாதம் 1-க்கு ரூ 2, 3, 4 அல்லது 5 சம்பளம் வாங்குகிற உபாத்தியாயர்கள் இருக்கிறார்கள். இவர்களின் ஸ்திதி பரிதாபம்! பரிதாபம்!! இவர்களின் தன்மையும் வன்மையும் எல்லோருக்கும் தெரியும். இவ்வாறு குறைவான சம்பளம் கொடுப்பது உபாத்திமைத் தொழிலையே கேவலப்படுத்தியதாகும். நல்ல சம்பளம் கொடுத்தால்தான் ஊக்கமும் உற்சாகமும் உழைப்பில் உறுதியும் கொண்ட உபாத்தியாயர்கள் கிடைப்பார்கள். தற்கால முறைகளுக்கேற்றபடி நூதனமான விஷயங்களை உசிதமான வழிகளில் போதிப்பதற்குத் தகுந்த திறமையான ஆசிரியர்கள் வேண்டும். தகுதியுடைய உபாத்தியாயர்களுக்கு நல்ல சம்பளம் கொடுக்கவேண்டும். ஆசிரியர்களின் சம்பளம் உயர்வதால் குடும்ப வாழ்வின் கஷ்டங்கள் ஒழிந்து நவீன உற்சாகம்

ஜெனித்து தொழிலில் நூதன உணர்ச்சி தோன்றும். கொஞ்சம் செலவுசெய்து அநேக புஸ்தகங்களையும் பல பத்திரிகைகளையும் வாங்கி வாசித்து அவர்களும் அவர்களுடைய அறிவை விருத்தி செய்து கொள்வார்கள். சம்பளம் உயர்வானல் கெட்டிக்கார பல வாலிபர்கள் உபாத்திமைத் தொழிலில் பிரவேசித்துப் பிரபல்ய உபாத்தியாயர்களாகப் பிரகாசிப்பார்கள். இவ்வாசிரியர்கள் சந்தோஷமாயும் நன்ருயும் போதிப்பார்கள். அதிக சம்பளம் கொடுத்து நல்ல சாமர்த்தியமுள்ள உபாத்தியாயர்களை ஏற்படுத்தினல், அவர்கள் நன்கு குதூகலமாய் வேலை செய்வார்கள். அதனல் நாட்டிற்கு உண்டாகும் நன்மைகள் கொஞ்சமல்ல.

## ஆரம்ப ஆசிரியர்களுக்கு

பிரிய ஆரம்ப ஆசிரியர்களே, உங்களுடைய நிலைக்காக இரங்குகிருேம். உங்கள் தொழில் கௌரவிக்கப்படவில்லை. உங்களின் பொருளாதார நிலை உயர்த்தப்படவில்லை. உங்களுடைய சுய கல்வி அபிவிருத்திக்குரிய சாதனங்கள் ஏற்படுத்தப்படவில்லை. உங்களது முன்னேற்றத்திற்கான வழிகள் திறக்கப்படவில்லை. ஆகையால் உங்களில் தன்னம்பிக்கையும் தன்மதிப்பும் குறைந்து கொண்டு வருகிறது. தேசத்தார் உங்கள்மீது அபிமான மின்மையாலும், உங்களுடைய போதிய கவன மின்மையாலும், கட்டுப்பாடான வேலையின்மையாலும் நீங்கள் கஷ்டமடைய நேரிட்டிருக்கிறது. உங்கள் நிலை பல வழிகளிலும் க்ஷீணதசையடைந்துகொண்டிருக்கிறது. நீங்கள் மிகவும் துன்பங்கள் அடைந்துவிட்டீர்கள். சென்றது செல்க.

நமது தேசத்தில் படியாத ஜனங்கள் உங்களைப் பற்றி அறிந்து கொள்ளவோ முடியாது. படித்த வகுப்பாரோ தங்களைக் காப்பாற்றிக்கொள்ளவே முடியாது தயங்கிக்கொண்டிருக்கிறார்கள். எங்கோ சிலகற்றறிந்த பணக்கார பிரபுக்கள் இருக்கிருர்கள். இவர்களுக்குத் தேசாபிமானமுமில்லை; பொதுநல சேவையில் உணர்ச்சியுமில்லை, பிறரை எதிர்பார்ப்பதில் பயனில்லை. உங்களுடைய



உயர்வுக்காக நீங்களே பாடுபடவேண்டியிருக்கிறது. உழைப்புக்குத் தக்க ஊதியம் உண்டு என்பது அனுபவ உண்மை. நமது தேசத்திற்கு சீக்கிரத்தில் அநேகம் மாறுதல்கள் உண்டாகும் காலம் வந்திருக்கிறது. அதற்கு அநேக அறிகுறிகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. குன்ரு உற்சாகத்துடனும், குலையா தைரியத்துடனும் குறையா நம்பிக்கையுடனும் உங்கள் முன்னேற்ற வேலைகளைச்செய்ய இச் சமயத்தில் முன் வாருங்கள். உங்கள் உழைப்பால் வெற்றிபெற்று ஜெயக்கொடியை நாட்டுங்கள்.

## புதிய முறையில் ஆரம்ப ஆசிரியர்கள் சங்கம்

ஆரம்ப ஆசிரியர்கள் சங்கம் மாகாண முழுவதும் பலவிடங்களிலிருக்கின்றன. அவைகள் புதிய முறையில் புத்துயிரும் புத்துணர்வும் பெற்றெழுதல் வேண்டும். ஐரோப்பியர்களின் நிர்மாணிப்பால் நமது அரசர் 7,000-மைல்களுக்கு அப்பாலிருந்துகொண்டு நம்மை இலகுவாய் ஆளுகிருர். தக்க நிர்மாணமில்லாது எந்த ஸ்தாபனமும் அபிவிருத்தி அடைந்து, சித்தி பெறுவது கடினமே. ஆகையால், அமைப்பில் அதிக கவனத்தைச் செலுத்தவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் ஆரம்ப ஆசிரியர்கள் சங்கம் ஸ்தாபிக்க வேண்டும். சுற்றுள்ள பட்டி (துக் கிராமம்) களிலிருக்கும் ஆரம்ப ஆசிரியர்கள் அனைவரும் கிராமச் சங்கத்தில் அங்கத்தினர்களாய்ச் சேர்ந்துகொள்ளல் வேண்டும். கிராமச் சங்கங்கள் ரேஞ்சுச் சங்கங்களுடன் இணைக்கப்படவேண்டும். ரேஞ்சுச் சங்கங்கள் தாலூகாச் சங்கங்களுடன் சேர்க்கப்படவேண்டும். தாலூகாச் சங்கங்கள் ஜில்லாச் சங்கத்துடனும், ஜில்லாச் சங்கங்கள் மாகாணச் சங்கத்துடனும் (தலைமைச் சங்கம்) முறையே இணைக்கப்படல் வேண்டும். இவ்வாறு தக்க வழியுடன் அமைத்து வேலை செய்தால், மாகாணத்திலுள்ள ஆரம்ப ஆசிரியரெல்லாரையும் ஒன்றுபடுத்தி வேலைசெய்ய இலகுவாயிருக்கும். இவ்வாறு நிர்மாணித்தால், இயந்திரம் போன்று வேலைசெய்யலாம்.

வெறும் கல்வி முறையை மட்டும் போதிக்காது, ஆரம்ப ஆசிரியர்களின் பொருளாதார நிலையை உயர்த்தி அவர்களின் சமூக

வாழ்வை விருத்தி செய்வதற்கு வேண்டிய வேலைகளைப் புதிய முறையில் உண்டாகும் உங்கள் ஆரம்ப ஆசிரியர் சங்கங்கள் வேலை செய்யவேண்டும். உங்களைக் கட்டுப்படுத்தும் கல்வி உத்தியோகஸ்தர்களை இச் சங்கங்களுக்குத் தலைவராக ஏற்படுத்தக்கூடாது. இப்படி ஏற்படுத்துவதால், ஆரய்ப ஆசிரியர்களாகிய உங்களின் சுதந்திரமும் பாதிக்கப்படும்; பொருளாதார சமூக வளர்ச்சியும் குன்றும். சில சமயங்களில் அவசியமானால் கல்வி உத்தியோகஸ்தர்களின் யோசனையைக் கேளுங்கள். இதுவரையில் உங்கள் சங்கங்களுக்குத் தலைவர்களாக டிப்டி இன்ஸ்பெக்டர் முதலிய கல்வி அதிகாரிகளே தலைவர்களாக இருந்துவருகிறார்கள். இப்பொழுதுதான் ஆரம்ப ஆசிரியர்களாகிய நீங்கள் விழிக்கிறீர்கள். இந்த உத்தியோகஸ்தர்களின் பிடியிலிருந்து நீங்கள் விலகவேண்டும். இதுகாலபரியந்தம் நீங்கள் சிக்கிக்கிடந்து தவித்தது போதும் போதும்.

கிளைச் சங்கங்களையும் மத்திய சங்கங்களையும் தாய்ச் சங்கத்தையும் தக்க பலத்துடன் நிர்மாணித்துக்கொண்ட பிறகே நீங்கள் உங்களுடைய உரிமைகளுக்காகவும் உயர்வுகளுக்காகவும் நியாய முறையில் சாத்வீகத்துடன் வேலை செய்யவேண்டும். ஆரம்ப ஆசிரியருக்கு மாதம் 1-க்கு ரூ. 30 சம்பளமாவது கொடுக்கவேண்டுமென்று நாப் கமிட்டியார் செய்த சிபார்சு அமுலுக்குக் கொண்டுவரும்படியாக நீங்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து உங்கள் சங்கங்களின் மூலம் அரும் பாடுபடவேண்டும். உங்கள் உழைப்பால், அரும் பிரயாசையால், உறுதியான பெருங் கிளர்ச்சியால், எல்லாவற்றிற்கும் மேலாக உங்களது பலமுற்ற மாறா ஒற்றுமையால் உங்கள் உரிமைகளைப் பெறத் தீவிரமாக முன் வாருங்கள்.

இனியொன்று உங்களுக்கு முக்கியமாய்ச் சொல்லவேண்டியது அவஸ்யமாகின்றது. ஒருவர் ஆரம்ப ஆசிரியராய் நுழைந்து வேறு தொழிலைக் கவனிக்காது கடைசிவரையில் அதே வேலை பார்த்தால், ஆரம்ப ஆசிரியராகவே கடைசிவரையில் வாழ்ந்து காலம் செல்லக்கூடும். ஆரம்ப ஆசிரியர்கள் உயர்வதற்கு வழிகள் இல்லை, சந்தர்ப்பங்கள் இல்லை, விதிகள் இல்லை. உங்களுக்கு இப்பொழுது இருக்கும் விதிகள் உங்கள் வாழ்வைக் கெடுக்கின்றன; உங்களின் அபிவிருத்தியின் வழியை அடைத்துவிடுகின்றன. உங்களுக்கு உங்கள் தொழிலில் அனுபவம் ஏற ஏற உங்கள் அறிவும் அதிகமாக அபிவிருத்தியடைகிறது. நீங்கள் எவ்வளவு திறமைசாலிகளாக இருந்தாலும், நீங்கள் ஆரப்ப ஆசிரியர்களாக இருக்கும்வரை இப்பொழுது முன்னேற்றத்திற்கு வழிகளும் கிடையாது; சாதனங்களுமில்லை. எத்தனையோ ஆரம்ப ஆசிரியர்களின் அறிவின் பிரகாசம் இப்பொழுதிருக்கும் கொடிய விதிகளால் மங்கி மறைகிறது. கடவுள் ஒருக்காலும் முட்டாள் அல்ல. உங்கள் எல்லோரையும் வாழ்நாள் முழுவதும் அடியிலேயே கிடந்துழலும்படி படைத்திருக்க மாட்டார். தலைவிதியைப் பற்றியாவது கிரகத்தைப் பற்றியாவது ஜாதகத்தைப் பற்றியாவது இப்பொழுது பேச எமக்கு இஷ்டம் கிடையாது. முயற்சிக்குத் தக்க கூலி உண்டு என்ற பொய்யா மொழிப் புலவருடைய வாக்கை எவரும்பொய்மைப்படுத்தி விடமுடியாது. உங்களில் எத்தனையோ கவிவாணர்களை, பிரசங்கிகளை சித்திரக்காரர்களை, பாடகர்களை, ஆசார சீர்திருத்தக்காரர்களை, நிர்மாணிகளை நாம் கண்டுகளித்திருக்கிறோம். உயர்வடையச் சரியான சந்தர்ப்பங்கள் உங்களுக்குக் கொடுத்திருந்தால், நீங்கள் நிச்சயமாகவே உயர்வு பெற்றிருப்பீர்கள். ஆதியில் ஆரம்ப ஆசிரியர்களாகவே இருந்து படிப்படியாய் உயர்ந்த அநேகர் பல உயரிய உத்தியோகங்களைத் தாங்கித் திறமையுடன் நிர்வகித்துக்கொண்டு வருகிறார்கள். அயல் நாடுகளில்தான் இவைகளுக்கு உதாரணங்கள் அதிகமாகவுண்டு. நமது அடிமை நாட்டில் எதற்குத்தான் ஆதரவு அதிகமாய் இருக்கிறது?



ஆரம்ப ஆசிரியர்களாய்ப் பயிற்சி பெற்றவர்கள் உயர்தரப் பாடசாலைகளிலும் கலாசாலைகளிலும் சேராமல் தாங்களே தனிமையாகப் படித்துப் பிரத்தியேகமாய் உயர்தரப் பரீட்சைகளுக்குப் போவதற்குச் சர்க்கார் அனுமதிக்கும்படியாக உங்கள் சங்கத்தின் மூலம் கிளர்ச்சி செய்யவேண்டும். ஆரம்ப ஆசிரியர்கள் தனி

யாகப் படித்து 10-வது வகுப்பு (மெட்ரிகுலேஷன்) அல்லது அதற்குச் சமானமான பரீட்சைகளுக்குப் போய் ஏன் வெற்றிபெறக் கூடாது? உயர்தரப் பரீட்சைகள் ஜெயித்தவர்கள் ஏன் பி. ஏ. (B. A) பரீட்சைக்குப் போகக்கூடாது? சக்தியுள்ள ஒருவர் ஒரு வேலையைச் செய்தால் மற்றவர்கள் ஏன் அவரைத் தடுக்க வேண்டும்? விதிகள் (Rules) நமது முன்னேற்றத்திற்காக இருக்கவேண்டுமே யல்லாது நம்மைத் தடைப்படுத்துவதற்காக இருக்கக்கூடாது ஆகையால் உயர்தரப் பரீட்சைகளுக்குப் போவதற்கு அனுகூலமான விதிகளை அரசாங்கத்தார் ஏற்படுத்தினால், ஆசிரியர்களின் அபிவிருத்திக்கு ராஜபாட்டை திறந்ததாகும். அயல் நாடுகளில் ஆரம்ப ஆசிரியர்களுக்கு அநேக வசதிகள் உண்டு. கேம்பிரிஜ் லோகல் (Cambridge Local) ஆக்ஸ்போர்டு லோகல் (Oxford Local) லண்டன் மெட்ரிகுலேஷன் (London Matriculation) முதலிய இன்னும் வேறு அநேக பரீட்சைகளுக்குப் போய் வெற்றிபெற்று அங்கு மேன்மையடையலாம்; நம் நாட்டிலிருந்துகொண்டே நாமே படித்து நம் நாட்டிலே குறிப்பிட்ட சில பட்டணங்களில் நடைபெறும் மேர்காட்டிய சில பரீட்சைகளுக்குப் போகலாம். நம் நாட்டில் நமக்கு வழிகொடுக்க மறுக்க, அயல் நாட்டார் அன்புடன் அழைக்கிறார்கள். சுய முயற்சியுள்ளவர்களுக்கு மேலே நாடுகளில் வழிகள் திறக்கப்படுகின்றன. அயல் நாடுகளைப் பாருங்கள். அத் தேசங்களில் ஆரம்பக் கல்வியின் அத்யாவஸ்யத்தை அறிந்து அதன் அபிவிருத்திக்கு அவர்கள் அதிகமாகச் செலவு செய்கிறார்கள். அங்கேயுள்ள ஆரம்ப ஆசிரியர்களுக்குச் செல்வாக்குண்டு. அவர்களின் முன்னேற்றத்திற்கு அநேக வழிகள் இருக்கின்றன. உபாத்தியாயர்கள் சங்கம் அங்கு செல்வாக்குப் பெற்றவைகள்.

உங்கள் பொது அறிவையும், பாஷா ஞானத்தையும் விருத்தி செய்யுங்கள். பல நூற்களையும் பல பத்திரிகைகளையும் வாசித்து அறிவைப் பெருக்குங்கள். ஒவ்வொருவரும் சங்க முன்னேற்றத்திற்காக வேலை செய்யுங்கள். தனிமையாகவும் உங்களுடைய அபி



விருத்தியைக் கருதுவது சுயநலம் என்று எண்ணாது தேசத்தொண்டு என்று எண்ணி சந்தோஷத்துடன் வேலை செய்யுங்கள். உங்கள் உழைப்பால் உச்சம்பெற்று உங்களுடைய சங்கத்திற்குக் கௌரவம் உண்டாக்குங்கள்.

தேச மஹா ஜனங்களே! ஆரம்ப ஆசிரியர்களின் துன்பங்கள் உங்களுக்குத் துயரத்தை உண்டாக்கவில்லையா? அவர்கள்பால் உங்கள் மனம் இளகவில்லையா? அவர்கள் எவ்வாறு எவ்வளவு கஷ்டப்படுகிறார்களென்று நீங்கள் அறிகிறீர்களா? அவர்கள் மரத்தாலான பொம்மைகளா அல்லது நடமாடும் சூஸ்திரப் பாவைகளா? அப்படியானால், உங்கள் மக்கள் அப் பொம்மைகளிடம் என்னதான் கற்றுக்கொள்ளப் போகிறார்கள்? அவர்களும் பொம்மைகளாகவல்லோ ஆகிவிடுவார்கள். இது பரியந்தம் ஆரம்ப ஆசிரியர்களின் அவஸியத்தை அறியாதிருந்து விட்டீர்கள் நீங்கள் அவர்களைக் கவனியாதிருந்தது உங்களின் குழந்தைகளின் கல்வியைக் கவனிக்காதிருப்பதற்குச் சமானமே. பரிதாபம்! ஆரம்ப ஆசிரியர்கள் இன்றுவரை கணக்கற்ற இன்னல்களைப் பொறுமையுடன் சகித்துக்கொண்டிருந்து விட்டார்கள். தேசத்தில் கல்வி அபிவிருத்தி வேண்டுமானால், ஆரம்ப ஆசிரியர்களுக்கு அதிக ஆதரவு அளியுங்கள்.

நீங்கள் எவ்வளவு அதிகமாய் ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஆதரவு கொடுக்கிறீர்களோ அவ்வளவு அதிகமாய் அவ்வளவு ஆனந்தமாய் அவர்களால் உங்கள் செல்வர் செல்விகளுக்குக் கல்வி புகட்டப்படும் உங்களால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது அவர்களிடம் சென்று, அவர்களுக்கும் புதிய உற்சாகத்தையும் உணர்ச்சியையும் வன்மையையும் உண்டாக்கி அவர்களுடைய சக்தியுடன் சேர்ந்து உங்கள் குழந்தைகளுக்கு மிக அதிகமான அபிவிருத்தியை உண்டாக்கி, தேசத்திற்கே பெரியதோர் நன்மை செய்துவிட்டுப் பிறகு இனியொரு உருவத்தில் 100 மடங்கு பெரிதாகி உங்களிடமேவந்து சேர்ந்து உங்களின் மனோ வன்மையைப் பெருக்குகிறது.

# பெண்மை.

பண்டிதை திரு. அசலாம்பிகை அம்மையார்.

பெண்மை பெண் பிறவிக் கியல்பான குண நலங்கள் எனப் பொருள்படும். மீனிற்கு நீந்தும் முயற்சியும், புலிக்குப் பாயுந்திறமும், பறவைக்குப் பறக்கும் பயிற்சியும் பிறரால் பயிற்றப்படாமலே உள்ளத்தில் இயல்பாய் அரும்பி மலர்வதுபோல், பெண் பிறவிக்கும் கருவிலேயே யமைந்த சில குண நலங்கள் திகழ்ந்தொளிரக் காண்கின்றோம். இதனை மூதாட்டியார்

> "அன்னை தயையும் அடியாள் பணியுமலர்ப்
> பொன்னி னெழிலும் புவிப்பொறையும்—வன்னவுடல்
> வேசி துயிலும் விறன் மந்திரி மதியும்
> பேசில் இவையுடையாள் பெண்,"

என்னும் வெண்பாவினால் விளக்கி வைத்தனர். இவ் வெண்பாவினால் தயையும், உழைப்பும், எழிலும், பொறுமையும், விநயமும், கூறிய புத்தி வன்மையும், பெண்ணின் இயல்புக் குணங்களென்றும், இக்குணங்கள் அமையப் பெறுதவர்கள் பெண் பிறவியிற்

---

ஆகையால் ஆரம்ப ஆசிரியர்களுக்கும் அவர்களால் புதிய முறையில் உண்டாகப்போதும் ஆரம்ப ஆசிரியர்கள் சங்கத்திற்கும் அதிக அனுதாபமும் மிகுந்த ஆதரவும் அளித்துத் தேசாபிவிருத்தி செய்யுங்கள்.

ஆரம்ப ஆசிரியர்கள் வாழ்க! இனிது வாழ்க!! ஆரம்ப ஆசிரியர்கள் சங்கங்கள் நீடூழி நிலைத்துநின்று வாழ்க!!!

---



சேர்ந்தவராயினும், இயல்பிலக்கணங்கள் அமைந்த பெண்கள் ஆகமாட்டார் என்றும் உணர்தல் வேண்டும். இவைகளுடன் கல்லினும் கடினமான கற்பு என்னும் சிறந்த குணமும் யௌவனத்தில் நிரம்பப் பெறுவரேல் பெண் பிறவிக்கு நிகரான பிறவி வேறில்லை யென்பதே தெய்வப் புலவரின் திருவுளமாகும். இது பற்றியே,

> "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும்
> திண்மையுண் டாக்கப் பெறின்"

என்றழுத்தமாக "யாவுள?" என்றருளினர்.

இறைவன் படைப்பில் இயல்பிலக்கணங்கள் நிரம்பிய பெண்மணிகள் இல்லையேல் அல்லது பெண்களிடை மேற்கண்ட குணங்கள் அமைந்திலதேல், ஆண்பால் இனத்திற்கு இன்பமும், ஆறுதலும், தண்மையும் இல்லா தொழியுமென்பது திண்ணம். ஒரு சில ஆடவர் மக்கள்நீர்மை மாறி விலங்கின் நீர்மையினராய் அறிஞர் கண்டிரங்கும் நிலைமையும் பெறுவர் என்பது மிகைப் படுத்திக் கூறுதலாகாது.

நமது மூதாட்டியார் பெண் என்பதற்கு இலக்கணமாக வகுத்த வெண்பாவில் இரண்டிரண்டு குணங்களை யுள்ளடக்கி ஒரு குணத்தினை விளக்கி உய்த்துணர வைத்தனர். அதாவது, "அன்னை தயையும்" என்றதினால் பொதுவான தயை ஆண் பாலருக்கும் உண்டாதலின் அதைவிட பெண் பாலருக்கிருக்க வேண்டிய தயை ஈன்ற தாயின் ஒப்புயர்வற்ற இயற்கை யன்புடன் கூடிய தயை எனவும், "அடியாள் பணியும்" என்ற தொடரினால் உழைப்புடன் பணிவுடைமையும் சிறப்பாக அமைந்திருத்தல் எனவும், "மலர்ப் பொன்னின் எழிலும்" என்றமையால் இலக்குமி போன்ற அழகுடைமையும், அதாவது பொலிவுள்ள இடமே செல்வத்தின் அதி தேவதையாகிய இலக்குமி யிருக்கும் பீடம் என்ற குறிப்பும், "புவிப் பொறை" என்ற தொடரால் அகழ்வாரைத் தாங்

குலத்திற் கிணையான பொறுமை யுடைமையும், புவிபோல் தன்பால் தோற்றும் சீவகோடிகளைத் தானே போஷிக்கும் வளப்பமுடைமையும், "வன்னவுடல் வேசி துயிலும்" என்றமையால் இயற்கை மென்மையும், கணவனை எல்லா வகையாலும் மகிழ்விக்கும் விநய சப்பத்து உடைமையும், "விறன் மந்திரி மதியும்" என்றமையால் அற்றநோக்கி வருங்கால நிகழ்கால நிலைக்கேற்ப இடித்துமுணர்த்தும் உரிமையும், கூரிய மதியும் உடைத்தாயிருத்தல் வேண்டுமென்பதும் பெறப்படுகின்றது.

இதனால் தாயன்பு, தயை, பணிவு, உழைப்பு, செல்வர், அழகு, அரும்பெறல் மக்களை யீனுதல், அங்கப்பாலூட்டி வளர்த்தல், பொறை, மென்மை, விநயம், தருணம்நேரில் மேற்சென்றறிவுறுத்தும் உரிமை, கூர்ந்த மதிநலம், இவையனைத்தும் உடையவளே பெண் எனல் விளக்கம். பெண்களுக் கிருக்கவேண்டிய குணநலங்கள் பலவற்றை ஐம்பெருங் கூறுகளாக வகுத்த பிராட்டியார் பெண்பாலரிடை நான்கு கூறுகளுக்கு உதாரணமாக அன்னை, அடியாள், பொன், புவி ஆகிய பெண்பாலினங்களை ஒப்புக்கூறி ஐந்தாவதாகிய மதியுடைமைக் குதாரணமட்டில் ஆண்பாலினமாகிய விறன் மந்திரியை எடுத்துக் காட்டியதும், உய்த்துணரின், பெண்பாலரிடை ஐந்தில் ஒரு பகுதியாக ஆண்பாற் குணம் அமைந்திருத்தல் அவசியமென் றுணர்த்தும் குறிப்பேயாகும். ஆண்பாலாரிடை பெண்ணீர்மையும், இதனிலும் ஒருபங்கு அதிகம் அமைந்திருத்தல் வேண்டுமென்பதை அறிஞர் உணர்ந்துள்ளார். ஆணீர்மை கலவாத முழுப் பெண்ணீர்மை யமைந்த பெண்கள் பேதையரினும் பேதையராய்த் தாமே தமக்குப் பாரமாய் இடர்ப்படுவர். இவ்வாறே பெண்ணீர்மை கலவாத முழு ஆணீர்மையாளரும் உலகில் உலர்ந்த மரமும், வற்றிய ஓடையும்போல பயனில் வாழ்வு நடாத்தி முரண்மதி கொண்டு துன்பச் சேக்கையில் வீழ்ந்து அறிஞர் வெறுத்தொதுக்க அழிந்து படுவர். ஆதலின் உலகம் நலம்பெற முயலும் அறிஞர்கள் ஆண்பாலுலகிற்கே வற்றாவின்பமும், சாந்தியும், அளிக்கத் தோன்றிய பெண்களின்



நீர்மைக்கு அதாவது உத்தம இயல்பிலக்கணங்களை வளர்க்கும் முறையில் கடனாற்றுதல் இருபாலார்க்கும் நலம்புரிவதாகும். ஆண் மக்கள் தவறு செய்வதால் விளையும் தீமைகளைவிட, பெண் மக்கள் நிலை வழுவுறலால் விளையும் தீமைகள் மிக மிகப் பெரிதாம். சமூக நாசமே இதன் முடிவு. மக்கள் வாழ்வினையே சிறப்புறச் செய்வதற்கு முதன்மையான பெண்கள் பெண்மைபெற்றுச் சிறத்தல்தான் என்பதை யுணர்ந்தே பல கட்டுப்பாடுகள் பெண்மைப் பாதுகாப்புக்கெனக் கோலி வைத்தனர். அவர்களுடைய ஆழ்ந்த அறிவையும் பரந்த நோக்கத்தினையும் உணரமாட்டாத ஒரு சிலர் (தற்கால நாகரீகர்) பெண்மையின் பெருமையை யழிக்க முற்பட்டிருக்கின்றனர். தற்கால முறையில் பல துருக்கள் பற்றியிருக்கலாம். அத்தகைய மாசுகளை அகற்றுவது கடனேயன்றி துருப்பிடித்த பொருளையே உடைத்தெறிவது அறிவுடைமையாகுமோ?

நாயகனை யுபசரித்தல், மக்களை வளர்த்தல், விருந்தேற்றல், உணவமைத்தல் முதலிய சிறந்த கடமைகள் குடும்பத் தலைவியினால் நேர்முகமாய் நிறைவேற்றப்படாமல் கூலியாட்களால் நடத்தப்படும் வீடும் வீடாகுமோ? வாழ்வும் ஒரு வாழ்வாகுமோ? இன்பமும் அன்பும் இறந்த நிலையன்றோ இது?

இந்தியக் குடும்பங்களின் ஸர்வாதிகாரிகள் இந்தியப் பெண்களேயாவர். இத்தகைய சிறந்த பதவியை அசட்டை செய்து இனத்திற் குரித்தல்லாத அடிமைப் பகட்டுவாழ்வில் சிக்கி மகிழ்வது பேதமை! பேதமை!! இராமாயணம் சுந்தர காண்டத்தில் அசோக வனத்தில் பிராட்டியாரின் இயல்பை வருணிக்கப்புகுந்த கவி பெண்ணீர்மையைக் குறிப்பிடும் உதாரணமாக

"அருந்து மெல்லட கார்இட அருந்துமென் றழுங்கும்
விருந்துகண்டபோ தென்செயுமோ வெனவிம்மும்"

என விளக்கியிருத்தல் சிந்திக்கத் தக்கதாகும். நாயகனை அடிசில் உண்பிப்பதும், விருந்தினரை யுபசரிப்பதும், ஜனக புத்திரியும்

# டாக்டர். சுதீந்திர போஸ்.

திரு. என். வேங்கடரமணன் அவர்கள்.

இந்தியாவில் பிறந்த புத்திர ரத்தினங்களில் சிறந்தவர்கள் பலர் இவ்வடிமை நாட்டில் மதிப்பும், புகழும் பெறுவதற்கின்றி ஐரோப்பிய நாடுகளுக்கும், அமெரிக்க நாடுகளுக்கும் சென்று, அங்கே தம் அறிவாற்றல்களைக் காட்டிப் பேரும் புகழும் பெற்று வருவதை யறியாதார் யார்? அரசியல் சுதந்தரத்தையும், உண்மை யறிந்து போற்றும் அறிவையும் இழந்து, அறியாமையிலும், மூடக் கொள்கைகளிலும் ஆழ்ந்து கிடக்கும் மக்கள் மலிந்த இந் நாட்டில் உண்மை யறிவாளிகள் உயர்வடைவதற்கேற்ற வசதிகளில்லை யென்பதில் ஐயமில்லை. இக் காரணங்களால் இன்று சமத்துவத்திற்கும், சுதந்தரத்திற்கும் பெயர் போன அமெரிக்கா முதலிய

---

சக்கரவர்த்தியின் முதன் மருகியும் ராம பிரானின் தரும பத்தினியுமாகிய ஒரு சிறந்த அரசகுல வனிதைக்கும் கடமையாக எண்ணப்பட்டது.

தற்காலப் ஆடவனைப்போல் ஆடவியும் பொருளீட்டு முயற்சி மேற்கொண்டு பிறப்புரிமை யிழந்து பொய் வாழ்வில் உறங்கி, அந்நிய மோக வலையில் வீழ்ந்து புராதன இந்தியப் பெண்ணுலகின் புகழுக்கும் கேடு சூழ்ந்து மணமற்ற மலர்கள்போல் காணப்படுவது மிகவும் வருந்தத் தக்கதாகும். ஆடவர்களாகிய சகோதரர்கள் மட்டில் முயல்வது போதிய பயன்தராது. கற்ற பெண்மணிகளும் தங்கள் சமூகத்தைப் பகட்டு நாகரீகத்தில் முழுகாமல் பாதுகாக்க முக்காலும் முயலுதல் வேண்டுமென்பதே இக்கட்டுரையின் முழு வேண்டுகோள்.

---



நாடுகளுக்குச் சென்று, அங்கே பல துறைகளிலும் மேன்மை யுற்றுப் பேரும், பெருமையும் வாய்ந்து, அந் நாட்டுப் பொது மக்களின் நன்மைக்கேயன்றி, தந்தாய்நாடாகிய பாரத நாட்டின் மேன்மைக்கும் இயன்ற வகையில் உழைத்து வருபவர்களில் நமது **டாக்டர். சுதீந்திர போஸ்** அவர்களும் ஒருவராவர். பத்திரிகை அனுபவமுடையோரனைவரும் சுதீந்திர போஸைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்பர். எனவே அவரது வாழ்க்கை வரலாற்றினை இங்கே சுருக்கித் தருகின்றோம்.

## பிறப்பும் படிப்பும்

நமது சுதீந்திரர் கல்கத்தா மாகாணத்தைச் சேர்ந்த டக்கா ஜில்லாவில் **கியோத்காலி** என்ற ஊரில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தார். ஆரம்பத்தில் டக்கா நகரத்திலுள்ள ஜுபிலி பாடசாலையிலும், முன்ஷீகஞ்சி உயர்தரப் பாடசாலையிலும், கோமில்லா விக்டோரியா ஹைஸ்கூலிலும் முறையே படித்து ஸ்கூல் பைனல் என்ற பரீக்ஷையில் தேறினர். பின்னர் தம் தமயனாராகிய **சத்தியேந்திர நாத போஸ்** அவர்கள் தலைமை வகித்திருந்த **கோமில்லா விக்டோரியா கலாசாலை**யில் படிக்கப் பிரவேசித்தார். சுதீந்திரர் அக் கலாசாலை மாணவர்கள் எல்லோரிலும் முதன்மையாகத் தேர்ச்சி யடைந்து வந்தமையால் **'ஜான் இங்ஸ்''** என்ற தங்க மெடலையும் பரிசு பெற்றார். இவ்வாறு அவர் கலாசாலை மாணவரா யிருக்கையிலேயே **''வங்காளி'', ''டக்கா கெஜட்'', ' இந்தியன்மிரர்''** போன்ற உயர்ந்த பத்திரிகைகளில் அருமையான வியாசங்களை எழுதி வருவாராயினர். அப்பொழுதே இவரது அறிவாற்றல்களைக் கண்டு அவரது ஆசிரியர்களும், பிறரும் அதிசயமடைவார்களாம். சிறு வயதினின்றே கல்வி யாராய்ச்சியில் அதிக ஆர்வம் படைத்த நமது போஸ் அவர்கள் பேல்நாடுகளுக்குச் சென்று கல்வி பயில விரும்பினர்.

## அமெரிக்கா யாத்திரை

அவ் விருப்பத்தின்படியே தங் கையில் யாதொரு பொருளுமில்லாமலேயே 1904-ம் ஆண்டில் அமெரிக்காவுக்குப் பிரயாணமா

னார். ஊக்கமும், உறுதியும் படைத்த சுதீந்திரர் பல கஷ்ட நஷ்டங்களை யடைந்தும் அமெரிக்காப் போய்ச் சேர்ந்தார். அங்கு மிஸ்ஸோரி நகரத்திலுள்ள பார்க் கலாசாலையில் இரண்டு ஆண்டுகள் கல்வி கற்றார். பிறகு இலினாய்ஸ் சர்வ கலாசாலையில் பிரவேசித்து 1907-ம் ஆண்டில் பட்டப் பரீக்ஷையில் தேறினார். அடுத்த ஆண்டில் சிகாகோ சர்வ கலாசாலையில் "கிராஜுவேட் ஸ்காலர்ஷிப்" (Graduate Scholarship) என்ற உபகாரச் சம்பளத்தைப் பெற்றார். அப்பொழுது அச் சர்வ கலாசாலையின் சார்பாக நடைபெற்று வந்த "டெய்லி மாருன்" என்ற தினசரிப் பத்திரிகையின் நிர்வாக ஆசிரியர்களுள் இவரும் ஒருவராக நியமிக்கப்பட்டார். அப் பத்திரிகையில் சிறந்த கதைகளும் பல எழுதிப் புகழ் பெற்றார். சின்னாளில் மீண்டும் இலினாய்ஸ் சர்வ கலாசாலையிற் புகுந்து 1909-ம் ஆண்டில் ஆங்கிலக் கலையில் எம். ஏ. என்ற பண்டிதப் பட்டத்தைப் பெற்றார். அதன்பின் ஒரு வருஷ காலம் அமெரிக்காவில் தெற்குப்புற மாகாணங்கள் அனைத்திலும் யாத்திரை செய்து அநேக அறிஞர்களைக் கண்டும் பல விடங்களைத் தரிசித்தும் அறிவு முதிர்ச்சியடைந்தார்.

## உத்தியோகமும் உழைப்பும்

1910-ம் ஆண்டில் அயோவா சர்வ கலாசாலையைச் சேர்ந்து பலவகைச் சாஸ்திரங்களிலும் ஆராய்ச்சிகள் செய்ய ஆரம்பித்தார். அச் சர்வ கலாசாலையின் அரசியலாராய்ச்சிக் கழகத்தில் இவர் இரு முறை அங்கத்தினராக நியமிக்கப்பட்டார். அதன் பிறகு சின்னாட்களில் அப் பல்கலைக் கழகத்தில் ஏற்படுத்தப்பட்ட "கீழ் நாடுகளின் நாகரீகமும் அரசியலும்" என்ற பகுதிக்கு இவரே தலைமைப் போதகராக அமர்ந்தார். உலகின் பல் வகைப்பட்ட அரசியல் அமைப்புகள், குடியேற்ற நாட்டு அரசாங்க ஏற்பாடுகள், கீழ் நாட்டுப் புராதன நாகரீக முறைகள் முதலிய விஷயங்களைப் பற்றி மாணவர்களுக்கே யன்றி, பத்திரிகைகளின் மூலம் உலகத்திற்கும் அறிவூட்டி வருவாராயினர். 1913-ம் ஆண்டில் அயோவா சர்வ கலாசாலையிலேயே "டாக்டர் ஆப் பிலாசபி" (Ph. D) என்ற தத்துவ



சாஸ்திரப் பண்டிதர் உயர்தரப் பட்டத்தையும் பெற்றார். புராதனமானதும் நவீனமானதுமான சாஸ்திரங்கள் பலவற்றிலும் உயர்ந்த அறிவும், அவற்றைக் கற்பிக்கும் ஆற்றலும், உற்சாகமும் வாய்ந்த இவரது திறமையைக் கண்டு அமெரிக்க மேதாவிகள் பலரும் வியந்து போற்றுகின்றனர். இவ்வாறு அந் நாட்டில் உத்தியோகமும், உயர்வும், புகழும் பெற்று வாழ்ந்து கொண்டிருந்தபோதிலும் தந் தாய்நாடாகிய இந்தியாவை மறந்தவரல்லர். அவ்வப்போது அமெரிக்காவுக்கு வரும் இந்திய மாணவர்களுக்கு உதவி செய்வதிலும், அமெரிக்கரின் கவனத்தை இந்தியாவின் நன்மையினிடத்துத் திருப்புவதிலும் இயன்றவரையில் உழைத்து வருகின்றார். இந்திய மாணவர்களுக்கு உதவி புரிவதற்கெனவே "ஹிந்துஸ்தானச் சங்கம்" என்ற ஒரு ஸ்தானத்தை ஏற்படுத்தியிருக்கிறார். அச் சங்கத்தார் அமெரிக்காவுக்குப் போதரும் இந்திய மாணவர்கள் அந் நாட்டில் அதிகப் பணச் செலவும், பிற கஷ்ட நஷ்டங்களு மின்றி எவ்வெக் கல்வியை எவ்வெச் சர்வ கலாசாலையிற் கற்பது அனுகூலமாகு மென்பதைப் பற்றி அம் மாணவர்களுக்கு அறிவுறுத்தவும், அவர்களுக்கு அந் நாட்டில் வேண்டிய பிற உதவிகளைப் புரியவும் வேலை செய்கின்றனர். 1914-ம் ஆண்டு வாஷிங்டன் நகரத்திற் கூடிய அந் நாட்டுத் தேசீய மகா சபைக்கு இந்தியரை அந் நாட்டினின்றும் அப்புறப் படுத்தக் கருதிய சட்டத்தைச் செய்ய வொட்டாது தடுக்கவேண்டி இந்திய அபிமானிகளின் சங்கத்தின் சார்பாகச் சென்ற பிரதிநிதிகளின் (டெபுடேஷன்) கூட்டத்திற்கு நமது சுதீந்திரர் தலைமையாக நியமிக்கப்பட்டுச் சென்றார். அங்கு தம் பிரதிநிதிகளின் வாதத்தை நேர்மையுடன் எடுத்துக் கூறித் திறம்பட வேலைசெய்து இந்தியரிடத்தும், அமெரிக்கரிடத்தும் நன்றியையும், புகழையும் ஒருங்கே பெற்றார். நீண்ட நாட்களாக "அமெரிக்கன் பொலிடிகல் அசோசியேஷன்", "தி ஒரல்டு கான்ஷியன்ஸ் சொசைடி", "ஸ்டேட் ஹிஸ்டாரிகல் சொசைடி ஆப் அயோவா" முதலிய பொதுநலக் கழகங்கள் பலவற்றில் உறுப்பினராக இருந்து உலக நன்மைக்கு வேலை செய்து வருகிறார்.

## தேச யாத்திரை

சுதீந்திரர் அமெரிக்க நாட்டின் உயர்ந்த பத்திரிகைகள் பலவற்றில் பல்வேறு கட்டுரைகளை எழுதிப் புகழ் பெற்றிருப்பதோடு, இந்தியாவிலுள்ள சிறந்த பத்திரிகைகளாகிய மாடர்ன் ரிவ்யூ, இண்டியன் ரிவ்யூ, ஹிந்துஸ்தானி ரிவ்யூ, ஹிந்து முதலிய பல பத்திரிகைகளிலும் அடிக்கடி கல்வி, சரித்திரம், அரசியல் முதலிய பல விஷயங்களைப் பற்றி உயர்ந்த கட்டுரைகள் எழுதி வருகின்றார். இவரது கட்டுரைகளின் பொருளமைதி, இனிய நடை, ஆராய்ச்சித்திறன், ஆழ்ந்த கருத்துடைமை முதலியவற்றை அறிஞர் பலர் புகழ்கின்றனர். சமீபத்தில் ஐரோப்பாக் கண்டத்திற்குச் சென்று பல தேசங்களையும் சுற்றிப் பார்த்து, ஆங்காங்கே பற்பல உபந்நியாசங்களைச் செய்து ஒவ்வோரிடத்திலும் பெரிதும் மதிக்கப் பெற்றுத் திரும்பினார். கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு என்பது பொய்யாமோ? அமெரிக்காவில் வெள்ளையர் கறுப்பர் என்ற நிற வித்தியாசங்களால் இந்தியருக்கும் பிற கீழ் நாட்டவருக்கும் அந் நாட்டில் பிரஜா உரிமை பெறுவதற் கில்லாதபடி பல தடைகள் ஏற்பட்டிருக்கின்றன. அத் தடைகளை யறவே நீக்குவதற்காக நமது போஸ் அவர்கள் செய்துவரும் முயற்சிகள் அநேகமாம். இவரைப்போன்ற அறிஞர் பலரது இடைவிடாத முயற்சியால் அமெரிக்காவில் வெள்ளையர், கறுப்பர் என்ற வேற்றுமைகளோடு கூடிய ஏற்றத் தாழ்ச்சிகள் விரைவில் ஒழிக்கப்படுமென்று நாம் எதிர்பார்க்கலாம்.

## இந்தியாவுக்கு வருகை

சுதீந்திரபோஸ் அவர்கள் தந்தாய்நாடாகிய இந்தியாவைவிட்டு அமெரிக்காவுக்குச் சென்ற இருபத்துநான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் தந்தாய்நாட்டைக் காணவும், வயது தளர்ந்த தம தருமை யன்னையாரைத் தரிசிக்கவும் வேண்டி இந்தியாவுக்கு வர விரும்பினார். எனவே அயோவா சர்வ கலாசாலையில் ஓராண்டு விடுமுறை பெற்றுக்கொண்டு பிரயாணமாயினார். ஆயினும் பிரிட்டிஷ் துரைத்தனத்தார் அவருக்கு இந்தியாவுக்கு வர அனுமதி யளிக்காமல் மறுத்தனர். இந்திய அரசியல் வியவகாரங்களில் தமக்கு யாதொரு தொடர்பில்லை யென்றும், பிரிட்டிஷ் துரைத்தனத்தாரிடத்தில் தமக்கு எவ்வித விரோத உணர்ச்சியில்லை யென்றும் வெளிப்படையாகக் கூறியும் துரைத்தனத்தார் இணங்கியவரன்று. 6 மாத காலத்திற்கு மேல் ஒரு நாள்கூட இந்தியாவில் தங்கவில்லை யென்றும் இந்தியாவின் அரசியல் விவகாரம் எதிலும் தலையிட்டுக் கொள்ளவில்லை என்றும் அரசியல் விஷயமாக இந்தியாவில் பிரசங்கம் செய்யவில்லை என்றும் உறுதி கூறி எழுதிக்கொடுத்த பிறகே இவர் தாயகத்திற்கு வருவதற்கு அனுமதிக்கப்பட்டார். பிறகு அவரும் அவரது மனைவியாரும் சென்ற வருடத்தில் இந்தியாவிற்கு வந்து தனது குடும்பத்தார், பந்துக்கள் மித்திரர் முதலியவர்களைக் கண்டு களித்து அரசாங்கத்தாருடன் அவருடைய ஒப்பந்தப்படி இங்கு இருந்துவிட்டு அமெரிக்காவிற்குத் திரும்பிப் போய்விட்டார்கள். கையிற் சிறிதும் பொருளின்றி அமெரிக்கா நாட்டை யடைந்து தன் முயற்சியாலும் இடைவிடாத உழைப்பாலும் உயர்தரக் கல்வி கற்று, உத்தியோகமும் பெற்று அந் நாட்டவராலும் கொண்டாடப்பெறும் பேறு பெற்று வாழும் டாக்டர். சுதீந்திர போஸ் அவர்களின் முயற்சி யாவராலும் பாராட்டற் பால தன்றோ? சுதீந்திரர் வாழ்க! வந்தேமாதரம்.



# "பாரதி"யைப் பற்றி.

## ஸ்ரீமான் பா. ஆதிமூர்த்தி அவர்கள்.

முன்னர்யாம் கண்டவற்றில் மும்மடங் குயர்ந்ததாகிப்
பன்னெடுங் கலைகள் எங்கும் பரப்பி விஞ்ஞான மோங்கி
சொன்னயம் பெருகிஎல்லாத் துறைகளும் கவர்ந்துகீர்த்தி
மன்னு"பா ரதி"யைக் கண்டு மனமகிழ்ந்த வசமுற்றேம்.

# பர்மாப் பிரிவினை.

ஸ்ரீமாந். கு. கோ. கிருஷ்ணன் அவர்கள், **B. Sc., (Hons.)**

ஆதியில் மதம், நாகரீகம், சாஸ்திரம் முதலிய சகல கலைகளையுமனமுவந்து உதவிய இந்தியா தேசத்திலிருந்து பர்மா தேசம் பிரிக்கப்பட வேண்டுமென்று பர்மியர்களில் சிலர் பறைசாற்றித் திரிகின்றனர் என்பது யாவருமறிந்த விஷயம். பிரிவினைக் கூட்டத்தார்களில் அநேகர் 1928-ம் வருஷத்திலிருந்த சட்டசபை பர்மிய அங்கத்தினர்களுமாவர். இவர்கள் 100-க்கு 10 ஓட்டுகள் கிடைக்கப்பெற்றுத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களே யாதலால் இவர்களின் அபிப்பிராயம் எல்லா பர்மியர்களின் அபிப்பிராயமென்றெண்ணுவதற்கிடமில்லை. இவர்களோடு பல ஐரோப்பியர்களும், ஆங்கில இந்தியர்களுஞ் சேர்ந்து சப்தம் போடுகிறதை நோக்க விடாநகைப்பைத் தருகிறது. பர்மா கவர்ன்மெண்டும் பர்மாவின் பிரிவினையைக் கருதியதாகவே யிருக்கிறது.

சைமன் கமிஷன் பர்மாவுக்கு வந்தகாலத்தில் சில பர்மியர் தங்களுக்குச் சுதந்திரமளிக்கு முன்னதாகவே பர்மாவை இந்தியாவினின்று பிரித்துவிட வேண்டுமென்று சாட்சி விளக்கத்தில் உரைத்திருக்கின்றனர். 'பூவோடு சேர்ந்த நார் மணம் பெறுவது போல' இந்தியாவோடு பர்மா சேர்ந்திருந்து விடுதலையடைந்தாலன்றி பர்மா தனியாக பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெறுவது மலடி பிள்ளை பெறுவது போல முடிந்துவிடும். 'பர்மா இந்தியாவோடு சேர்ந்திருந்தால் சுதந்திரம் சீக்கிரம் பெற்றுவிடும். பிறகு நம் நிலை கல்லின்மேவிட்ட கலம்' போலாகும் என்று சில ஐரோப்பியரும், ஆங்கில இந்தியர்களும் பர்மாவை உடனே பிரித்துவிட தங்களாலியன்ற உதவி புரிந்து வருகின்றனர். சர். சைமன், பிரிவினைக்கு ஆதரவாகப் பேசிய சில பர்மியர்களை அவர்கள் பர்மாவின் பிரிவினையை பர்மா சட்டசபையில் முதன் முதலாக அமுலுக்குக் கொண்டுவராமல் தன்னிடத்தில் மாத்திரம் வந்து தனித்தனியாக முறையிடுவது விந்தையாயிருப்பதாக மகா வியத்துடன் சொல்லாமல் ஆழ்ந்து சொன்னபிறகு புதிதாகத் தேர்ந்தெடுத்தவுடன் பர்மா சட்டசபையில் பிரிவினைத் தீர்மானத்தை நிறைவேற்றி யிருக்கின்றனர். இதனால் யாதொரு காரியமும நடந்துவிடாதென்பது நமது துணிவு. ஆனால் பர்மியர்களெல்லாரும் இவ் விஷயத்தில் ஒரே மனத்தினராயிருப்பதாக மாத்திரம் இதனால் வெளிக்குக் காட்டிக் கொள்ளுகிறார்கள் போலும்.



பிரிவினைக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் பின்வரும் காரணங்களைக் காட்டி பர்மாவின் பிரிவினை அத்யாவசியமா யிருக்கிறதென்று பிதற்றுகின்றனர்.

1. இந்தியா (மத்திய) கவர்ன்மெண்ட் பர்மாவிலிருந்து வரி முதலிய வருமானங்களை அளவுக்கதிகமாக அடைந்து வருகிறது.

2. இந்தியர்களால் பர்மாவிலுள்ள திரவியங்கள் இந்தியாவுக்கு வடிகட்டிக் கொண்டுபோகப் படுகின்றன.

3 பர்மா தேசமே இந்தியர்களால் நிறையப்பெற்று இந்தியமயமாகி விடுமென்னும் பயம்.

4. பர்மியர்களின் துரபிமானம் (Prejudice.) நாம் ஒவ்வொரு காரணத்தையும் இவண் சுருக்கமாக ஆராய்வோம்.

முதலாவதாக இந்தியா பர்மாவிலிருந்து அதிக பண உதவி பெற்று வருகிறதென்பது சுத்தத் தப்பபிப்பிராயம். இத் தப்பபிப்பிராயத்தை உண்டுபண்ணியது பர்மா கவர்ன்மெண்டாரே. 1927-ஆம் ஜனவரி மீ 31உ கூடிய சட்டசபையில் இந்தியா பர்மா

விலிருந்து 1923—24 ல் பெற்றுக்கொண்ட ரூ 9.76 கோடியில் ரூ 2.75 கோடி அதாவது 100-க்கு 26 மாத்திரம் பர்மாவுக்குச் செலவு செய்கிறதென்னும் தப்பான கணக்கை லோக்கல் கவர்ன்மெண்டார் (Local Govt) எடுத்துக் காட்டினர். ஆனால் மற்றொரு கணக்குப்படி பர்மா தன் செல்வாக்கில் 100-க்கு 64 வீதம் செலவுக்கு இந்தியாவிலிருந்து பெறுவதாகத் தெரிகிறது. உண்மையில் இராணுவம் கப்பல் முதலியவைகளின் செலவுகளை நீக்கினால் மத்திய கவர்ன்மெண்ட் இந்தியாவுக்கு 15 செலவு செய்தால் பர்மாவுக்கு 14 செலவு செய்கிறதாக பர்மா கணக்கதிகாரி (Accountant-General, Burma) கூறுகிறார். இது இங்ஙனமிருக்க எங்ஙனம் பர்மா இந்தியாவுக்கு அள்ளிக் கொடுத்துக் கெட்டழிந்துபோகிறது. வேண்டுமானால் பர்மாவுக்கு இவ் விஷயத்தில் அநுகூலமாக ஏற்பாடுகள் பல செய்துகொள்ளக்கூடாதா? இதனால் பர்மாப் பிரிவினை அவசியமா? இந்திய கவர்ன்மெண்டார் இவ் வரவு செலவு கணக்கைப் பர்மாவுக்கு எடுத்துக்காட்டி லோக்கல் கவர்ன்மெண்ட் கூறுவது தவறென்று வெளிப்படுத்தச் சாவகாசமில்லாதிருப்பதைப் பற்றி நாம் பெரிதும் வருந்துகிறோம்.

பிரிக்கப்பட்ட பர்மா தான் இந்தியாவுக்கு அனுப்பி வரும் தொகையைக் கொண்டு இந்தியா தனக்குச் செலவு செய்து வந்த விஷயத்திலல்லாமலும் இன்னும் இந்தியா சொந்தமாக பர்மாவுக்குச் செலவு செய்து வந்த விதத்திலும் தனக்குப் பூரண பொறுப்பு ஏற்பட்டு செலவு செய்ய நேரிடுமன்றோ? முக்கியமாக இராணுவம், கப்பல் செலவுகளை மாத்திரம் எடுத்துக்கொள்ளுவோம். இந்தியா கவர்ன்மெண்ட் மொத்தமாக இந்தியா பர்மா இராணுவப் பாதுகாப்புக்கு மாத்திரம் சுமார் 55 கோடி ரூபாய் செலவு செய்கிறது. இதில் பர்மாவுக்கு மாத்திரம் அளவிட்டுப் பார்த்தால் சுமார் 6.1 கோடி ரூபாய் செலவாகிறது. பர்மாவின் அமைப்புக்கு இராணுவச் செலவு அதிகப்படுமென்பதில் யாதொரு ஐயமுண்டோ! இந்தியாவுக்கு வடமேற்குப் பாதுகாப்பில் இராணுவச் செலவு அதிகப்பட்டால் பர்மாவுக்கு சிறிது காலத்திற்குப் பிறகாவது வடகிழக்குப்



(சீனா தேசத்திலிருந்து) பாதுகாப்பில் இராணுவச் செலவு அதிகமாய் ஏற்படுமென்பது உள்ளங்கை நெல்லிக்கனி. பிரிவினை ஏற்பட்டுவிட்டால் மிகச் சொற்பச் செலவையுடைய இந்தியச் சிப்பாய்களையும் பர்மாவிலிருந்து நீக்க ஏற்படும். அவ்விடத்தில் பர்மியர்கள் இராணுவத்திற்குத் தகுதியற்றவர்களாயிருப்பதால் இந்தியச் சிப்பாய்களைவிட ஐந்து பங்கு அதிகச் செலவையுடைய பிரிட்டிஷ் படையை வைத்துக்கொள்ள ஏற்படும். குறைந்தது இராணுவத்திற்கு மாத்திரம் 10 கோடி ரூபாய் செலவாகுமென்பதை யாரும் மறுக்கமுடியாது. அப்படியானால் கவர்ன்மெண்டின் வருமானத்தை அதிகமாகக் கறந்து பொதுவாக பர்மாவைப் பஞ்ச நாடாக்கிவிடுமென்பது கண்கூடு.

தற்போது பொதுவாக இந்தியா பர்மா தபால் தந்தி இலாக்காவில் மொத்த வருமானம் ரூ 70 63 500. இதில் ரூ 42,43,700 செலவாகி மீதியாவது ரூ 28 19 800 தபால் தந்திப் போக்குவரத்தில் இந்தியாவில் தான் பெரும்பாலும் இலாபம் ஏற்பட்டு வருகிறது. ஆனால் பர்மாவில் ஜனங்கள் அதிகமாய்க் குடியேறாத பலவிடங்களில் தந்திக் கம்பிகள் செல்ல வேண்டியதினிமித்தம் அதிக நஷ்டம் ஏற்படுகிறது. இது நிற்க, பர்மிய யுத்தத்திற்கு 10 கோடி ரூபாய்க்கதிகமாகவும் பிறகு பர்மா சீர்திருத்தத்திற்கு சுமார் 60 கோடி ரூபாயும் இந்தியா செலவிட்டிருப்பதை பிரிவினையின் பயனாக பர்மா திருப்பி ஈயக்கூடிய நிலைமையிலிருக்கிறதா? வென்றுதான் கேட்கிறோம்.

பர்மாவின் பணமெல்லாம் இந்தியர் மூலமாக இந்தியாவுக்குக் கவர்ந்து செல்லப்படுகிறதென்று சில பர்மியர் கடாவுகின்றனர். இந்தியர்கள் காப்பாற்றும் திரவியங்கள் யாவும் பர்மாவிலேயே அசேதனப் பொருள்களாக வைத்துக்கொள்ளப்படுகின்றன. இந்தியர்களைப் பர்மாவில் செட்டியார்கள், சூரத்துக்காரர்கள், மேமன்காரர்கள், சோலியாக்காரர்கள், இந்தியக் கூலியாட்கள் என்ற விதங்களாகப் பிரிக்கலாம். கிராணி வேலைகளிலும், கல்வி இலாக்காவிலுமுள்ள சொற்ப இந்தியர்களைப்பற்றிக் கவலை வேண்டாம்.

அவர்கள் தங்கள் சம்பாத்தியங்களை இங்கேயே செலவு செய்துவிட்டுக் காப்பாற்றுவது மிகக் கொஞ்சம்.

செட்டியார்கள் தங்கள் தொழிலை (வட்டிக்குக் கடன் கொடுத்தலை) பர்மாவிலேயே விருத்தி பண்ணுவதால் அவர்கள் இந்தியாவுக்குத் திரவியம் அனுப்புவதைவிட பதின்மடங்கதிகமாக பர்மாவுக்கு தங்களுக்கு இந்தியாவிலிருக்கும் சொத்துக்களை வரவழைத்துக் கொள்ளுவது மிக்க அத்யாவசியமாயிருக்கிறது. இவர்கள் பர்மியக் குடியானவர்களுக்கு நம்பிக்கையின் பேரில் கடன் கொடுத்து பல விடத்தில் ஏராளமான நஷ்டமடைந்து பர்மியர்களின் வேளாண்மையைச் சீர்தூக்கிவிட்டு வருகின்றனர். இவர்களின் கொடுக்கல் வாங்கலாலேயே பர்மா இப்பொழுது நிலச் சீர்திருத்தமடைந்து அரிசி விளைவில் முதன்மையிலிருந்து வருகிறது. ஐரோப்பிய பாங்கிக்காரர்கள் (European Bankers) எதாவதோர் பிடிமானமின்றி கடன் கொடுத்துதவ முன்வரார். பாவம்! நமது இந்தியச் செட்டியார்கள் அதிக ஆபத்தான தொழிலைக் கைக்கொண்டு பர்மியர்களுக்கு உதவிவருவதை விட்டு அவர்கள் பர்மாப் பணத்தை வாரிக்கொண்டு போகிறார்கள் என்பது எங்ஙனம் பொருந்தும். ஆனால் அவர்களுக்குப் பிரிவினையால் கஷ்டங்களையும், நம்பிக்கையின்மையையும் காட்டிவிட்டால் மாத்திரம் பர்மாவிலுள்ள தங்கள் சொத்துக்களை ரூபாய் மயமாக்கிக் கொஞ்சங்கொஞ்சமாக இந்தியாவுக்குக் கடத்த முயலுவார்கள். ஆதலால் பிரிவினை ஏற்பட்டால் அன்றி பர்மாவின் பணம் இந்தியாவுக்குப் போய்ச் சேராது என்பது திண்ணம்.

இந்தியக் கூலி வேலைக்காரர்கள் தங்கள் சம்பாத்தியங்களில் ஏதோ கொஞ்சம் இந்தியாவிலுள்ள தங்கள் பிள்ளைகளுக்கனுப்புவது உண்மை. ஆனால் எப்படி இந்தியா, பர்மாவின் அரிசி, மரம் முதலிய சாமான்கள் அவசியமாகி அதற்குப் பணங் கொடுத்துப் பெற்றுக்கொள்ளுகிறதோ அதுபோலவே பர்மாவும் இந்திய வேலையாட்கள் அவசியமாகி அவர்கள் வேலைக்குக் கூலி கொடுக்கிறது. இதனால் பர்மா எங்ஙனம் நஷ்டமடையும்? இந்திய வேலை ஆட்கள்



பர்மாவுக்கு மிகவும் அத்யாவசியமாயிருக்கிறது. ஏனென்றால் பர்மிய வேலையாட்கள் செய்யக்கூடாததாகவும், விரும்பாததாகவுமுள்ள வேலைகள் பல உள. இப்படிப்பட்ட வேலைகள் செய்யக் கூலியாட்கள் வேண்டாமா? இன்று இந்தியக் கூலியாட்களை நிறுத்திவிட்டால் பர்மாவில் யாதொரு வேலையும் நடைபெறாது என்பதை நான் திட்டமாய்ச் சொல்லுவேன். பர்மாவில் இந்தியர்கள் மாத்திரமா வந்திருக்கின்றனர்? சீனா, ஐரோப்பா முதலிய தேசத்தார்களும் பர்மாவில் வந்து கவர்ன்மெண்ட் உத்தியோகங்களிலமர்ந்தும், வியாபாரிகளாக விருந்தும் ஆயிரக் கணக்காக மாதாமாதம் தங்கள் சுய ஊர்களுக்கு அனுப்பிக் கொண்டிருப்பதால் பர்மாவின் பணம் வறண்டு போகாமல் பாவம்! எளிய இந்தியக் கூலிகள் தங்கள் வேலைக்குக் கிடைத்த கூலியில் செலவு போக மீதியான அற்பத் தொகையைத் தங்கள் சுய ஊர்களுக்கு அனுப்புவதால் மாத்திரம் பர்மாவில் பண வறட்சி ஏற்படுகிறதா? வென்றுதான் கேட்கிறோம்.

இந்தியர்கள் ஆயிரக் கணக்காக வந்து சேர்ந்து பர்மியர்களைக் காணக்கூடாது. இந்திய மயமாக்கி விட்டார்களென்னும் பொய்க் கதையை பெரிய உத்தியோகஸ்தர்கள் பரப்பிவிட்டனர். ஏராளமான இந்தியக் கூலியாட்கள் கப்பலில் வந்து இரங்கூனில் இறங்குவதையும், இந்தியர்கள் அநேகமாய் முக்கிய பட்டணங்களிலும், புகைவண்டி மார்க்கங்களிலும் ஐரோப்பியர் கண்களுக்கு அதிகமாய்ப் புலப்படக் கூடியவர்களாக வசிப்பதால் இக் கதைகளுக் காளாகின்றனர். 'தேழ் வாகில் நெய் வடிகிறதென்றால் கேட்போருக்குப் புத்தியில்லையா?' பர்மாவின் உள் நாடுகளில் ஆங்காங்கு ஒவ்வொரு காப்பிக் கடை வைத்திருக்கும் மலையாள காக்கா ஜாதியாரையும், சில பயிர்த் தொழில் செய்வோரையுமன்றி வேறு இந்தியரைக் காண்பதரிது. ஆனால் இவர்களோ வெகு சிலர்.

1921-ம் வருடக் கணக்குப்படி பர்மாவின் ஜனத்தொகை 1,32,12,192; இதில் இந்தியர்களின் ஜனத்தொகை 9,48,768. முன் கணக்குப்படி இந்தியர் ஜனத்தொகை 100-க்கு 13 அதிகரித்திருந்தது. ஆனால் 1921-ல் வருடக் கணக்கில் 100-க்கு 10 அதிகரி

த்திருக்கிறது. இதனால் இந்தியர் அதிகரிப்புக் குறைந்து வருகிறதென்று நன்கு தெரிகிறதல்லவா? பர்மாவின் உள் நாடுகளில் 18 ஜனங்களில் ஓர் இந்தியனைப் பார்ப்பது கஷ்டம். உள் நாடுகளிலுள்ள இந்தியர் அநேகமாய் வேளாண்மை செய்து பர்மாவைச் செழிப்பான தேசமாக்கிவிட்டும் ஆக்கிக்கொண்டும் வருகின்றனர். மீதியான இந்தியர்கள் முக்கிய பட்டணங்களில் வியாபாரிகளாயும், கூலி வேலையாட்களாயுமிருந்து பார்ப்பதற்கு அதிகமாக ஐரோப்பியர்களுக்குத் தோன்றுகிறதேயல்லாது உண்மையில் இந்தியர்கள் ஜனத்தொகை அதிகப்பட்டு பர்மியர்களுக்கிடமின்றி எல்லாம் இந்திய மயமாக்கி விடுகிறார்களென்பது ஓர் பெரும் புரட்டு. பர்மாவில் இந்தியர் தொகை அதிகப்படுவது இந்தியப் பெண்களின் தொகையில் அதிகமாகக் கட்டுப்பட்டிருக்கிறதல்லவா? ஆனால் இந்திய ஆண்களைவிட பெண்கள் வெகு கொஞ்சம். 1901-ம் வருடக் கணக்குப்படி இந்தியப் பெண்கள் 100-க்கு 1.9 அதிகரித்திருந்தனர். 1921-ம் வருடத்தில் 100-க்கு 2.5 அதிகரித்திருக்கின்றனர். பர்மா உள் நாடுகளிலுள்ள 1921-ம் வருட இந்தியப் பெண்களின் ஜனத்தொகையில் பாதி இந்தியாவில் பிறந்தவர்கள். இந்தியர்கள் அநேகமாய் தங்கள் மனைவிகளை சுய ஊர்களிலேயே விட்டு பர்மாவுக்கு வந்திருப்பதால் பெரும்பாலும் இந்தியர் பர்மாவில் ஆண்களாயிருக்கின்றனர். ஆதலால் இந்தியர் அதிகரித்து பர்மியர்களுக்கு இடமில்லாது செய்து விடுவார்களென்பது கூடாத காரியம். ஆனால் இந்தியர்கள் தங்கள் சுய சமூகத்தை இழந்து பர்மிய மயமாகி விடுவார்களேயன்றி இந்திய மயமாக்கிவிடுவது எவ்வகையிலும் பொருந்தாத காரியம். வீணான ஆதாரமற்ற விஷயங்களைக் கூவித் திரிபவர்கள் பர்மாவின் க்ஷீண திசைக்கும், மித்திர பேதத்திற்கும் பாலூட்டி வளர்க்கிறார்களென்பதற்குத் தடையில்லை.

தற்போது பண லேவாதேவியில் பர்மா சிறிது குறைவுபட்டிருப்பதாகத் தோன்றுவதன் காரணங்கள் மற்ற தேசங்களைப் போலவே கடந்த மகாயுத்தத்தின் கொடுமையும், காலத்திற்கேற்றவாறு ஜனங்கள் வாழ்க்கையைச் சரிப்படுத்திக் கொள்ளாமையுமேயா



கும். இந்தியர்கள் எவ்வழியிலும் பர்மாவில் அநுகூலங்களையடைய முடியாமலிருக்கிறார்கள். பர்மியர்கள் ஊக்கத்துடன் உழைக்க முற்பட்டு விட்டால் வியாபாரத்திலும் மற்றும் எத்தொழிலிலும் இந்தியர்களுக்கு இடமில்லாது செய்துவிடலாம். இவர்கள் தேசத்துப் பணக் குறைவுக்கு பாவம்! நெற்றிவேர்வை நிலத்தில் விழப் பர்மா தேசத்து முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு வரும் இந்தியர்களை காரணம் என்று சொல்லுவது விந்தையினும் விந்தையே. "தின்பவன் தின்ன திருப்பத்தூரான் தெண்டங் கொடுப்பது போல்" பர்மாவின் பணத்தைக் கொண்டு போகிறவர்கள் கொண்டு போக சும்மாவிருக்கும் இந்தியர்கள் மீது பழி சுமத்துவது எங்ஙனம் பொருந்தும்?

பர்மியர்கள் சுகபோகமாக இலகுவான வாழ்க்கையை விரும்பி "இருந்தால் இராஜாவாயிருப்போம் இல்லாவிட்டால் கழுதை மேய்ப்போ" மென்றிருப்பவர் பலர். இவர்களில் கலாசாலைப் படிப்பில் தேறியவர் கொஞ்சம். ஆனால் பர்மாவில் உத்தியோகங்களோ, அநேகம். ஆதலால் இவர்கள் உத்தியோக முறைகளில் சென்று மறைந்து விடுவார்கள். மற்ற வியாபாரம், வேளாண்மை முதலிய தொழில்களுக்கு விருப்பமும், போதிய கல்வியுமில்லாது அத்தொழில்களுக்குத் தகுதியற்றவர்களாகி இந்தியர்கள் இத்தொழில்களில் தலையிட்டுக் கொள்ளுகின்றனர். மேலும் மேனாட்டுப் படிப்பையும் நாகரீகத்தையும் நாடி அநேக கிராமவாசிகள் இரங்கூன் போன்ற பெரிய பட்டணங்களுக்கு வந்து விடுவதால் இந்தியர்கள் இல்லாவிட்டால் பயிர்த் தொழில்கள் க்ஷீணதிசை யடைந்திருக்குமென்பதில் ஐயமில்லை. இவ்வித உண்மையான காரணங்களை அறிந்துகொள்ளாமல் எல்லாக் குறைவுகளுக்கும் இந்தியர்களே காரணமென்று யோசியாமல் அந்நியர் சொல்லைக் கேட்டு விரைவில் பிரிவினை வேண்டும் பிரிவினை வேண்டுமென்று ஓலமிட்டுக்கொண்டு திரிபவர் "அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்டது" போலாவார் என்பது திண்ணம்.

பிரிவினைக் கோஷ்டியைச் சேராத மீதி முக்கால் பாகத்தார் பிரிவினையின் பிறகு ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெறுவது மிகவரிது. ஆதலால் சுதந்திரம் பெற்ற பிறகுதான் பிரிவினையைக் கருதவேண்டுமென்றும், அதுவரை இந்தியாவோடு சுதந்திரத்திற்குப் பாடுபட வேண்டுமென்றும் டாங்கூ (Toungoo) என்ற ஊரில் கூடிய உந்தானு என்ற பெரிய கூட்டத்திலும் இரங்கூனில் கூடிய பெரும் G. C. B. A. 16-வது ஆண்டுக் கூட்டத்திலும் திரு. யூ சி லேயிங் (U Chit Hlaing) என்பவரின் தலைமையின் கீழ் தீர்மானித்திருக்கின்றனர். இது மகாத்மா காந்தியவர்களின் பர்மாப் பிரவேசத்திற்குப் பிறகுதான் நடந்தது. 1929-வரு டிசம்பர்மீ 31உக்குள் நேரு திட்டப்படி (Dominion Status) சுதந்திரம் கிடைக்கவேண்டும். இன்றேல் ஒற்றுழையாமையைக் கைக்கொண்டு வரிமுதலியவைகள் கொடாது பூரண சுயேச்சைக்கு (Complete Independence)ப் பாடுபடுவோமென அகில இந்தியா கல்கத்தா காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றி பார்லிமெண்டுக்கும், வைசிராயுக்கும் தெரியப்படுத்தி யிருப்பதுபோலவே மேல்குறித்த உந்தானு கூட்டமும் தீர்மானம் நிறைவேற்றி பார்லிமெண்ட் அங்கத்தினர் பலருக்கும் வைசிராயுக்கும் தந்திகள் கொடுத்திருக்கின்றனர். மேலும் இந்தியக் காங்கிரஸ்போலவே ஆங்கிலத் துணி பகிஷ்காரத் தீர்மானமும் நிறைவேற்றியிருக்கின்றனர். இவ் விஷயத்தில் வெகு பாடுபட்ட திரு. தாராவடி யூ பு (Tharrawaddy U Pu) என்பவரையும் திரு. யூ சி லேயிங் என்பவரையும் இவண் குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கும் இவர்களுக்குதவியா யிருந்தவர்களுக்கும் கடவுள் தேகசௌக்கியத்தை யீந்து அவர்கள் கொண்ட கொள்கைகளைச் சோரவிடாது முடிக்கத் திருவருள் புரிவாராக.

சைமன் கூட்டத்தார்களோடு பர்மாவில் பர்மா சட்டசபையால் தேர்ந்தெடுத்து ஒற்றுழைந்த கூட்டத்தார் (Burma Simon Provincial Committee) இப்பொழுது பிரிவினைக்கே அநுகூலமாகத் தங்கள் தீர்மானங்களை முடித்துத் தற்போது லண்டனிலுள்ள சைமன் கூட்டத்தாருக்கு அனுப்பத் தயாரா யிருப்பதாகத் தெரிகிறது. பர்மா நாட்டுக்கு மதம் (புத்தரை) கொடுத்தது நம் நாடு, செலவுக்குக் கொடுத்தது நம் நாடு, சீர்திருத்தியது நம் நாடு, பாதுகாத்தது நம் நாடு இன்று பிரிவினையாவதும் நம் நாடாம்! இது "ஆறு கடக்கும்வரை அண்ணன் தம்பி ஆறு கடந்தபின் நீ யார் நான் யார்" என்ற கதைபோலல்லவா முடிந்துவிட்டது.

பிரிவினையால் இந்தியா எவ்வழியிலும் நஷ்டமடையப் போவதில்லை என்பது அறிவீனருக்கும் அறிவுறுத்தும். ஆனால் பிரிவினையால் கஷ்ட நஷ்டமடையப் போவது பர்மா தேசமே யென்று நான் துணிவுடன் கூறுவேன். நாம் இனி யாதுதான் செய்யலாம்? காட்டலாம்? ஊட்டலாம்?



# ஹரி கோவிந்து கோவில்.

## அமெரிக்காவில் இந்தியப் பிரசாரர்.

ராம்லால் பாஜ்பாய்.

இந்திய வாலிபர்கள் உயர்ந்த நோக்கங்களோடும் உண்மையான பக்தியோடும் தங்கள் தாயகத்தின் செய்தியை உலகத்தில் பலவிடங்களுக்குஞ் சென்று பரப்பி, இந்தியாவின் சுதந்திரத்திற்கு அவர்களின் அனுதாபத்தைப் பெறுவது இந்தியாவுக்கு ஒரு பெரிய எழுச்சியேயாகும். ஒரு தேசத்துக்குச் சுதந்திரமும் அதன் நிர்வாகமும் முக்கியமாய் அத் தேசத்து வாலிபர்களின் உறுதியைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

திரு. ஹரிகோவிந்து கோவில் என்பவர் இந்துப் பிரசுரரும் "ஓரியன்ட்டல் மேகஜின்" ("Oriental Magazine") என்னும் ஆங்கிலப் பத்திரிகையின் தலைமை ஆசிரியருமாவர். நவீன மேனாட்டு மேலான சாஸ்திரீய அருஞ் செய்கைகளும் பண்டைக் கீழ்நாட்டு உயரிய ஆத்மீகக் கருத்துகளும் கொண்ட ஒற்றுமைக்காக, அவர்களின் சிறப்பான நாகரீகத்தின் நியாயமான பெருமையைக் கீழ் மேல் நாட்டு வளர்ச்சிகளின் மூலம் விருத்தியாக்கப் பாடுபடும் இந்தியப் புதல்வர்களில் இவரும் ஒருவர்.

## அமெரிக்கரின் தன்னம்பிக்கை நோக்கம்

ஹரிகோவில் என்பவர் பிக்கானரில் பிறந்து, காசியில் கல்வி கற்று, 1920-ம் ஆண்டில் அமெரிக்காவிற்கு வந்தார். அமெரிக்கர்கள் பொது வாழ்க்கையில் தங்கள் இளமைப் பருவத்திலேயே கஷ்டமான விவசாயத் தொழில் செய்வது, பத்திரிகை சுமந்து விற்பது அல்லது இன்னும் சில அற்பமான கூலி வேலைகளைச் செய்து தங்கள் வாழ்க்கையை ஆரம்பிப்பது போலவே இவரும் அதே உற்சாகத்தைக் கொண்டார். தண்டவாளக் கட்டைகளைப் பிளப்பது, பல சாக்குக் கடைகளில் கணக்குவேலை செய்வது போன்ற அநேகவிதத் தொழில்களில் முதலில் இருந்து பின்னால் யாவராலும் விரும்பப்படக்கூடியவராகவும், அமெரிக்க தேச சரித்திரத்திலேயே சிறந்தவராகவும்வந்த ஜனாதிபதியான ஆப்ரகாம் லிங்கன் என்பவரைப் பற்றி அமெரிக்கர்கள் மிக்கப் பெருமையாகவும் மரியாதையாகவும் பேசிக்கொள்கின்றனர். உலகத்திலேயே செல்வத்திற் சிறந்த சீமான்களில் ஒருவரான ஹென்ரி போர்டு என்பவர் கையில் ஒரு பைசாவுமின்றியே தன்னுடைய வாழ்க்கையை ஆரம்பித்தார். சார்லஸ் லிண்ட்பர்க் என்ற பிரசித்திபெற்ற (ஆகாய விமானத்தில்) பறப்பவர் செல்வவானாகப் பிறக்கவில்லை. சில அமெரிக்கர்கள் பணவுதவி செய்யப் பின்வாங்கியிருந்தால், இவர் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தின் குறுக்காகப் பறந்திருக்கமுடியாது. அபாயத்திற்கேதுவான அப்பேர்ப்பட்ட ஆபத்தான செய்கைகளுக்குப் பணவுதவி பெறுவது சாமான்யமான செய்கையல்ல. லிண்டுபர்க் அனுபவமும் சாம



ர்த்தியமும் வாய்ந்தவராக இருந்ததோடு, உண்மையும் உறுதியுங் கொண்டவர். இதுவே அவரிடத்தில் நம்பிக்கை ஏற்படக் காரணம். இந்த நம்பிக்கையே, பணவுதவி செய்பவர்களை, 'அவர் ஜெயமடைவார்' என்று நம்பி உதவி செய்யச் செய்தது. ஐக்கிய மாகாணங்களுக்குக் கல்வி கற்கவரும் இந்திய மாணவர்கள் தங்கள் முன்னேற்றத்திற்கு இடைஞ்சலாகவுள்ள அவமதிப்பை அவமதித்து அமெரிக்கரின் கொள்கைகளையே பின்பற்றுகின்றனர். அமெரிக்காவிற்கு அவர்களில் சில மாணவர்கள் பணமற்றே வந்து சேருகின்றனர். அவர்கள் பண்டபாத்திரங்களைக் கழுவுதல், பரிமாறுதல் முதலிய பல் வகைத் தொழில்களைச் செய்தே சர்வ கலாசாலைகளுக்குச் செலுத்தவேண்டிய சம்பளம் தன் சாப்பாடு முதலியவைகளுக்கு வேண்டிய சௌகர்யங்களைச் செய்துகொள்ளுகின்றனர். அவர்கள் செய்யும் கீழ்த்தரத் தொழிலினால், அவர்களைக் கேவலமாகவோ அல்லது தாழ்ந்தவர்களாகவோ கருதுவதில்லை உண்மையில் கலாசாலைகளின் பண்டிதர்கள் அவர்களிடத்தில் அதிக மதிப்பு வைத்திருப்பதோடு, அவர்களுக்கு வேலை வாங்கிக் கொடுக்கும் விஷயத்தில் சற்று கவலையும் எடுத்துக் கொள்கின்றார்கள்.

## ஹரி கோவிலை நான் சந்தித்த விதம்

நியூயார்க் நகரத்தில் உள்ள இந்து சாப்பாட்டு விடுதியில் வழக்கமாக பந்தி போஜனத்துக்கு சாப்பிடவரும் மாணவர்களோடு உட்கார்ந்து, நான் தமாஷாகப் பேசிக்கொண்டிருந்தேன். அவ்வமயம் ஹரி கோவில் உள்ளே வந்தார். புதியவர்களின் வருகை அதிக ஆவலுடன் எதிர்பார்க்கப்படுவதால், அவரது வரவு எல்லாருடைய கவர்ச்சியையும் இழுத்தது. அவர் எங்கிருந்து வருகிறாரென்றும், அவரது எண்ணம் என்னவென்றும், எவ்வளவு பணம் வைத்திருக்கிறாரென்றும் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியிருந்தது. அவர் எங்களோடு உட்கார்ந்து சாப்பாடு முடித்துக்கொண்டு அவருடைய நோக்கங்களைப் பற்றிச் சொல்லவாரம்பித்தார். அவர் மெசாச்சுசெட்ஸ் சாஸ்திரக்கலாசாலையில் [(Massachusetts Institute of Technology) (இதனைச்சுருக்கமாய் ஆங்கிலத்தில் (Boston Tech)

என்று சொல்லப்படும்)] மின்சார இயந்திர ஆராய்ச்சியைக் கற்றுக்கொள்ள வேண்டி இந்தியாவிலிருந்து வந்ததாகவும், தன்னுடைய விண்ணப்பமும் யோக்கியதா பத்திரங்களும் முன்னாலேயே அனுப்பப்பட்டு விட்டதாகவும் சொன்னார். ஆனால் பண விஷயத்தைப் பற்றிச் சொல்லும் பொழுது, அவரிடத்தில் அமெரிக்க நாணயம் 5 செண்ட்களும் இங்லீஷ் நாணயத்தில் 2 பென்ஸும் தவிர வேறு யாதொன்றும் இல்லையெனத் தெரிந்தது. ஆனால் 'பணமில்லாமல் எப்படிக் கலாசாலையில் படிக்கமுடியும்?' என்று நாங்கள் கேட்டபொழுது, தான் வேலை செய்தே பணம் சம்பாதிப்பதாக உறுதியாகச் சொன்னார். அவர் தன்னுடைய எண்ணத்தில் உண்மையாக இருப்பதாகத் தெரிந்து அவர் சில சிநேகிதர்களோடு தங்கி இருக்கும்படியாக அறிவித்ததோடு, மறுநாட் காலையில் எழுந்து பத்திரிகை வாங்கி 'தேவை' என்று போட்டிருக்கும் பத்தியில் பார்த்து, ஓர் வேலை சம்பாதித்துக் கொள்ளும்படியும் சொன்னேன். அப்பொழுது எங்களுடன் இருந்த (காலஞ்சென்ற) திரு. பி. என். தாஸ், அவருக்கு 5 டாலர்களைக் கொடுத்தார். லாலா லஜபதிராய் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட இந்தியத் தகவல் அறிவிக்கும் ஆபீசில் (India Information Bureau) மறுபடி அவரைச் சந்தித்த பொழுது, தான் வாரம் ஒன்றுக்கு 15 டாலர் (அப்பொழுது டாலர் ரூ. 3. மதிப்பு) சம்பளத்தில் புகைப்படப் படலங்களைக் (Films) கழுவும் வேலையில் அமர்ந்திருப்பதாகச் சொன்னார். பின்பு சில நாட்களுக்குப் பிறகு நியூயார்க் நகரக் கலாசாலையில் சேர்ந்தார்.

## வழிச்செலவுப் பணத்திற்காக

இப்பொழுது நாங்கள் நெருங்கிய சிநேகிதர்களாகி விட்டோம். நான் அவரை ஒருநாள், "நியூயார்க்குக்குப் பணமின்றி எங்ஙனம் வந்தீர்" என்று கேட்டேன். அதற்கு அவர் சொன்னதாவது:— "நான் கல்வியில் கெட்டிக்காரனாக இருந்ததால், உபகாரச் சம்பளம் பெற்றுக் காசி ஹிந்து சர்வகலாசாலையில் மாணவனாகச் சேர்ந்து படித்தேன். எனது பெற்றோர் மிகவும் ஏழைகள். எனது தாயார் எனக்கு ஆரம்பக் கல்வி போதிக்கும் பொருட்டுத் தனது நகைகளை



அடகு வைத்தாள். நான் அமெரிக்காவுக்குப் போய்ப் படிக்க வேண்டுமென்று அநேக வருடங்களாக மனோராஜ்யம் செய்து கொண்டு வந்தேன். கடந்த மகா யுத்தம் முடிந்த பிறகு நான் இந்தியாவை விட்டுப் போகத் தீர்மானம் பண்ணினேன். கடைசியாக 1920-ம் ஆண்டில் பரோபகாரிகளான சில மார்வாரிகளிடமிருந்து கொஞ்சம் ரூபாய் பெற்றுக்கொண்டேன். ஜாஜோதியா சகோதரர்கள், பிர்லா சகோதரர்கள், காசி சிவப்பிரசாத குப்தா முதலியவர்கள் அவர்களில் முக்கியமானவர்கள். நான் உடனே டிக்கட் வாங்க பம்பாய்க்குப் போனேன். ஆனால் 2-ம் வகுப்பு டிக்கட்டுகள் பல மாதங்களுக்கு முன்னாலேயே விற்கப்பட்டு விட்டதால், எனக்குக் கிடைக்கவில்லை. அதனால் பெரிதும் மனங் குன்றி பம்பாயிலிருந்து மார்செயில்ஸ்வரை முதல் வகுப்பு டிக்கட் (பிரயாணச் சீட்டு) எடுத்து, நான்கு ரூபாய்களோடு யாத்திரை செய்தேன் அதே அறையில் என்னோடு மூன்று இந்துப் பிரயாணிகள் இருந்தனர். அவர்களில் பம்பாய் வியாபாரியான ஒருவர் என்னிடத்தில் அதிக சகோதர வாஞ்சை கொண்டார். அவர் என்னை எங்கே போகிறாயென்றும், என் நோக்கங்கள் என்னவென்றும் கேட்டார். நான் அவருக்குப் பதில் சொன்னதிலிருந்து என்னிடத்தில் நான்கே ரூபாய் மார்செயில்ஸ் பட்டணத்திற்கு வந்தபொழுது இருப்பதாய்த் தெரிந்து, அவர் தான் சென்ற சாப்பாட்டு விடுதிக்கு அழைத்துக் கொண்டுபோனார். அவருடன் ஒரு பகலும் ஒரு இரவும் தங்கினேன். அவர் எனது உண்மையான ஆவலையறிந்து லண்டனுக்கு ஒரு டிக்கட் வாங்கிக் கொடுத்ததுமன்றி, இரண்டு பவுன்களையும் வழிச்செலவுக்குக் கொடுத்தனுப்பினார். நான் லண்டனைச் சேர்ந்தவுடன் சில இந்திய மாணவர்களைச் சந்தித்தேன். அவர்கள் என்னிடத்தில் பணமில்லாததையும், வேலை பார்க்க முயற்சிப்பதையும் அறிந்து, என்னை ஏளனம் செய்ததோடு என் உற்சாகத்தையுங் குறைத்தனர். இருந்தபோதிலும், விவசாய சம்பந்தமான தன் கல்வியை அமெரிக்காவில் முடித்துக்கொண்டு இந்தியா திரும்பும் மகாதேவசிங், Ph. D. என்ற பஞ்சாப் வாலிபர் அவர்கள் போலல்லாது என்னைப்பார்த்து, அமெரிக்காப் போகும் எண்ணத்தை மாற்றவேண்டாமென்று உறுதியாகச் சொன்னார்."

## சிறந்த ஹிந்து பரோபகாரி

"நான் லண்டனில் இருக்கும்பொழுது வேலை கிடைக்காததால், என் கையிலுள்ள பணம் சீக்கிரத்தில் குறைந்தது. பிறகு, லண்டனில் அம்பலால் சாரபாய் என்னும் நாமம் பூண்ட மில் சொந்தக்காரர் ஒருவர் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். நான் அவரைப் பார்க்கப் போனேன். அவர் மிக உபசரணை செய்யக் கூடியவராகவும் மரியாதை யுள்ளவராகவு மிருந்தார். அவர் பெரிய தனவந்தரா யிருந்தாலும் யோக்கியதை யற்ற பல இந்தியர்களால் ஏமாற்றமடையப் பட்டதால், இந்திய மாணவர்களுக்கு உதவி செய்வதில் அதிக ஜாக்கிரதையாக இருந்து வந்தார். அவர் என்னிடத்தில் என்னுடைய குணம், உண்மையான எண்ணங்கள் முதலியவைகளைப் பற்றித் தெரிந்துகொள்ளும்படி ஏதாவது காண்பிக்க முடியுமானால் உதவி செய்வதாகச் சொன்ன பொழுது, என். மனம் அதைரியமடைந்தது. லண்டனில் எனக்கு செல்வாக்குள்ள எவரையும் தெரியாது. ஆனால் சாரபாயோடு அதிகப் பரீட்சயமுள்ள எனது கலாசலையின் தலைமை ஆசிரியரான ஸ்ரீமான் எ. பி. துருவ என்பவரிடமிருந்து ஒரு நல்ல நற்சாக்ஷிப் பத்திரம் வாங்கிவந்தது எனக்கு ஞாபகம் வந்தது. மற்றும் திரு. சாரபாயை நன்கு அறிந்த பிரசித்தி பெற்ற ஒரு ஆங்கில மாதின் பழக்கம் சிறிது உண்டாக்கிக் கொண்டதால், அவரும் எனக்குச் சிபார்சு செய்யச் சம்மதித்தார்.

திரு. சாரபாய் இப்பொழுது என் அந்தரங்க உண்மையான எண்ணங்களை அறிந்ததால், நான் ஐக்கிய மாகாணங்களுக்குச் (U. S. A.) செல்லவேண்டியதற்காக மூன்றாம் வகுப்பு டிக்கட் வாங்கிக் கொடுத்தார். நான் சந்தோஷமடைந்து முதலில் போகும் கப்பலிலேயே இடம் பார்த்துப் புறப்பட்டேன். அங்கே ஐக்கிய மாகாணங்களின் சர்வ கலாசாலையில் படிப்பதற்குச் செல்லும் செல்வவந்தர்களான இரு இந்திய மாணவர்களைச் சந்தித்தேன். நான் பணமில்லாம விருப்பதை அவர்கள் அறிந்து, குறைந்தது 50 டாலராவது கையில் இல்லாவிட்டால் அமெரிக்காவில் இறங்கவே அனுமதிக்கப்பட மாட்டேன் என்று சொன்னார்கள். எனது கஷ்டமான முயற்சிகளுக்குப் பிறகு நான் மறுபடியும் இப்பொழுது திருப்பி அனுப்பப்பட்டு விடுவேனோ? என்று நெடு நேரம் சிந்தித்துக்கொண்டே யிருந்தேன். துறைமுகத்தில் சோதனை தீரும்வரை 50 டாலர் இரவல் கொடுக்கும்படி நான் அவர்களைக் கடைசியில் கேட்டேன். நான் சோதனையிலிருந்து விடுபட்டவுடன் திருப்பிக் கொடுத்து விடுவதாயும் உறுதி கூறினேன். அவர்கள் உண்மையிலேயே இரக்கச் சித்தமற்றவர்களாதலால், கடைசி வினாடிவரை எனக்குக் கொடுக்க மறுத்தனர். பிறகு அவர்கள் என்னிடத்தில் ஒரு லக்கோடாவைக் (Cover) கொடுத்து, சோதனை தீர்ந்தவுடன் கொடுத்துவிடும்படி சொன்னார்கள்.



நானும் என் குறை தீர்ந்து போக்கு நிறைவேறு மென்று ஆவலுடன் இருந்தேன். துறைமுகப் பரிசோதகர்கள் என்னுடைய நற்சாக்ஷிப் பத்திரங்கள் முதலியவைகளைக் கண்டு திருப்தி கொண்டு என்னிடத்தில் இருக்கும் பண விஷயத்தைக் கேட்காமலே என்னைப் போக அனுமதித்து விட்டார்கள். நான் வெளியே வந்தவுடன் அந்தக் கவரை அவர்களிடம் அதிக நன்றியறிதலோடு திருப்பிக் கொடுத்து விட்டேன். அந்த லக்கோடாவில் உண்மையிலே பணம் இருந்ததோ அல்லது கொடுமையான கேலிதான் செய்தார்களோ என்று ஆச்சர்யமடைகிறேன். நான் தலைவிதியின் வல்லமையில் உறுதியாய் நம்பக்கூடியவன்.

## கடைசியாக அமெரிக்காவில்

அமெரிக்காவில் நான் அடியெடுத்து வைத்தவுடனே, நான் தீர்மானித்த (குறித்த) இடம் வந்து சேர்ந்தேனென்று ஆனந்தத்தில் மூழ்கினேன். நான் புதிய வாழ்க்கையின் வாசலில் நிற்பதாக உணர்ந்தேன். என்னுடன் வந்த சிநேகிதர்கள் தங்களுடன்

சாப்பாடு விடுதிக்கு வந்து அந்த இரவை அவர்களுடன் கழிக்க வரும்படி யழைத்ததை நான் அன்புடன் ஏற்றுக்கொண்டேன். ஹிந்து விடுதியில் எனது தாய் நாட்டாரில் சிலரைச் சந்திக்கலாமென்று நான் எதிர் பார்த்து அடுத்த நாள் காலையில் அங்கு போனேன்."

## புதிய வாழ்க்கையின் உதயம்

உற்சாகமும் நம்பிக்கையும் அருமையான குணங்கள். அவைகள் வாலிபம் என்பதோடு சேர்ந்து அரிய அதிசயங்களைச் செய்யச் சாத்தியப்படுகிறது. ஹரி கோவில் இத்தகைய குணங்கள் அமையப்பெற்று, தற்கால இயந்திர சாதனங்களால் ஆக்கப்பட்டனவும், போட்டியானவுமான கைத்தொழில் முறைகளைக் கடந்து செல்லக் கடுமையாகப் போராடினர்.

சில மாதங்கள் சென்ற பின்பே மறுபடியும் நான் அவரைச் சந்தித்தேன். நான் அவருடைய கல்வி விஷயம் எப்படி இருக்கிறதென்று கேட்டபொழுது, அவர் தான் மின்சார இஞ்ஜினீயராக ஆவதற்குப் படிக்கும் படிப்பை நிறுத்தத் தீர்மானித்துக் கலாசாலையினின்றும் நீங்கப்போவதாகச் சொல்லக் கேட்டு, நான் அதிசயமடைந்தேன். அவர் அங்ஙனம் செய்யக் காரணம் யாதென்பதையறிய ஆவல்கொண்டேன். அதற்கு அவர் சொன்னதாவது:—
"நான் அமெரிக்காவிலிருப்பது உண்மையாகவே என்னுடைய கொள்கையை மாற்றிவிட்டது. இந்தியாவில் மற்றவர்களைப்போலவே பட்டப் பரீக்ஷைகளில் தேற ஆவல்கொண்டேன். இஞ்சினீயரிங் இலாக்காவில் அப்பொழுது எனக்குப் பிரியம் இருந்ததால்தான் நான் அதை விரும்பினேன். நான் என் பட்டப் பரீக்ஷைகளை முடித்துக்கொண்டு இந்தியாவிற்குத் திரும்பிப் போய் உத்தியோகத்திற்குத் திண்டாட வேண்டுமென்பதை முதலில் கவனிக்கவில்லை ஏனெனில் மிகச் சிலரே அங்கு வேண்டியிருக்கிறது. அதனால் அமெரிக்காவிற்கு வந்ததிலிருந்து அதிகமாக யோசனை செய்துகொண்டிருக்கிறேன். ஒரு உபயோகமான



வேலையில் அல்லது கைத்தொழிலில் அனுபவமாய்ப் பழகுவது மிக உபயோகமுள்ளதென்றும் வருமானம் உடையதென்றும் நான் தீர்மானித்திருக்கிறேன்.

"நான் இந்தச் சில மாதங்களுக்குள் ஒரு தொழிற் சாலையில் சித்திரக்காரரின் உதவியாளனாக இருந்திருக்கிறேன். சமீப காலத்தில் நான் ஒரு சங்கம் நிறுவி அதன் ஆதீனத்தில் பிரசுரத் தொழிலை ஆரம்பித்தேன். எனக்கு இது பிரியமாய் இருக்கிறது. இதற்காக நான் அநேக ஜனங்களையும் பல பத்திரிகைகளின் காரியாலயங்களையும் போய்ப் பார்க்க விரும்பினேன். இந்தியாவில் நான் மாணவனாக இருக்கும் காலத்திலேயே 'ஆஸ்ரமம்' என்னும் மாணவர் பத்திரிகை என் வசமிருந்தது. தெளிவாகவும் சுத்தமாகவும் விஷயங்களை எழுதி அனுப்பும்படியாக நாங்கள் பல்வேறு மாணவ விஷயதானிகளுக்குக் காகிதங்களை வினியோகிப்பது வழக்கம். மற்றவர்கள் படங்களையோ அல்லது கோலங்களையோ எழுதியனுப்புவார்கள். எல்லாம் வந்து சேர்ந்தவுடன் அவைகளை ஒழுங்குபடச் சேர்த்துச் சிறிய பத்திரிகையாகச் செய்வோம். அதில் சில விஷயங்கள் பெரிய பத்திரிகைகளுக்கும் உபயோகப்படும். இந்த மாதிரி செய்வதில் எங்களுக்குப் பெருமையதிகம். மாணவர்களின் ஊக்கச்செய்கைகளில் அதிகப் பிரியங்கொண்டு நானும் சேர்ந்து செய்வேன். எனக்குச் சாயந்திரங்களில் இலக்கிய விஷயப் பேச்சுக்களிலும் தீபப் படக்காட்சிப் பிரசங்கங்களிலும் பிரியம் அதிகம்.

## எனது புதிய வழி

"நான் இஞ்சினீயர் பரீட்சைக்குப் படிப்பதைக் காட்டிலும் இலக்கியத்திலும் சித்திர வேலையிலும் அதிகப் பிரியமுடையவனாய் இருக்கிறபடியால், கலாசாலையை விட்டுவிடத் தீர்மானித்தேன். பிரசுரத் தொழிலில் எனக்கு ஆர்வம் அதிகமாதலால், நான் ஒரு அச்சுக்கூடத்தில் சேர்ந்து அங்கே அச்சு எழுத்துக்களைக் கோர்த்து அழகாகவும் கவர்ச்சியாகவும் அமைப்பதைக் கற்

றுக்கொண்டேன். நான் இவ்வழியில் உறுதியாய் விருத்தியடைவேனென்பதை உணருகிறேன்.”

எனது இந்தியச் சகோதரரின் நடப்புகளை நினைத்துப் பார்த்த பொழுது, திரு. கோவிலின் தீர்மானமானது சமயத்திற்குத் தகுந்ததாயிருந்ததென்று எண்ணினேன். உதாரணமாக இஞ்சினீயரிங் பரீட்சையில் தேர்ந்த எ. என்பவரை எடுத்துக்கொள்ளலாம். கடைசியாக அவர் ஏற்றுமதி இறக்குமதி செய்யும் தொழிலில் அமர்கிறார். பி. என்னும் மற்றொருவர் தனது சாஸ்திரீய கலாசாலைப் பட்டங்களுடனும் பெரிய ஆசைகளுடனும் இந்தியாவிற்குத் திரும்பிவந்து, தனது பிரத்தியேகக் கெட்டித்தனத்திற்குத் தகுதியற்ற ஒரு சிறிய உத்தியோகத்தில் ஒருவருக்குக் கீழ் அமர்த்தப்பட்டு என்றும் உழன்று தன் விதியை எண்ணி எண்ணி மனவருத்தம் அடைந்துகொண்டே இருக்கிறார். பெரிய கலாசாலைகளிலும் உயர்ந்த பிரத்தியேகத் தொழில்களிலும் பட்டங்கள் பெற்ற எல்லா வகைத் தொழில்களிலும் கொஞ்சம் கொஞ்சம் பிரவேசித்துள்ள இந்திய மாணவர்கள் பலரை நான் மறுபடியும் எண்ணிப் பார்க்கிறேன். சிலர் தங்கள் முயற்சிகளில் ஜெயமடைவதும் பலர் தங்கள் தொழிலில் லாயக்கற்ற விதமாய் அபஜெயமடைவதும் கண்கூடு.

இம்மாதிரியாக அவர்கள் கலாசாலைப் பட்டங்களையே வேண்டித் திரிகிறார்கள். ஒரு தொழிலில் பிரத்தியேகத்திறமையைப் பற்றியாவது, இந்தியாவிற்கு வேண்டும் குறிப்பான கைத்தொழில், வியாபாரம் முதலியவைகளின் சம்பந்தமான பிரச்னைகளைப் பற்றியாவது அவர்கள் கொஞ்சமும் கவனிப்பதில்லை. தாங்கள் ஒரு கைதேர்ந்த சரியான தொழிலாளியாகவோ வியாபாரியாகவோ வருவது அவர்களுக்குப் பிடித்தமில்லை. ஐரோப்பியரின் அல்லது அமெரிக்கரின் திறமையை அடைந்து, அவர்களுடைய முறைகளைப் படிப்பதால், அப்பேர்பட்ட வேலைக்குப் புதிய அபிவிருத்திக்குரிய சக்தியையோ அல்லது புதிய சாஸ்திரீயத்தையோ அவர்கள் கொண்டுபோகக் கூடும் என்றும் அறிய அவர்கள் முற்றிலும்



தவறிவிட்டார்கள். தங்களைப் பெரிய இரும்புப் பாலம் சட்டுபவர்களாகவோ, தண்டவாளங்களை இணைக்கிறவர்களாகவோ, பெரிய கட்டிடங்களைக் கட்டுபவர்களாகவோ பெரிய கைத்தொழில் சாலைகளுக்கும் பெரிய கட்டிடங்களுக்கும் தலைமை வகித்து நடத்துபவர்களாகவோ அமெரிக்கர்கள் அல்லது ஐரோப்பியர்கள் நினைத்துக் கொள்ளப் பிரியப்படுகிறார்கள். சர்வ கலாசாலைகளிலிருந்து பட்டம் பெற்ற மிகச் சில ரசாயன சாஸ்திரிகளும் இஞ்சினீயர்களும் ஐக்கிய மாகாணங்களில் தங்களுடைய தொழிலில வெற்றி பெறுகிறார்கள் என்பது உண்மையான விஷயமாகும். வைத்தியர்களும் பல் வைத்தியர்களும் தொழிலாய் வைத்து நடத்துகிறதால், அவர்களுக்கு நல்ல வருமானம் கிடைககிறது. தற்சமயம் அவர்களும் பெருகிவிட்டார்கள். வேலைக்குத் தேவையுள்ளவர்களைக் காட்டிலும் கலாசாலைகளிலிருந்து பயிற்சி பெற்று வருபவர்கள் அதிகமாகவே யிருக்கிறார்கள்.

## இந்தியாவுக்கு வேண்டுவது கலாசாலைப் பட்டங்கள் அல்ல

நமது வாலிபருக்கு (கோவிலுக்கு) கலாசாலைப் பட்டம் பெறுவதில் இருந்த அவா குறைந்துவிட்டது படிப்பதிலும் அச்சுக் கோர்ப்பதிலும் பிரசுரம் செய்வதிலும் தன் சக்தி பூராவும் காட்ட முடியுமென்று இக தொழிலிலேயே இறங்கினார். மற்றும் ஐக்கிய மாகாணங்களில் அச்சடிக்கும் சில தனிமையான அரிய கவர்ச்சியுள்ள முறைகளை இந்தியாவில் பரவ வைக்கலாம் என்றும் நம்பினார்.

ஹரி கோவில் தற்காலப் புதிய முறைப்படி யமைந்த ஓர் அச்சுக்கூடத்தில் வேலைக்கமர்ந்து, அச்சுப் பதிப்பதையும் கற்றுக்கொண்டதோடு, புதிய நவீன அச்சுச் சாலையிலிருக்கும் நானாவித இலாக்காவில் இருக்கும் விஷயங்களையும் தெரிந்துகொண்டார். அவர் புதிதாக வேலை பழகுவதற்காக அமர்த்தப்பட்டதால், தன் ஜீவனத்திற்கே சம்பளம் போதவில்லை.

அதனால் சிறிது அதிகப் பணம் சம்பாதிப்பதற்காகச் சாயந்திரங்களில் தெருக்களின் மூலைகளில் பிரசங்கம் செய்யவும், இந்தியாவைப்பற்றித் துண்டுப் பிரசுரங்கள் விற்கவும் தீர்மானித்தார். பிறகு மற்ற இந்துக்களுடன் அவர் ஒரு சாதாரணப் பிரசங்கியாகி, அக்காலத்தில் அதி மும்முரமாக இருந்த விஷயமான

மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தைப்பற்றி நியூயார்க் (New York) நகரத்தில் கொலம்பஸ் சர்க்கிள் (Columbus Circle) என்ற விடத்திலும் முக்கியமான நகர சதுக்கங்களிலும் (City Squares) பேசினார். பார்ப்பதற்கு அதிசயமாகத் தோன்றும் இவ்வாலிபரின் பேச்சைக் கேட்க ஏராளமாக ஜனங்கள் வந்து சேர்ந்தனர். இம்மாதிரி வெளிப் பிரசங்கங்களில் கோவில் அநேக சிநேகிதர்களைச் சம்பாதித்துக் கொண்டார். இச் சிநேகிதர்கள் அவரை வாலிப சித்திரிகர்களின் கூட்டத்திற்குப் பேசும்படி அழைத்ததோடு, படித்தறிந்த சங்கங்களுக்கும் அறிமுகக் கடிதம் கொடுத்தார்கள்.

## வாழ்க்கைக்கு வளர்ச்சி

அமெரிக்காவிலேயே படங்கள் எழுதுவதில் மகா வல்லவர்களில் ஒருவரான ஆல்பர்ட் ஸ்டேர்னர் என்பவர் திரு கோவிலின் உருவத்தினால் கவர்ச்சி யடையப்பட்டு அவர் உருவத்தைப்போல் வரைவதற்கு அவரை இருக்கும்படி கேட்டுக்கொண்டார். அவர் சம்மதிக்க அவரின் உருவத்தின் அளவில் (Life size) மிக்க அழகாக வரைந்து மற்றப் படங்களுடன் நியூயார்க் பிலடெல்பியா, வாஷிங்டன் முதலிய மற்ற முக்கிய நகரங்களில் ஏற்படுத்தி உள்ள சிறந்த சித்திரக் கூடங்களில காக்ஷிகளுக்காக வைத்திருக்கும படங்களுடன் வைத்தார். இதனால் திரு. கோவிலுக்கு அநேக அமெரிக்கச் சிநேகிதர்கள் உண்டானார்கள். அவர்களில் சிலர் இந்தியாவின் ஆத்மார்த்தமான விஷயங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள மிகவும் ஆவலுள்ளவர்களானார்கள். சிலர் அவரை இந்தியாவின் விஷயங்களைப் பரப்புவதற்காக ஒரு பத்திரிகையை ஆரம்பிக்கும்படி தூண்டினார்கள். அவர்களின் ஐக்கியத்தினால் அநேக அனுகூலமான காரியக் கூட்டங்களை ஏற்படுத்திக் கொஞ்சப் பணம் வருவித்து, கோவிலின் இஷ்டப்படி செய்யக் கொடுத்தார்கள். "சார்ட்டர் டே ஈவினிங் போஸ்டு" (Saturday Evening Post) என்ற அமெரிக்கப் பத்திரிகையின் ஸ்தாபனத்தை ஸ்தாபிக்க வரும், அச்சு வேலையில் தலை சிறந்தவர்களில் ஒருவரான பெஞ்ஜமின் பிராங்க்லின் போலவே இவரும் 30 டாலரில் (அப்பொழுது ஏறக்குறைய ரூ. 100) ஒரு பழைய அச்சியந்திரம் வாங்கி, தானாகவே பழுது பார்த்து இராத்திரியில் வெகுநேரம் வரை அச்சடித்துப் பரீட்சை பார்ப்பார்.



## 'ஓரியன்ட்' (Orient) என்ற பத்திரிகையின் தோற்றம்

இவ்விதமாக 'ஓரியன்ட் மேகஜின்' என்ற பத்திரிகையின் முதல் பிரசுரத்தை வெளியாக்கினார். அது பத்திரிகைகளாலும் பொது ஜனங்களினாலும் அதிகமாக ஏற்றுக்கொள்ளப் பட்டதை யறிந்து மிகவும் சந்தோஷப்பட்டார். பத்திரிகை மிக்க வேலைப்பாடுள்ளதாகவும் சிறப்பான சமாச்சாரங்களோடும் பக்கங்களெல்லால் உயரிய நோக்கங்களோடும் பிரசுரிக்கப்பட்டிருந்ததால், எல்லா ஜனங்களாலும் புகழப்பட்டது. அமெரிக்க பத்திரிகைகளுக்குக் குறைச்சலாயிருக்கும் கீழ் நாட்டின் மேன்மையான நோக்கங்களைப் பரப்பும் நோக்கங்களை வெளியிடுவதில் இது ஒரு பத்திரிகையாயிருந்தபடியால், கீழ் நாட்டைப் பற்றியும் இந்தியாவைப் பற்றியும் உண்மையான விஷயங்களைப் பரப்புகிற பத்திரிகையொன்று இல்லாக் குறையை 'ஓரியன்ட்' பத்திரிகை நிவர்த்தி செய்து ஜனங்களுக்குத் திருப்தியை உண்டுபண்ணிற்று. கீனாடுகளின்—முக்கியமாக இந்தியாவின் உயர்ந்த வாழ்க்கையும் எண்ணங்களும் மேனாட்டாரின் வாழ்க்கைக்கு உதவும் என்று திரு. கோவில் எண்ணினார். அவரின் அந்தரங்க எண்ணமானது இந்தியாவின் விலைமதிப்பில்லா தத்துவ சாஸ்திரங்களின் நுண்மாண் கலைகளின் அழகையும் அதன் கருத்துக்களின் மேன்மையையும் அதன் பழக்க வழக்க உணர்வையும் மேனாடுகளில் பரப்பவேண்டுமென்பதே. திரு கோவிலுடைய வேலைகளைப் புகழ்ந்து அவருடைய முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கின்ற உலகத்திலுள்ள எல்லாப் பிரசித்திபெற்ற விமர்சகர்களின் கவனத்தையும் 'ஓரியன்டல்' பத்திரிகை கவர்ச்சித்தது.

## பெரும் புகழடைதல்

அமெரிக்காவில் திரு. கோவிலின் செயல்களைப்பற்றி ரவீந்திரநாத் தாகூர் சொல்லுகிறார். "நான் எவ்வித நோக்கங்களையும் எண்ணங்களையும் மனத்திற்கொண்டு அதற்காக சலிக்காமல் வேலை செய்கிறேனோ, அதே நோக்கங்களோடு நீங்களும் பாடுபடுவதைக் கண்டு நான் சந்தோஷமடைகிறேன்." பிரான்சுப் பண்டிதரான ரோமேய்ன்ரோலேண்டு "உங்களைப்போலவே நானும் கீனாட்டுச் சிந்திப்பவர்களிடம் அதிக அன்பும் ஆழ்ந்த வியப்பும் கொண்டுள்ளவனாதலால், உங்களோடும் உங்கள் பத்திரிகையோடும் தொடர்பு வைத்துக்கொள்ள மிகவும் பிரியப்படுகிறேன்" என்று எழுதுகிறார். மிஸ்ஸிஸ் சிமியோன் போர்டு, மிஸ் எவான்ஜ்ஜலின் ஜான்சன்,

(தற்போது மிஸ்ஸிஸ் லேயபால்டு ஸ்டாக்கோ வாஸ்கி) மிஸ்ஸிஸ் வில்லியர்டு ஸ்ட்ரெயிட் என்ற செல்வாக்குள்ள சில அமெரிக்க மாதர்கள் நமது இந்தியரின் விஷயத்தில் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டு பத்திரிகையின் முன்னேற்றத்தைக் கருதி ஏராளமாக அச்சடிக்கப்பட்டு அனுப்புவதற்கு அதிக உதவி செய்தனர்.

இம்மாதிரியாக திரு. கோவில் முழுக் காரியங்களையும் தான் மட்டும் ஒருவராகவே செய்துவந்தார். பலர் புகழ்ந்ததாலும் உற்சாகப்படுத்தினதாலும் இவருக்கு இன்னும் அதிக ஊக்கம் உண்டாயிற்று. சிறிது நாட்களுக்கு முன் திரு. கோவில் இந்தியாவிற்குப் புறப்படும் பொழுது, நியூயார்க் நகரத்தில் கிறிஸ்தவ தேவாலயத்தின் மத போதகரும் அமெரிக்காவில முக்கியமானவர்களில் ஒருவருமான சங்கைக்குரிய ஜான் ஹேயன்ஸ் ஹோம்ஸ் என்பவர் (மகாத்மாவை அமெரிக்காவில் மகா அதிகமாகப்புகழ்ந்து பிரசங்கித்தவர்) கீழ்க்கண்டவாறு பிரிவு உபசாரங்கள் செய்தார். ஒருவரையும் அமெரிக்காவில் அறியாத வாலிபராக "திரு. கோவில் அமெரிக்காவிற்கு வந்தார். இப்பொழுது திரும்பிச் செல்லும் பொழுது, ஏராளமான சிநேகிதர்களையும், அருமையாகப் பாடுபட்டு நிலைநிறுத்திய காரியத்தையும் விட்டுச் செல்கின்றார். அவர் வரும்பொழுது, கீழ் தேசங்களின் கொடைகளுடன் மேனாடுகளுக்கு வந்தார். மேனாட்டாரின் அன்பையும், ஒரு பெரிய நாகரீகத்திலிருந்து இன்னொரு நாகரீகத்திற்கு ஆத்ம சுத்தியுடன் மட்டுமே அடையக்கூடியதாகிய பரிசிலையும் அவர் போகும் பொழுது தமது கைகளில் ஏந்திக்கொண்டு செல்கிறார்."

அவர் திரும்பியதிலிருந்து இந்தியாவினுடையவும் ஆசியாவினுடையவும் செய்தியை உலகத்திற்கு வியாக்கியானம் செய்யவே திரு. ஹரி கோவில் தன் முயற்சிகள் அனைத்தையும் செலுத்திக் கொண்டிருக்கிறார்.

---

குறிப்பு:—

"காஸ்மாபாலிட்டன்" என்ற பத்திரிகையிலிருந்து "பாரதி"க்காக மொழி பெயர்க்கப்பட்டது.

19514


## உங்களுக்கோர் நல்ல சந்தர்ப்பம்!

...ரம் விரும்புவது எல்லாவற்றிலும் இன்பந்தானே?
இதற்கேன் செய்வது?

...நாம் கையாடும் பொருட்கள் அழகாயிருந்தால் ...ய்து எண்ணம் பூர்த்தியாவதில் சிறிதும் சந்தேகமில்லை. அதிலும், அடிக்கடி மிக மிக அவஸ்யமாக யாவருக்கும் வேண்டிய... லெட்டர் ஹெட்டிங்ஸ், விஸிட்டிங் கார்டுகள், விலாசங்..., வரவேற்பு-விருந்து-விவாஹம் முதலியவை... அழைப்புப் பத்திரிகைகள், ரசீதுகள், உண்டியல்கள், ...பாரங்கள், குறிப்பு பேரேடு முதலிய தோல் ...ட் புத்தகங்கள் அல்லவா?

இவைகள் நேர்த்தியாகவும், தேவையான பலவித வர்ணத்திலும் அமைந்திருந்தால் எவ்வளவு சந்தோஷமாயிருக்கும்!

உடனே உங்கள் தேவைக்கு, மாதிரியுடன்
அட்வான்ஸ்-தொகையும் அனுப்புக.

விலாசம்:— **மானேஜர்,**
ஆனந்தா பிரஸ், உத்தமபாளையம். (மதுரை ஜில்லா.)

## Silk Pitamber Coy., Benares City.

சுத்தமான பட்டுகள்! சகாயமான விலை!!

காசிப் பட்டுச் சேலைகள்:—12. 16. அல்லது 18 முழம் நீளம் $2\frac{1}{2}$ முழம் அகலம் அழகான ஜரிகை கரைகளும் முகதலையும் போட்டப்பட்டது. சேலை 1-க்கு விலை ரூ. 20 முதல் ரூ. 25. 30. 50. 75 வரை.

சாவித்திரி பட்டுச் சேலைகள்:—12. 16. அல்லது 18 முழம் நீளம் $2\frac{1}{2}$ முழம் அகலம் கரைகளும் முகதலையும் ஜரிகையால் செடி, கொடி, பூ வேலைகள் செய்யப்பட்டது சேலை 1-க்கு விலை ரூ. 45 முதல் ரூ. 60. 80. 100 வரை.

இந்தச் சேலைகள் தினந்தோறும் தோய்த்து உடுத்தலாம். உடல் மிகவும் ...யமாக இருக்கும். எந்த நிறத்திலும் கிடைக்கும்.

உல்லன் போர்வைகள்:—6 முழம் நீளம் 3 முழம் அகலம் கெட்டியும் நைசுமானது. 1-நிர். 1-க்கு ரூ. 12. 2-நிர். ரூ. 10. 3-நிர். ரூ. 8.

காசி வைரவர் கயிறு:-1-நிர் 100-க்கு ரூ. 3. 2-நிர். ரூ. $2\frac{1}{2}$. 3-நிர். ரூ. 2.

மற்றும் சகலவிதமான பட்டுச் சரக்குகளும் பித்தளைச் சாமான்களும் உத்திராக்ஷ மாலைகள் ஏறுமுகமணிகள் கண்டிகள் முதலியன மிகவும் சாசமான விலைக்கு அனுப்பிக் கொடுப்போம்.

உடனே எழுதுங்கள். விலாசம்!!
மானேஜர், பட்டு பீதாம்பரக் கம்பெனி, காசி.

# "பாரதி"

## ஒரு தேசிய மாதப் பத்திரிகை.

சுதந்திரம் பொங்கி சமத்வம் ததும்பி சகோதரத்வம் ஜ்வலித்து
குறைந்த சந்தாவில் நிறைந்த விஷயங்களுடன் உயர்ந்த
மாஸிகையாய் மத பேதமற்று ஜாதி பேதமற்றுக்
கட்சி பேதமற்று இந்தியரனைவரும் பாரத
மாதாவின் மக்களென்ற மேலான
கொள்கையுடன் தேசாபி
விருத்தியை முக்கிய
முதல் நோக்கமாகக்
கொண்டு

தேச விடுதலைக்காக உழைக்கும்
தேசிய மணங் கமழும்

**'பாரதி'க்கு**

உடனே சந்தாதாரர்களாய்ச் சேருங்கள். உங்கள்
நண்பர்களுக்கும் இதனைப்பற்றி அறிமுகம்
செய்து சந்தாதாரர்களாய்ச் சேர்த்துக்
கொடுங்கள்.

**சந்தா விபரம்.**

உள்நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ 2-0-0
வெளி நாடுகளுக்கு ,, ரூ 2-8-0
அல்லது 4 ஷில்லிங்.

தனிப் (சாம்பிள் காப்பி) பிரதி விலை அணா 4. வேண்டுவோர்
ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

விலாசம் :—

பொறுப்பாளர்,
"பாரதி" ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

Edited and Published by R. NARAYANASWAMI.
Printed at ANANDA PRESS, Uthampalayam, Madura Dt.